www.tamilarangam.net

# எரிமலை

சிறப்பிதழ்

நவம்பர் 2000




## தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர்நாள் உரை.



## ஓராண்டு நிறைவில் ஓயாத அலைகள் -3உம் தொடர்ந்து செல்லும் விளைவுகளும்!




சிறப்பு இணைப்பாக, ஓயாத அலைகள்-3 நிழற்படத் தொகுப்பு

ஓயாத அலைகள்-3இன் களமுனைக் காட்சிகளின் 98 நிழற்படங்கள் கொண்ட ஓர் வரலாற்று ஆவணம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கறைப் பூக்கள்

தமிழகச் செய்தியாளர்கள் தமிழீழத்தின் உண்மைச் செய்திகளை மூடி மறைக்கின்றனர். எரிமலை மட்டுமே அங்கே நடக்கும் சம்பவங்களை உள்ளது உள்ளபடியே எமக்குத் தருகின்ற ஊடகமாக உள்ளது. இங்குள்ள தமிழர்களின் மனதில் தவறான நிகழ்வுகளை பதிவு செய்ய சில தமிழகச் செய்தியாளர்கள் எழுதுகின்றனர். எரிமலையில் ஆதாரத்துடன் வருகின்ற செய்திகள் அவர்களது பிரச்சார மாயையைத் தகர்க்க வல்லவை.

ராசா செல்வம்
கும்பகோணம்
தமிழ்நாடு.

✉ ✉ ✉

ஒக்டோபர் மாத எரிமலை இதழ் கிடைக்கப் பெற்றேன். ஓயாத அலைகள்- 3 சமராடும் வேங்கையை அட்டைப் படமாகக் கொண்டு வெளிவந்திருந்த எரிமலை இதழ் சிறப்புற அமைந்திருந்தது. தேசியத் தலைவரின் உறுதியுரை தமிழீழம் கிட்டும் வரை போராட்டம் தொடரும் என்பதை தெள்ளத் தெளிவாக இயம்புவதாக அமைந்திருந்தது. ஓயாத அலைகள்-4 வீச்சின் தாக்கத்தை ஜெயராஜ் அவர்களின் கட்டுரை செவ்வையாக வெளிப்படுத்தியது. மாவீரர் நாள் வரும் நவம்பர் மாத எரிமலையை மேலும் பல சிறம்பம்சங்களுடன் எதிர்பார்க்கிறோம்.

இ.றமேஸ்
பாரிஸ்
பிரான்ஸ்

✉ ✉ ✉

தங்களின் எரிமலை இதழை கடந்த இரண்டு மாதங்களாக முதுபெரும் எழுத்தாளர் திரு. வல்லிக்கண்ணன் அவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்று வாசித்து வருகின்றேன். சமீபத்தில் ஆகஸ்ட் இதழ் எனக்குக் கிடைத்தது. அ. பார்த்தீபனின் கட்டுரை சிறப்பாக இருந்தது. “எனது கணவர் தொழில் முடிந்து வீடு திரும்பும் வழியில் அவரிடம் கள்ளு வாங்கிக் குடித்த படையினர் அவரைப் போகுமாறு கூறிவிட்டு பின்னால் இருந்து சுட்டுக் கொன்றுவிட்டனர்” ஞானதாஸ் மனைவி செல்வராணி கூறியது கண்ணீரை வரவழைத்துவிட்டது. கானம் பாடி, முரண்படும் தீர்வுகள், நிமிர் காலத்தைப் பிரதிபலி, நாளொன்று தேய்ந்து நகரும் ஆகிய கவிதைகள் வீரத்தை விதைக்கும் நன்முத்துக்கள். மரபணுவியலின் புதிய பரிமாணம் பற்றிப் படத்துடன் மிகவும் தெளிவாக அறிந்து கொள்ள முடிந்தது. பின் அட்டையில் புத்தரையும் போருக்கழைத்தது உண்மையின் நிலவரத்தை ஆழமாகப் புலப்படுத்தியிருந்தது.

கலாநிதி எம்.எஸ்.கோவிந்தராஜன்
ஆசிரியர் தாழம்பூ
புதுக்கோட்டை
தமிழ்நாடு

✉ ✉ ✉

எரிமலை ஒவ்வொரு இதழும் புதுப் பொலிவுடன் வளர்ச்சி கண்டு வருவது மகிழ்ச்சி. மேலும் சென்ற இதழில் வெளியாகியிருந்த “எல்லை காக்கும் இல்லங்கள்” தமிழவளின் உயிர்த் தொகுப்பு மிகவும் நெஞ்சைப் பாதித்தது. எமது மண்ணில் தமிழீழ விடுதலைப் போரை முன்னெடுப்பதற்கு இளையவர் முதியவர் என்ற வேறுபாடின்றி அனைவரும் களத்தில் உயிர் கொடுப்பது உன்னதமான நிகழ்வாகும். எனினும் இன்னும் தமிழீழ விடுதலைச் செயற்பாடுகளில் இருந்து அந்நியமாய் நிற்கும் எமது இளைய சந்ததியின் சில அன்பர்கள் இதனைப் படித்தாவது உயிரைத்தான் கட்டாயம் கொடுக்க வேண்டும் என்ற கடப்பாடு இல்லாமல் எமது மக்களினதும் போராளிகளினதும் உயிர் காக்கும் உயர் பணிகளில் ஏதேனும் ஒன்றைச் செய்ய முன்வரவேண்டும். களத்தில் மடிந்த அந்த எல்லைப் படை வீரருக்கு வணக்கம் செலுத்திக் கொண்டு அவரது குடும்பத்தினரைப் போல மண்ணிலுள்ள ஏனைய எல்லைப் படைவீரர்களது குடும்பத்தினரது எதிர்காலத்திற்கு காப்பரணாக விளங்கும் தமிழீழத் தேசிய அரசை பெரும் பலங்கொண்டு மீட்டுக் காக்க உழைப்போம்.

அத்துடன் அர்த்தநாரீயின் ‘எங்கே தவறிழைத்தோம்” என்ற உணர்வுப் பதிவு சில சிந்தனை மாற்றத்தை தூண்டலாம் எனினும் தமிழீழத் தேசியத் தலைவரவர்கள் குறிப்பிட்டது போல “பெண்” பற்றிய பழமைவாதக் கருத்துலகில் ஆண்களில் மாற்றம் ஏற்பட்டாலன்றி இதற்கு உடனடித் தீர்வு கிடைக்காது என்றாலும் ஓர் புத்துணர்வு மிக்க புதிய சிந்தனை கொண்ட சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு இருபாலாரும் ஒன்றித்த புரிந்துணர்வுடன் விடுதலை நோக்கிய செயற்பாடுகளில் இணைந்து நிற்க வேண்டும்.

இவை போன்ற ஆக்கங்கள் ஒரு புறத்தே இராணுவ, அரசியல் ரீதியில் வெற்றி அடையும் அதேவேளை எமது சமூகத்தை உறுதிமிக்க, அறிவாற்றல் மிக்க சமூகமாக உருவாக்க, எம்மத்தியில் சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்திட உதவுகின்றன. இவை தொடர வேண்டும். ஆக்கங்கள் இன்னும் ஆழமாக விடயங்களைத் தொட்டு வந்தால் நன்று.

க.சுடர்ச்செல்வி
பீரென்சே
இத்தாலி

✉ ✉ ✉

எரிமலைக்கு எங்களின் வாழ்த்துக்கள். எமது நண்பர் வாழ்வாங்கி உ.அமரன் மூலம் எரிமலை இதழ் கிடைக்கப் பெற்றோம். நாங்கள் இதுவரை அறிந்திராத செய்திகளையெல்லாம் எரிமலையில் வெளியிட்டு எங்களை வியக்கவைத்து விட்டீர்கள். எரிமலை மாதந்தோறும் மலர்ந்து மணம் பரப்ப எமது நல்வாழ்த்துக்கள்.

தமிழர் அறத்திற்கு பாவாணரும், வள்ளுவருமே தலைமை. தமிழர் வீரத்திற்குத் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்கின்றார். புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக பிரகடனப்படுத்தியுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும், இன்னமும் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்காத இந்திய அரசையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அருவைத் தமிழன்பன்
தமிழர்களம்
அருப்புக்கோட்டை
தமிழ்நாடு




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...

# எரிமலை

நவம்பர் 2000

## கட்டுரை


| | |
|---|---|
| சுதந்திரம் நோக்கி முன்னேறிச் செல்லும் தமிழீழ தேசத்தின் படிக்கற்கள் | பக்கம் - 04 |
| வீரத்தின் விருட்சம் | பக்கம் - 14 |
| சிங்களப் பயங்கரவாதம் ஒன்றின் ஓராண்டு நினைவு. | பக்கம் - 16 |
| அவலங்கள் முடிவிலியா? | பக்கம் - 18 |
| ஓராண்டு நிறைவில் ஓயாத அலைகள்– 3உம் தொடர்ந்து செல்லும் விளைவுகளும்! | பக்கம் - 22 |
| இருள் பிளந்து ஒளி எழுந்த நாளொன்றில் | பக்கம் - 28 |
| திருமலைத் துறைமுகத்தின் பாதுகாப்பை பெரும் கேள்விக்குள்ளாக்கிய தாக்குதல் | பக்கம் - 30 |
| ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டமும் அதன் இலக்கியப் பதிகையும் | பக்கம் - 32 |
| இரட்டைத்தனம்! | பக்கம் - 34 |
| பாராளுமன்ற உறுப்பினருக்கே இதுவெனில்! | பக்கம் - 35 |
| எல்லாத்துக்கும் தமிழீழம் தான்ரா தீர்வு! | பக்கம் - 48 |


## அணையாத தீபங்கள்


| | |
|---|---|
| லெப்.சங்கர் ஈகத்தின் முதல் வித்து | பக்கம் - 40 |


## சிறுகதை


| | |
|---|---|
| கேள்விகள் உருவாகின்றன. – நந்தி | பக்கம் - 42 |


## கவிதை


| | |
|---|---|
| உச்சத்தை நோக்கி - சூரியநிலா | பக்கம் - 20 |
| அலைகள் தொடரும் - நீர்வைக்குமார் | பக்கம் - 24 |
| கிளிமொழி - செந்தோழன் | பக்கம் - 25 |
| சாவரினும் தளரோம் யார்வரினும் பணியோம் வெந்துதணியாத வீரநிலம் - வியாசன் | பக்கம் - 26 |
| தமிழரின் தலைவா நீ வாழி | பக்கம் - 36 |
| வாசலெங்கும் தீப ஒளி - புதுவை இரத்தினதுரை | பக்கம் - 41 |
| கல்லறையில் இருந்து கண்மணி ஒன்று - காண்டீபன் | பக்கம் - 45 |


## தொகுப்பு


| | |
|---|---|
| மாவீரர் நாள்–2000 | பக்கம் - 37 |
| கண்கள் கூறும் வார்த்தைகள் | பக்கம் - 48 |
| நிலவரம் | பக்கம் - 51 |
| மீள்பார்வை ஒக்டோபர் | பக்கம் - 52 |



**12** படுகொலைகளுடன் ஆரம்பித்துள்ள பொ.ஐ.முவின் 2வது பதவிக் காலம்.





**21** தமிழீழத் தேசியத் தலைவர் நோர்வே நாட்டு பிரதிநிதிகள் சந்திப்பு





**38** முழுஅளவில் யுத்தமா? பேச்சுவார்த்தையா? உரத்துப் பேசமுடியாத நிலையில் சந்திரிகா.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வில்லாண்ட பரம்பரையின் விழுதுக்கு பல்லாண்டு பாடுகிறோம்.



"எம் இனத்தின் எழுஞாயிறை" இதயத் தூரிகையால் வண்ணமாக்கியவர் ப.அறவாழி (தமிழ்நாடு)

*தாயாய் எமைக்காக்கும் தலைவா!*
*பகைவருக்கு*
*மாயாவியான மனிதா!*
*வையமெலாம்*
*ஓயாத அலைதன்னை*
*உற்றுணரச் செய்ததினால்*
*சாயாதெம் வீரமெனச் சாற்றியவா!*
*இன்றுனக்குப்*
*பூவாய் மலர்ந்தெழுந்த பிறந்த நாள்.*
*எம்மண்ணின்*
*தேயா நிலவே! நீ தோன்றிய நாள்.*
*காலை வந்த*
*காற்றில் வாழ்த்துரைத்தோம்*
*காதினிலே கேட்டதுவா?*
*ஆற்றல் திருவே!*
*ஆண்டு பல்லாண்டெனவே*
*பூத்திருப்பாய் ஐயா.*
*புலித்தலைவா! நீ வாழ்க.*

**-புதுவை இரத்தினதுரை**

26-11-2000 அன்று 46வது அகவை காணும் எமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

–எரிமலை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பத்தொன்பதாம் ஆண்டு
நவம்பர்
*2000*

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail: erimalai@freesurf.fr

# தலைவாசல்

## தலைவரின் உறுதியுரை

தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர்நாள் உரை உலகளாவிய எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் வெளிவந்த உறுதியான பிரகடனமாக அமைந்துவிட்டது. அமெரிக்க சனாதிபதி வருடாந்தம் தன் மக்களுக்கு ஆற்றும் உரைக்கு நிகரான எதிர்பார்ப்பைக் கொண்டது என வயிற்றெரிச்சலுடன் கொழும்பு சண்டே ரைம்ஸ் ஏட்டினால் விபரிக்கப்பட்ட இவ்வுரையானது உலக நாடுகளின் கரிசனைகளை அங்கீகரித்த அதே வேளை சிங்களப் பேரினவாதத்தின் அரசியல் கபடத்தனங்களுக்கும், இரட்டை வேடங்களுக்கும் வலிமையான சாட்டையடி கொடுத்தது. அதனிலும் மேலாக, யாழ் குடாவை மீட்டேயாவோம் என்ற தெளிவான பிரகடனம் மூலம் தமிழீழத்தின் இறைமை பற்றிய விடயங்களில் விட்டுக்கொடுப்புகளுக்கு இடமேயில்லை என்பதை தேசியத் தலைவர் பிரபாகரன் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

நோர்வேயின் இணக்க முயற்சிகள், அதனை ஆதரித்து பிரித்தானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் கொழும்பில் வெளியிட்ட அறிவிப்புக்கள் என்பனவற்றின் தாக்கத்தினுள் அகப்பட்டுக்கொண்டுள்ள சிங்களப் பேரினவாதத்தை நோக்கி, அரசியல் - இராஜதந்திர முனைகளில் தலைவரின் வார்த்தைகள் கணைகளாகப் பாய்ந்துள்ளன. தமிழீழத்திற்கும் - சிறீலங்காவிற்கும் இடையேயுள்ள அரசியல் - இராணுவச் சமநிலையை மேற்குலகு ஒப்புக்கொள்ள ஆரம்பித்துள்ள வேளையில் தமிழீழ மக்களுக்கு தமது மண் மீதுள்ள இறைமையை தலைவர் வலிமையாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

சந்திரிகா அரசு தமிழீழத் தேசியத் தலைவரின் பிரகடனத்திற்குப் பதிலளிக்குமாறு நிர்ப்பந்தப்படுத்தப்படும் வரலாற்றுச் சூழ்நிலையில் அகப்பட்டுள்ளது. தமிழர்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை மேற்குலகு ஏற்றுக்கொள்கின்றது என்பதை பிரித்தானிய அமைச்சர் கொழும்பில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், நிபந்தனைகள் அற்ற பேச்சுக்கு நாங்கள் தயார் என அறிவித்ததன் மூலம் தமிழீழத்தின் நியாயமான அணுகுமுறையை தேசியத் தலைவர் தெளிவுபடுத்தியுள்ளார். அதேவேளை, சிங்களத்தின் இராணுவ ஒடுக்குமுறை - பொருளாதாரத் தடைகள் என்பனவற்றை, பேச்சுக்களை அர்த்தமற்றதாக்கும் ஒரு கொடிய நடவடிக்கை என வர்ணித்ததன் மூலம், உலக நாடுகளின் கவனத்தையும் உடன்பாட்டையும் மிகத்தெளிவான திசையில் விவாதிக்குமாறு கோரியுள்ளார். பேச்சுக்களுக்காக போர்நிறுத்தம் தேவை என்ற தலைவரின் நிலைப்பாடானது சர்வதேச முனையில் பலத்த ஆதரவைப் பெற்றுவருகின்றது என்பதை பல மட்டங்களின் ஊடாகவும் அறியமுடிகின்றது. போரே தீர்வு என்ற கோசத்துடன் பதவியைக் காப்பாற்றிய போர்த்தேவதை சந்திரிகாவுக்கும் - அவரது வெளிவிவகார சேவகன் கதிர்காமருக்கும் இது ஒரு இக்கட்டான நிலை. இரட்டை நாக்குகளுடன் பேசி புலிகளை உலகிலிருந்து தனிமைப்படுத்தலாம் என உழைத்த சந்திரிகா - கதிர்காமர் கும்பலை எமது தலைவர் பிரபாகரன் தனிமைப்படுத்தியுள்ளார். புலிகளை அழிக்கும் போருக்கு அரசியல் ஆதரவைத் தர இப்போது எந்த நாடுகளும் பகிரங்கமாக தயாராகவில்லை. நோர்வேயின் மத்தியத்துவத்தில் பேசுங்கள் என்பதே உலகின் பொதுக்குரலாகிவிட்டது. சிங்களத்தின் இறைமை - உள்விவகாரம் என்ற சட்டவியாக்கியானங்களையும் தாண்டி தமிழர்களின் நியாயபூர்வமான பிரச்சனைக்கு நியாயபூர்வமான இணக்கம் தேவை என்ற சர்வதேசக் கரிசனையை சந்திரிகா நிஜமாகவே இப்போது எதிர்கொள்ள வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர் கூறியது போல் சிங்களம் அடக்குமுறையை கைவிடும் என எவரும் நம்பவில்லை. ஆனால், அடக்குமுறையை புலிகளும் - தமிழ் மக்களும் சகிக்கமாட்டார்கள் என்பது மட்டும் தேசியத் தலைவரின் மாவீரர்நாள் உரையில் விண்முட்ட ஒலித்த செய்தியாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுதந்திரம் நோக்கி முன் செல்லும் தமிழீழ தே — படிக்




தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று பெரும் திருப்புமுனை ஒன்றில் நிற்கின்றது. மண் மீட்பிற்கான வழிகள் தெளிவாகவே திறக்கப்பட்டுவிட்டது. எமது தேசம் விடுதலை நோக்கி விரைந்து முன்னேறும் என்ற உத்தரவாதம் மக்களுக்குத் தெளிவாக வழங்கப்பட்டுள்ளது.

ஓயாத அலைகள் - 3இன் வெற்றி, அறிவிப்புக்களுக்கான அடிப்படையாகும். அதாவது சிங்களப் பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முறியடித்து, தமிழீழதேசம் மீட்கப்படும் என்பதை இந் நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகள் உறுதி செய்துள்ளனர். வேறு விதமாகக் கூறுவதானால் தமிழ் மக்கள் விடுதலை நோக்கி விரைந்து முன்னேறிக் கொண்டிருக்கின்றனர் எனக்கூறுதல்கூடத் தவறாகமாட்டாது.

இத்தீர்க்கமான கட்டம் இலகுவாக அடையப்பட்டதல்ல. இதற்காகத் தேசியத் தலைவர் பிரபாகரனும் தளபதிகளும், போராளிகளும் தமது சக்திக்கு மீறியதாகவே உழைத்துள்ளனர். இதில் இரவு பகல் பாராத கடும்உழைப்பு, பெரும் அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள் எனப் பல அம்சங்கள் உண்டு.

இதற்கெனப்பல தளபதிகள், போராளிகள் செய்துள்ள அர்ப்பணிப்புக்கள், தியாகங்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட பின்னடைவுகள், தாமதங்கள் என்பனவற்றை எல்லாம் தாண்டிப் போராட்டத்தை முன்நோக்கி நகர்த்திச்செல்லக் காரணமாய் இருந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஓரிரு சமயங்களில் மீட்சி பெறவே முடியாத கட்டத்தை அடைந்து விட்டதாக இராணுவ ஆய்வாளர்கள் பலரும், அரசியல் நோக்கர்கள் பலரும், ஆட்சியாளர்கள் சிலரும் கருதியதும் உண்டு. அவற்றில் குறிப்பாக இந்திய இராணுவத்தினருடன் புலிகள் மோதலில் ஈடுபட்டபோதும், ரிவிரெச நடவடிக்கை காரணமாக யாழ். குடாநாட்டை விட்டு விடுதலைப் புலிகள் வெளியேறிய போதும் இவ்வாறு கூறப்பட்டது.

ஆனால், விடுதலைப் புலிகள் இப்பெரும் சவால்களையும் எதிர்கொண்டு மீண்டெழுந்தார்கள். இது பலருக்கு ஆச்சரியம் அளிப்பதாகவே இருந்தது. விடுதலைப் புலிகள் இயக்கம் வேரோடு அறுபடப் போகின்றது என ஆய்வாளர்கள் எதிர்வு கூறிக் கொண்டிருக்கையில் விடுதலைப் புலிகளோ தாம் அழிக்க முடியாத சக்தி என்பதை நிருபித்தனர். இது எவ்வாறு புலிகளால் இவை சாத்தியமானது எனப் பலருக்கு அதிர்ச்சிகூட ஏற்பட்டது.

அங்குதான், தமிழீழத் தேசியத் தலைவரின் ஆற்றலும், திறனும், மதிநுட்பமும் வெளிப்படுத்தப்பட்டது. தேசியத் தலைவர் பிரபாகரன் எச்சவாலையும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் பொருந்தியவர் மட்டும் என்பதல்ல, எச்சவாலையும் எதிர்த்து முறியடிக்கும் வல்லமை கொண்டவராகும் என்பதை நிருபித்தார். அதாவது பெரும் அழுத்தங்களுக்கு அவர் முகம் கொடுக்கத் தயாரானபோதும் பின்னர் அவற்றை முறியடித்தும் நிரூபித்துக்காட்டினார்.

இதேசமயம் தளபதிகளினதும் போராளிகளினதும் தியாக உணர்வும், அர்ப்பணிப்பும், மனவுறுதியும், தேசியத் தலைவரின் சிந்தனையையும், நெறிப்படுத்தலையும் வெற்றிகரமான பாதைக்கு இட்டுச் செல்வ



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ...னேறிச் ...த்தின் ...ற்கள்!



தற்கு அடிப்படையாக இருந்தன. இங்குதான் தமிழீழத்திற்காக தம் இன்னுயிர் ஈய்ந்த மாவீரர்களின் தியாகமும், அர்ப்பணிப்பும் வெளிவருகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகின் ஏனைய விடுதலைப் போராட்டங்களில் இருந்து பெரியளவில் வேறுபடுவது போராளிகளின் அர்ப்பணிப்புச் சம்பந்தமான விடயத்திலேயே ஆகும். ஏனெனில், விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்புக்கள் உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனித்துவமானவை. அதிலும் குறிப்பாக எதிரியின் கைகளில் சிக்கிக் கொள்ளக்கூடாது என்பதற்காக "சயனைட்" உட்கொண்டு வீரச்சாவடைவதில் இருந்து கரும்புலித் தாக்குதல்களில் தம்முயிரை ஈகம் செய்வதுவரையில் முதன்மையானவையாகவும் வேறுபாடானவையாகவும் உள்ளன.

புலிகளின் இச் செயற்பாடுகள், விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரிட்டவர்களினாலேயே பாராட்டப்பட்டும் உள்ளது. குறிப்பாக இந்திய இராணுவத்தினர் புலிகளின் அர்ப்பணிப்புக் குறித்து ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்திருந்தார்கள். இதனைச் சில இந்தியத் தளபதிகள் வெளிப்படுத்தியும் இருந்தனர்.

இந்தவகைப் பாராட்டுக்கள் பொதுவாக விடுதலைப் புலிகளுக்கே உரியதெனினும், இவற்றுள் பெரும்பாலானவை மாவீரர்களுக்கே உரியதாகும். ஏனெனில் இச்சாதனைகள், பாராட்டுக்கள் என்பனவற்றிற்காக அவர்கள் செய்துள்ள அர்ப்பணிப்பு, ஈகம் என்பன மீளப்பெற முடியாத அவர்களது உயிர்களாகவே இருந்துள்ளன.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் மகத்தான சாதனைகள் பலவற்றை ஈட்டியுள்ளார்கள். உலக இராணுவ வரலாற்றில் இடம்பெறத்தக்க வகையில் இச் சாதனைகள் மகத்தானவையாகவுள்ளன. இதே சமயம் இராணுவத் தளபதிகள், ஆய்வாளர்கள் என்போருக்கு அவை அதிர்ச்சிகளையும் ஆச்சரியத்தையும் கொடுப்பவையாகவும் இருந்துள்ளன.

போரிடுதலில் உயிர்துறத்தல் என்பது எதிர்பார்க்கத்தக்க தொன்றுதான். ஆனால் போர்க்களம் செல்பவர்கள் அனைவருமே இறப்பதும் இல்லை. அத்தோடு பெரும்பாலானோர் வெற்றி பெறுவோம் மீண்டும் வருவோம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே செல்கின்றனர். ஆனால் விடுதலைப் புலிகளோ வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடனும், உறுதியுடனும் மட்டுமே செல்கின்றனர். ஏனெனில் அவர்கள் வெற்றிக்காக எத்தகைய அர்ப்பணிப்பையும் செய்வதற்கும் தயாராகவே களம் செல்கின்றனர்.

அதன் காரணமாக மிக மகத்தான சாதனைகளை விடுதலைப் புலிகளினால் சாதிக்கமுடிகின்றது. அத்தோடு இவர்கள் தமது வெற்றியினை மக்களுக்கே உரித்தாக்கிக் கொள்கின்றனர். அதற்காக மக்களிடம் இருந்து எதையுமே அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

அவ்வாறு இல்லாதுவிடில், உயிராயுதமான கரும்புலிகள் உருவாகியிருக்க மாட்டார்கள். அதாவது போராடுவதும், வெற்றி பெற்றுக் கொடுப்பதுமே எமது கடமை. அவற்றின் பலன் - அறுவடை என்பன மக்களுக்கே உரியது என்பதே அவர்களின் முடிவாகும்.

அவ்வாறான ஒரு சிந்தனை, உணர்வு என்பன அம்மாவீரர்களுக்கு இல்லாதுவிடில் களத்தில் அவர்கள் உயிர்விடத் தயாராகி இருந்திருக்கமாட்டார்கள். இராணுவ வரலாறு வியக்கும் சாதனைகள் நிகழ்த்தப் பட்டிருக்கமாட்டாது. தமிழர் தேசம் விடுதலை நோக்கி வீறுநடை போடமுடியாது.

இந்த வகையில் தமிழர் தேசத்தின் விடுதலைப் பயணத்தின் ஆணி வேர்களாக இருப்பவர்கள் இம்மாவீரர்களே ஆகும். அவர்களின் தன்னலமற்ற தியாகமே இன்று தமிழினம் தலை நிமிரவும், சுதந்திர வாழ்வு நோக்கி முன்னேறிச் செல்லவும் படிக்கற்களாகவுள்ளது.

**-ஜெயராஜ்**






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 2000ம் ஆண்டு த
# முன்னிட்டு தமிழீழ
# மேதகு வே.பிர
# ஆற்றி

**தலைமைச் செயலகம்**
**தமிழீழ விடுதலைப் புலிகள்**
**தமிழீழம்**
**27.11.2000**

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே,

எமது மண்ணிற்காக விடுதலை என்ற உன்னத விழுமியத்திற்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த எம் உயிர் வீரர்களை நாம் நினைவு கொள்ளும் இன்றைய நாள் ஒரு புனித நாள். இந்த நன்னாளில் ஆன்மக் கதவுகளை அப் புனிதர்களுக்காக திறந்து கொள்வோம்.

நீங்காத நினைவுகளாக எம்மோடு ஒன்றிக் கலந்துவிட்ட உணர்வுகளாக, காலத்தால் சாகாது என்றும் எம்முள் உயிர்வாழும் இம் மாவீரர்களை இன்று கௌரவிப்பதில் தமிழீழ தேசம் பெருமை கொள்கிறது.

மாவீரர் நினைவாக ஈகச்சுடரை ஏற்றும்பொழுது அந்த எரியும் சுடரில் அந்தத் தீ நாக்குகளின் அபூர்வ நடனத்தில், அந்த அற்புதமான படிமத்தில், நான் ஒரு தரிசனத்தைக் காண்கிறேன்.

அக்கினியாக பிரகாசித்தபடி ஆயிரமாயிரம் மனித தீபங்கள், நெருப்பு நதிபோல ஒளிகாட்டி, வழிகாட்டிச் செல்லும் ஒரு அதிசயக்காட்சி திடீரென மனத்திரையில் தோன்றி மறையும்.

மாவீரர்களே எமது சுதந்திரப் பயணத்தின் வழிகாட்டிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றுபவை. அவர்களே எமக்கு ஒளிகாட்டிகள்.

மாவீரர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி அவர்களை நினைவுகொள்ளும் இந்தப் புனித நாளில், நாமும் எமது இதயங்களில் இலட்சிய நெருப்பை மூட்டிக்கொள்வோம். எமது தேசத்தின் சுதந்திரத்திற்காக அந்த உன்னத இலட்சியத்தை அடைவதற்காக எத்தகைய இடர்களையும், எத்தகைய துன்பங்களையும், எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்போமென நாம் எமக்குள் வீரசபதம் செய்துகொள்வோம்.

எனது அன்பான மக்களே,

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாமொரு முக்கிய திருப்புமுனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனைகளை நிலைநாட்டி எமது தேசத்தின் கலாச்சாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன.

யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்து வைத்திருந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலிப்படை வீரர்களால் மீட்கப்பட்டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும். தகர்க்க முடியாத இரும்புக் கோட்டையாக இருபதினாயிரம் இராணுவத்தினருடன் தொடர்வலய முகாம்களால் சூழப்பட்டு பரந்தனில் இருந்து பளை வரையும் கரையோரத் தளங்களோடும் 80 சதுர மைல் நிலப்பரப்பைக் கொண்ட ஆனையிறவுப் பெருந்தளம் எம்மால் வெற்றிகொள்ளப்பட்ட நிகழ்வானது உலகப் போரியல் வரலாற்றில் பதியப்பட்ட மகத்தான இராணுவச் சாதனையாகும். இப்புகழீட்டிய வரலாற்றுச் சமரில் புலிகள் வரித்த நுட்பமான போர் வியூகங்களும் திகைப்பூட்டும் தரை இறக்கங்களும் வீரம்செறிந்த தாக்குதல்களும் - தந்திரோபாயங்களும் போரியற்கலையில் எமது விடுதலை இயக்கத்தின் அபாரமான வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் உலகத்திற்கு எடுத்துக்காட்டியது. வெளிநாட்டில் பயிற்சி பெற்று உள்நாட்டில் களமாடி முதிர்ச்சிபெற்ற சிங்களத்தின் சிறப்புப் படையணிகள் இச்சமரில் சிதைக்கப்பட்டன. இந்நிகழ்வானது சிங்களத்திற்கு இராணுவ பொருளாதார ரீதியில் முண்டுகொடுத்து நிற்கும் உலக வல்லரசுகளை திகைப்பில் ஆழ்த்தியது.



ஆனையிறவுப் பெருந்தளத்தை வெற்றிகொண்டு தென்மராட்சியிலும் வடமராட்சி கிழக்கிலும் பெருமளவு நிலங்களை மீட்டெடுத்த அதேவேகத்தோடு கிழக்கு அரியாலை வழியாக எமது படையணி ஒன்று யாழ்ப்பாணத்தின் நகராட்சி எல்லைக்குள் பிரவேசித்தது. அதேசமயம் எமது மற்றைய படையணிகள் தனங்கிளப்பு வழியாக நாவற்குழி, கைதடி,



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ழ மாவீரர் நாளை
# தேசியத் தலைவர்
# கரன் அவர்கள்
# உரை



மட்டுவில் பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தன. யாழ்ப்பாண நகரம் அரைப்பிறை வியூகத்தில் சுற்றிவளைக்கப்பட்டது. இதனையடுத்து, ஒரேயொரு ஆகாய விநியோக மார்க்கமாக விளங்கிய பலாலிப் பெரும்தளம் எமது பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகியது. மின்னல் வேகத்தில் நிகழ்ந்த இத்திடீர்த் திருப்பங்களின் விளைவாக, சந்திரிகா அரசு என்றுமில்லாத இராணுவ நெருக்கடியை சந்தித்தது. சந்திரிகா அம்மையார் நிலைகுலைந்து போனார். ஆயினும் இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி சர்வதேச உலகத்தின் உதவிபெற்று நெருக்கடியை சமாளிக்கத் திட்டமிட்டார். யாழ்ப்பாணம் புலிகளிடம் வீழ்ந்தால் அங்குள்ள முப்பதினாயிரம் சிங்களப் படையினருக்கு உயிராபத்து ஏற்படும் என உலகெங்கும் அபாயச் சங்கை ஊதினார். இந்த அபாய அறிவிப்பைக் கேட்டதுமே அனைத்துலக நாடுகளும் அம்மையாருக்கு உதவிசெய்ய முன்வந்தன.


இந்தியக் கடற்படையின் உதவியுடன் சிங்கள இராணுவத்தினரை பாதுகாப்பாக மீட்டெடுக்க இந்தியா முன்வந்தது. இஸ்ரேல், பாகிஸ்தான், சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் அவசர ஆயுத உதவி வழங்க முன்வந்தன. முழு உலகமுமே அம்மையாரின் பின்னால் அணிதிரண்டது. மிகவும் சக்திவாய்ந்த நவீனரக அழிவு ஆயுதங்கள் யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டன. இஸ்ரேலும், ரஷ்யாவும் நவீனரக போர் விமானங்களையும் உலங்குவானூர்திகளையும் அனுப்பிவைத்தன. அவசர அவசரமாக ஆயுத ரீதியில் சிங்கள இராணுவ இயந்திரம் வலுப்படுத்தப்பட்டது. அபாயச் சங்கை ஊதி உலகத்தின் உதவியைப் பெற்று இராணுவத்தைப் பலப்படுத்தி யாழ்ப்பாணத்தில் போரைத் தொடரும் சந்திரிகாவின் தந்திரோபாயம் வெற்றிபெற்றது. யாழ்ப்பாணச் சமரில் ஒருதலைப்பட்சமாக உலக நாடுகள் குறுக்கிட்டு சிங்களத்திற்கு உதவிகளை வழங்கியதால் எமது போர்த் திட்டங்களை தாமதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது.

1995ல் யாழ்ப்பாண நகரை சிங்கள ஆயுதப்படைகள் ஆக்கிரமித்தபோதும் அதன் விளைவாக ஐந்து இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்த மாபெரும் மனித அவலம் ஏற்பட்டபோதும், உலகம் கண்களை மூடிக்கொண்டு மௌனம் சாதித்தது. ஆனால் இப்போது சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு படிப்படியாக உடைக்கப்பட்டு மீண்டும் யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் ஆட்சிக்குள் வரும் புறநிலைகள் தோன்றியபோது உலக நாடுகள் பதட்டமடைந்து சிங்கள அடக்குமுறை ஆட்சியாளருக்கு உதவிகளைச் செய்வது எமக்கு ஒருபுறத்தில் ஏமாற்றத்தையும் மறுபுறத்தில் கவலையையும் கொடுக்கிறது.

யாழ்ப்பாணம் சிங்கள தேசத்திற்கு உரித்தானது அல்ல. யாழ்ப்பாணம் யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது. இறையாண்மை என்பது ஒரு அரசின் தெய்வீக சொத்துரிமையல்ல. இறையாண்மையானது மக்களிடம் இருந்தே பிறக்கிறது. அது மக்களுக்கே சொந்தமானது. யாழ்ப்பாணத்தின் இறையாண்மை யாழ்ப்பாண மக்களுக்கே உரித்தானது. இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் தமிழரின் வரலாற்று மண்ணில் சிங்களத்தின் இறையாண்மையை திணித்துவிட முடியாது. தமிழரின் விடுதலைப்படை என்ற ரீதியில் நாம் எமது மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்புக்கு இடமளிக்கப்போவதில்லை.

எத்தனை சவால்களுக்கு முகம்கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும், எத்தகைய சக்திகள் எதிர்த்து நின்றாலும் எமது விடுதலை இயக்கம் யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்தே தீரும்.

எல்லாச் சமர்களுக்கும் தாய்ச்சமராக விளங்கிய ஆனையிறவுச் சமரிலும் மற்றும் வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாண நகராட்சிப் பகுதிகளில் நிகழ்ந்த சமர்களிலும் களமாடி சாதனைபடைத்த சகல போராளிகளுக்கும், படை நகர்த்திய தளபதிகளுக்கும் எனது பாராட்டுக்கள். எல்லைப்படையாக அணிதிரண்ட எமது மக்கள் இந்தச் சமர்களில் நேரடியாக பங்குகொண்டு போராடியது எமது விடுதலைப் போராட்டத்திற்கு புதிய தெம்பையும் பலத்தையும் அளித்தது. குடும்பப்பொறுப்புக்களைச் சுமக்கும் இவர்கள் தேசப்பற்றால் ஈர்க்கப்பட்டு ஆயுதப் பயிற்சி எடுத்து பெரும் நிலமீட்புச் சமர்களில் பங்குகொள்வது எமது தேசத்திற்கு பெருமை சேர்க்கிறது. எமது விடுதலைப் போராட்டத்தில் பரந்துபட்ட பொதுமக்கள் இணைந்துகொள்ளும் பொழுதுதான் அது மக்கள் போராட்டம் என்ற உயர்நிலை அரசியல் பரிமாணம் பெறுகிறது. எமது ஆயுதப் போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு மேலும் மேலும் பெருகவேண்டும் அதுதான் எமது போராட்டத்தில் பாரிய திருப்புமுனைகளை ஏற்படுத்தும். அதுதான் எமது மண்ணில் எதிரியின் ஆக்கிரமிப்பிற்கு முடிவுகட்டி எமது விடுதலை இலட்சியத்தை வெகுவிரைவில் நிறைவுபெறச் செய்யும்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# “எத்தனை சவால்களுக்கு இடையூறுகளை எதிர்கொ எதிர்த்து நின்றாலும் எமது பாணத்தை மீட்டெடுத்தே

எனது அன்பான மக்களே,

மீண்டும் ஆறாண்டுகாலம் சந்திரிகாவின் ஆட்சி தொடரப்போகின்றது. இந்த ஆறாண்டு காலமும் இத்தீவில் அமைதி நிலவுமா அல்லது போரும் வன்முறையும் தலைவிரித்தாடுமா என்பது சந்திரிகா கடைப்பிடிக்கப்போகும் கொள்கையிலும் அணுகுமுறையிலும்தான் தங்கியிருக்கிறது.

இந்த அரசானது, தென்னிலங்கை இனவாத சக்திகளின் ஆதரவோடுதான் ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது. புலிகளுக்கு எதிராக போர்முரசு கொட்டித்தான் தேர்தலை சந்தித்திருக்கிறது. மிகவும் மோசமான தேர்தல் மோசடிகள், வன்முறைகள் வாயிலாகவே வெற்றிகளையும் பெற்றிருக்கிறது. இனவாதக் கடும்போக்காளர்களே இந்த அரசின் முக்கிய பொறுப்புக்களை வகிக்கிறார்கள். இவர்களில் பலர் அமைச்சர்களாகவும் பதவியேற்றிருக்கிறார்கள். ஆயுத வன்முறையை பாவித்து மிகவும் கேவலமான தேர்தல் மோசடிகளைச் செய்து சனநாயகத்தை கேலிக்கூத்தாக்கிய தமிழ்த் துரோகிகளும் இந்த ஆட்சிபீடத்திற்கு முண்டுகொடுத்து நிற்கிறார்கள். இப்படியாக இனவாதிகளையும் தமிழினத் துரோகிகளையும் நிர்வாக உயர்பீடங்களில் அமர்த்தி அவர்களது தயவில் தங்கிநிற்கும் சந்திரிகா அரசு, தமிழ் மக்களின் தேசியப் பிரச்சனையை தீர்க்க துணிவான முடிவுகளை எடுக்குமா என்பது சந்தேகமே.

போர்பற்றியும் சமாதானம் பற்றியும், இனப்பிரச்சனையை தீர்ப்பது பற்றியும், இந்த அரசிடம் ஒரு தெளிவான பார்வையும், திடமான அணுகுமுறையும் இருக்கவில்லை. ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களே முன்வைக்கப்படுகின்றன. பல்வேறு கருத்தோட்டங்களை கொண்டவர்களும் கடும்போக்காளரும் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்திருப்பதால் இந்த அரசானது பல நாக்குகளால் பேசுகிறது. மிகவும் குழப்பகரமாகப் பேசுகிறது. புலிகளுடன் பேசத்தயார் என ஒரு குரலும், புலிகளைப் பூண்டோடு அழிப்போம் என இன்னொரு குரலும், புலிகள் சரணடையும்வரை போர் ஓயாது என மற்றொரு குரலுமாக ஜனாதிபதி, பிரதம மந்திரி, இராணுவத் தளபதி ஆகிய உயர் அதிகார பீடங்களில் இருந்தே இத்தகைய முரணான குரல்கள் எழுப்பப்படுகின்றன. இந்த வித்தியாசமான குரல்கள் ஒவ்வொன்றும் வித்தியாசமான பார்வையாளர்களை திருப்திப்படுத்தும் நோக்குடனேயே எழுப்பப்படுகின்றன. சந்திரிகாவும், கதிர்காமரும் வெளிநாடுகளுக்கு ஏமாற்று வித்தைகாட்ட பிரதம மந்திரியும், இராணுவத் தளபதியும் உள்நாட்டு இனவாத சக்திகளுக்கு தீனிபோட்டு வருகின்றனர்.

மேற்குல நாடுகள் சமாதானத்தை விரும்புகின்றன. சமாதான வழியில் அரசியற் தீர்வு காணப்படுவதை விரும்புகின்றன. போர் மூலமாக தமிழரின் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண முடியாது என்பதை வலியுறுத்துகின்றன. எனவேதான், மேற்குல நாடுகளை திருப்திப்படுத்தும் வகையில் நுட்பமான பிரச்சார அறிக்கைகளை சந்திரிகா வெளியிட்டு வருகிறார். சமாதானம் என்றும், பேச்சுவார்த்தை என்றும், அதிகாரப் பரவலாக்கம் என்றும், அரசியலமைப்பு என்றும் வார்த்தைப் பிரயோகங்களை கையாண்ட மேற்குலகின் கண்களுக்கு மண்தூவி வருகின்றார்.

தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்தவரை சந்திரிகா ஒரு சமாதானப் பிரியை அல்ல. இராணுவத் தீர்வில் நம்பிக்கைகொண்ட கடும் போக்காளராகவே அவரை நாமும் எமது மக்களும் கருதுகிறோம். அவரது ஆறாண்டுகால அரசியல் வரலாறும், தமிழ் மக்களை தொடர்ந்தும் இராணுவ பொருளாதார கொடுமைகளுக்கு ஆளாக்கிவரும் அவரது அணுகுமுறையும் சமீபத்திய அவரது போர்த் தயாரிப்பு நடவடிக்கைகளுமே எம்மையும் எமது மக்களையும் இத்தகைய நிலைப்பாட்டிற்கு தள்ளியது. இராணுவச் செலவீனத்திற்கு ஒதுக்கப்படும் பெரும்தொகை நிதி, பாரிய அளிவிலான ஆயுதக் கொள்வனவு, இடைவிடாது படைக்கு ஆட்சேர்ப்பு, விலகிய இராணுவத்தினரை விரட்டிப் பிடித்தல் இப்படியாக இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்தி போருக்கு தயார் படுத்தும் நடவடிக்கைகளைப் பார்க்கும் பொழுது சந்திரிகா ஒரு இராணுவவாதக் கடும் போக்காளர் என்பது புலனாகும்.

இம் மாதம் ஒன்பதாம் திகதி புதிய பாராளுமன்றத்தை திறந்துவைத்துப் பேசிய சந்திரிகா, தமிழரின் இனப்பிரச்சனை குறித்து வெளியிட்ட கொள்கைப் பிரகடனத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால் சந்திரிகாவின் குழப்பகரமான பார்வையும் அணுகுமுறையும் தெளிவாகும். இந்த அறிக்கையில் தமிழரின் இனப்பிரச்சனையின் தோற்றம் பற்றி விளக்கமுனையும் சந்திரிகா, கடந்த 50 ஆண்டுகாலமாக தமிழருக்கு அநீதி இழைக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறார். ஆயினும் தமிழர் என்று குறிப்பிடாமல் “சிறுபான்மை சமூகங்களுக்கு” அநீதி இழைக்கப்பட்டதாக பொதுப்படையாகக் கூறுகிறார். “இந்நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார அதிகாரக் கட்டமைப்பில் பங்குகொள்வதற்கு சிறுபான்மை சமூகத்தினருக்கு நியாயமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. அதுதான் இனப்பிரச்சனையின் தோற்றப்பாட்டிற்கு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**...கம் கொடுத்தாலும் எத்தனை ...டாலும், எத்தகைய சக்திகள் ...விடுதலை இயக்கம் யாழ்ப் ...ம்.”**



உண்மையான காரணம்” என்று சந்திரிகா விளக்கம் அளிக்கிறார். இதில் வேடிக்கை என்னவென்றால் தமிழ் மக்களுக்கு எதற்காக அநீதி இழைக்கப்பட்டது? யாரால் இழைக்கப்பட்டது? எப்படி, எந்த வடிவங்களில் இழைக்கப்பட்டது? என்ற கேள்விகளுக்கு சந்திரிகா பதில் தரவில்லை. மாறாக தமிழர்களுக்கு எதிராக நிகழ்ந்த அநீதிகள் அனைத்திற்கும் அந்நிய காலனித்துவம் மீது பழியைச் சுமத்திவிடுகிறார். சிறீலங்காவின் அரசியல் அமைப்புச் சட்டங்கள் காலனித்துவ அதிகார கட்டமைப்பில் இருந்து உருவாக்கம் கொண்டவை என்றும், இவை எமது சமூகத்தில் நிகழும் புறநிலைகளுக்கு ஏற்றதாக அமையவில்லை என்றும் சிறுபான்மை சமூகங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இந்த அரசியலமைப்புசட்டங்களே காரணமாக இருப்பதாகவும் சந்திரிகா கூறுகிறார். சந்திரிகா அளிக்கும் இவ் விளக்கத்தில் தமிழருக்கு எதிரான சிங்கள- பௌத்த பேரினவாதத்தின் கொடூரமான ஒடுக்குமுறை வரலாறு மிகவும் சாணக்கியமான முறையில் மூடிமறைக்கப்படுகிறது. அத்தோடு இந்த இன ஒடுக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் பெற்றோரது பங்கும் இருட்டடிப்புச் செய்யப்படுகிறது. தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு அரசியலமைபில் குறைகாண்பதும், அந்த அரசியல் அமைப்பை அந்நிய காலனித்துவத்தோடு தொடர்பு படுத்துவதும் முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயலும் கேலிக்கூத்தான விடயம்.

அந்நிய காலனித்துவ தலையீடு காரணமாகவே தமிழீழ மக்கள் தமது வரலாற்று தாயகம் மீதான இறையாண்மையை இழந்தார்கள் என்பது வரலாற்று உண்மை. ஆனால், தமிழினம் மீதான திட்டமிட்ட ஒடுக்குமுறையானது இலங்கைத்தீவு ஆங்கிலக் காலனித்துவத்தில் இருந்து சுதந்திரம் அடைந்த பின்னரே ஆரம்பமாகிறது. இந்த ஒடுக்குமுறைக்கு காரணகர்த்தாவாக விளங்குவது சிங்கள பௌத்த இனவாதமாகும். பௌத்த மதத்தில் வேர் பாய்ச்சி, சிங்கள சமூகக் கட்டமைப்பில் விருட்சமாக வளர்ந்திருக்கும் இப் பேரினவாத சித்தாந்தம், சிங்கள அரசியல் உலகையும் ஆழமாக ஊடுருவி நிற்கிறது. சிங்கள அரசியல்வாதிகளால், படைக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டங்களும் இந்த பேரினவாத சித்தாந்தத்தின் ஒரு வடிவம். ஆகவே தமிழருக்கு கொடுமை இழைத்துவருவது சிங்கள பௌத்த இனவாதமே தவிர சந்திரிகா கூறுவது போல ஆங்கில காலனித்துவ கருத்துலகம் அல்ல.

சிங்கள இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராகத் தமிழர்கள் நிகழ்த்திய அரசியல் போராட்டங்கள் அமைதி வழியில் இருந்து ஆயுதப் போராக விரிவுபெற்று இறுதியில் முழு அளவிலான போர்வடிவம் பெற்றிருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் படையான விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்கும் மத்தியில் இப்போர் நிகழ்ந்து வருகிறது. தன்னாட்சி உரிமையுடைய மக்கள் சமூகம் என்ற ரீதியில் இன அழிப்பை நோக்காகக் கொண்ட அரச அடக்குமுறையில் இருந்து விடுதலை பெற ஆயுதம் ஏந்திப்போராடும் உரிமை எமக்கு உண்டு. சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு இசைவான இந்த உரிமையின் அடிப்படையில்தான் தமிழீழப்போர் நடைபெற்று வருகிறது. இதுதான் உண்மை நிலை. ஆனால், சிங்கள அரசு இந்தப் போர் பற்றிய உண்மை நிலையையும் அதன் வரலாற்றுப் பின்னணியையும் உலகிற்கு இருட்டடிப்புச் செய்து வருகிறது. அதுமட்டுமன்றி தமிழரின் தேசவிடுதலைப் போரை “பயங்கரவாதம்” எனத் திரிபுபடுத்தி, இழிவுபடுத்தியும் வருகிறது.

தனது கொள்கைப்பிரகடன அறிக்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் மத்தியிலான போர் பற்றி சந்திரிகா குறிப்பிடும்போது, “இனப்பிரச்சனையின் ஒரு விளைவுதான் இந்தப்போர்” என்கிறார். ஆயினும் அதே அறிக்கையில் இப்போரை “ஆயுதப் பயங்கரவாதம்” என்றும் குறிப்பிடுகிறார். தமிழீழப் போரை இனப்பிரச்சனையின் வெளிப்பாடு என்று கூறும் அதே நாக்குத்தான் அதனை தமிழரின் ஆயுதப் பயங்கரவாதம் என்றும் வர்ணிக்கிறது. இனப்பிரச்சனையை சமாதான வழியில் தீர்த்து வைப்போம் என்று கூறும் சந்திரிகா பயங்கரவாதத்தை போர் மூலம் ஒழிப்போம் என்றும் முழங்குகிறார். இப் படியாக சந்திரிகா அரசு தமிழரின் போர்பற்றிய உண்மை நிலையைத் திரித்து, மறுத்து பயங்கரவாதம் எனப் பொய்சொல்லி, சிங்கள மக்களையும் உலகத்தையும் ஏமாற்றி வருகிறது.

தமிழீழப் போரானது ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் விடுதலைப் போர் என்ற யதார்த்த அரசியல் உண்மையை சிங்கள அதிகார வர்க்கம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இந்த மறுதலிப்புத்தான் தமிழரின் இனப்பிரச்சனையை சிக்கலாக்கி வருகிறது. இதுதான் போரை தீவிரப்படுத்தி வருவதற்கும் காரணமாக இருக்கிறது. இதுதான் இனப்பிரச்சனைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு பெரும் முட்டுக்கட்டையாகவும் இருந்து வருகிறது.




சமாதான வழியில் தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது. நாம் சமாதான வழிமுறைகளுக்கு எதிரானவர்கள் அல்லர். அதேவேளை, நாம் சமாதானப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# "சமாதான வழிமூல நியாயமானதாக, நீதியா தமிழரின் அரசியல் அபில தாக அமையவேண்டும் எ

பேச்சுக்களில் பங்குபற்றத் தயங்கவும் இல்லை. சமாதான வழிமூலம் கிட்டப்படும் தீர்வானது நியாயமானதாக, நீதியானதாக, சமத்துவமானதாக தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்வதாக அமையவேண்டும் என்பதே எமது விருப்பம். நோர்வே நாட்டு சமாதானக் குழுவினரை அண்மையில் வன்னியில் நான் சந்தித்தபோது எமது இயக்கத்தின் இந்த நிலைப்பாட்டை தெளிவாக, அழுத்தம் திருத்தமாக எடுத்து விளக்கினேன்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு நாம் நிபந்தனைகள் எதனையும் விதிக்கவில்லை. ஆயினும் பேச்சுவார்த்தைக்கு உகந்ததான நல்லெண்ண புறநிலையும், இயல்புநிலையும் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையே நாம் வலியுறுத்தி வருகிறோம்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக பரஸ்பரம் பகைமையுடனும், சந்தேகத்துடனும் ஒரு கொடிய போரில் ஈடுபட்டுவரும் இருதரப்பினரும் சண்டையை தொடர்ந்தபடி திடீரென சமாதானப் பேச்சில் இறங்குவது நடைமுறைச் சாத்தியமானதல்ல. இதனால்த்தான் போர் நெருக்கடியை படிப்படியாகத் தளர்த்தி போர் ஓய்ந்த சமாதான சூழ்நிலையில், நல்லெண்ணப் புறநிலையில் பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகிறோம்.

இயல்புநிலை என்னும் பொழுது தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதாரச் சுமைகள், தடைகள் நீங்கி எமது மக்களின் வாழ்க்கை நிலை இயல்பான இருப்பிற்கு திரும்பவேண்டும் என்பதையே நாம் கருதுகிறோம். ஒரு உறுதியான தளத்தில் உகந்த புறநிலையில், நல்லெண்ண சூழ்நிலையில் பேச்சுக்கள் நிகழும்பொழுதுதான் அவை ஆக்கபூர்வமானதாக அமையும். ஆகவேதான் பேச்சுக்கான நல்லெண்ண புறநிலையின் அவசியத்தையும், தேவையையும் நாம் வலியுறுத்துகின்றோமே தவிர, பேச்சுக்களுக்கு நாம் நிபந்தனைகளை விதிக்கவில்லை.

போர் நெருக்கடி தளர்ந்து இயல்புநிலை தோன்றுவதற்கு இருதரப்பில் இருந்தும் நம்பிக்கையை வளர்க்கும் நல்லெண்ண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென நோர்வே அரசு சில யோசனைகளை தெரிவித்திருக்கிறது. இதனை நாம் ஆர்வமாகப் பரிசீலனை செய்துவருகிறோம். எமது மக்கள் அனுபவிக்கும் துன்பச்சுமை குறைந்து பரஸ்பர நல்லெண்ணம் நிலவும் சமாதான சூழ்நிலை தோன்றுவதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை நாம் வரவேற்கிறோம். அதற்கான முன் முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமானால் பதிலாக நாமும் நல்ல முடிவுகளை எடுப்போம்.

சமாதானப் பேச்சுவார்த்தை என்பது தமிழ் மக்களுக்கு ஒரு புதிதான விடயம் அல்ல. தமிழ் மக்கள் சார்பில் எமது விடுதலை இயக்கமும் எமக்கு முந்திய தலைமைகளும், சிங்களத்துடன் எத்தனையோ தடவைகள் பேச்சுக்களை நடத்தியுள்ளன. பண்டா - செல்வா ஒப்பந்த காலத்தில் இருந்து பல தசாப்தங்களாக பல வரலாற்றுச் சூழல்களில் பல்வேறு நிர்ப்பந்தங்களின் அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆயினும் இப் பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்த்துவைக்கத் தவறிவிட்டன. இதனால், தமிழரின் பிரச்சனை மேலும் மேலும் சிக்கலடைந்து பெரும் போராக விஸ்வரூபம் பெற்றிருக்கிறது. இந்த துரதிஸ்ட நிலைமைக்கு பிரதான காரணம் தமிழரது பிரச்சனையின் அடிப்படைகளை, தமிழரது அரசியல் அபிலாசைகளை சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ள மறுப்பதுதான்.

தமிழரின் பிரச்சனைக்கு சமாதான வழியில் நிரந்தமான அரசியற்தீர்வு காணப்படவேண்டுமாயின் தமிழர் பற்றிய சில அடிப்படை உண்மைகளை சிங்கள தேசம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். அத்தோடு தமிழ் மக்கள் எத்தகைய தீர்வை விரும்புகிறார்கள் என்பதையும் அவர்களது அடிப்படை அபிலாசைகள் என்ன என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஈழத் தமிழர்கள் தனித்துவமான இன அடையாளத்தை கொண்டவர்கள் ஒரு தேசிய இனக் கட்டமைப்போடு அந்த இனத்துவ பிரக்ஞையோடு வாழும் ஒரு மக்கள் சமூகம் அவர்களுக்கு வரலாற்று ரீதியான தாயக மண்ணாக சொந்த நிலமுண்டு. எமது மக்கள் விரும்புவதெல்லாம் ஒன்றுதான். தமது சொந்த மண்ணில் நிம்மதியாக, நிறைவாக வாழவேண்டும் என்பதுதான். மற்றவர்களது அதிகார ஆதிக்கமோ, நெருக்குவாரங்களோ இல்லாத ஒரு அரசியல் சூழலில் தம்மைத்தாமே ஆட்சி புரிந்து, கௌரவமாக வாழவேண்டும் என்பதே எமது மக்களின் ஆழமான அபிலாசையாகும். சிங்கள மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த புரிந்துணர்வின் அத்திவாரத்தில் இருந்துதான் ஒரு நியாயமான, நிரந்தரமான தீர்வைக் கட்டியெழுப்புவது சாத்தியமாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கிட்டப்படும் தீர்வானது
## தாக, சமத்துவமானதாக
## சைகளை நிறைவு செய்வ
## பதே எமது விருப்பம்.”



தமிழர் பிரச்சனையின் அடிப்படைகளை உணர்ந்து சமாதன வழியில் தமிழர்களுக்கு நீதி வழங்க சந்திரிகா அரசு முன்வருமா என்பது எமக்கு சந்தேகமே.

தமிழர்களுக்கு எதிராக தென்னிலங்கையில் குமுறும் இனக்குரோத வெறியாட்டங்கள், ஆட்சி அதிகாரத்தில் பேரினவாத சக்திகளின் மேலாண்மை, தொடர்ச்சியாக இராணுவ மயப்படுத்தப்படும் சிங்கள சமூகம், மகாசங்கத்தினரின் தமிழ் விரோதப்போக்கு, அரசாங்கத்தின் இராணுவத்தீர்வுக் கொள்கை இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது தமிழரின் தேசிய இனப்பிரச்சனை சமாதான வழியில் தீர்க்கப்படுமா என்பது கேள்விக்குறியாகிறது. அத்தோடு சந்திரிகா அரசு மேற்கொள்ளும் சில குருட்டுத்தனமான அணுகுமுறைகளும் இனப்பிரச்சனையின் தீர்வுக்கு முட்டுக்கட்டையாகவும் அமைந்துவிடுகின்றது. பெருமாளுக்கு முதலமைச்சராக முடிசூட்டி முந்திய இந்திய அரசு இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறுபோல, சந்திரிகா அரசும் தமிழ் விரோதக்குழு ஒன்றை வட கிழக்கில் ஆட்சி அதிகாரத்தில் அமர்த்தியிருக்கிறது. இப்படியான நடவடிக்கைகள் மூலம் இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் வெறுப்பை சம்பாதித்துக் கொள்வதுடன் இனப்பிரச்சனையை மேலும் சிக்கலாக்கி விடுகிறது.

எனது அன்பான மக்களே,

எமது தேசியப் பிரச்சனை இப்பொழுது உலக நாடுகளின் கவனத்தையும், ஆர்வத்தையும் ஈர்த்து வருகிறது. இப்பிரச்சனை சமாதான வழியில் தீர்க்கப்படவேண்டும் என சர்வதேச சமூகம் விரும்புகிறது. உலக மனச்சாட்சியின் பார்வை எம் பக்கம் திரும்பியிருப்பது நல்லதொரு அறிகுறியாகவே எமக்குத் தெரிகிறது.

நாம் சமாதானப் பேச்சுக்கோ அல்லது சமாதான வழியிலான அரசியற்தீர்விற்கோ முட்டுக்கட்டை போடவில்லை என்பதை உலகிற்கு உணர்த்தி வருகிறோம். சமாதானப் பேச்சுக்கு உகந்ததாக சமாதான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டையும் தமிழர்களது அடிப்படைக் கோரிக்கைகளையும் உலக சமூகம் புரிந்து வருகிறது. தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறையின் பின்னணியில் உள்ள சக்திகள் யாரென்பதையும் உலகம் இனங்கண்டு வருகிறது.

உலக நாடுகளில் இருந்து பெறப்படும் நிதி உதவியையும், ஆயுத உதவியையும் ஆதாரமாகக்கொண்டே சிங்கள அரசு தமிழருக்கு எதிராக இந்தப் போரை நடத்தி வருகிறது. பெரியதொரு அழிவுப்போரை நடத்திக்கொண்டு, பெருமளவு அப்பாவித் தமிழ் மக்களை கொன்றொழித்துக்கொண்டு சமாதானத்திற்காகவே சண்டையை நடத்துவதாக சந்திரிகா அரசு உலகத்தை ஏமாற்றி வந்திருக்கிறது. ஆயினும் சந்திரிகா அரசு நடத்தும் இப் போரின் நோக்கம் என்ன என்பதையும், இப்போரினால் புலிகளை வெற்றி கொள்ளவோ அன்றி தமிழரின் பிரச்சனையை தீர்க்கவோ முடியாது என்பதையும் மேற்குலகம் இப்பொழுது உணரத் தொடங்கியுள்ளது. எனவே சிங்கள இனவாத ஆட்சியாளரை சமாதானப் பாதைக்கு திருப்பவேண்டும் என்றால் சிங்களத்திற்கு பொருளாதாரத் தீனி போட்டுவரும் உலக நாடுகளிடம்தான் அந்தக் கடிவாளம் இருக்கிறது.


தென்னிலங்கைச் சமூகக் கட்டமைப்பின் சகல மட்டங்களிலும் பூதாகரமாக வளர்ந்துவரும் சிங்கள பௌத்த பேரினவாதம், தமிழ் மக்களை காருணியத்துடன் அரவணைத்துக் கொள்ளும் என நாம் நம்பவில்லை. சிங்கள தேசம் இனவாதப்பிடியில் இருந்து விடுபடாமல் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையை தொடருமானால் நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை.

காலமும் வரலாறும் எமது போராட்ட இலட்சியத்திற்கு நியாயம் வழங்கியே தீரும். அப்போது உலகமும் அதனை ஏற்றுக் கொள்ளும்.

சத்திய இலட்சியத் தீயில் தம்மை அழித்துக்கொண்ட மாவீரர்கள் சரித்திரமாக நின்று எமக்கு வழிகாட்டுவார்கள். அந்த தர்மத்தின் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என்பது உறுதி.

**‘புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்’**

**வே. பிரபாகரன்**
**தலைவர்**
**தமிழீழ விடுதலைப் புலிகள்**





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# படுகொலைகளுடன் ஆரம்பித்துள்ள பொ.ஐ.மு.வின் 2ஆவது பதவிக்காலம்

வேலவன்

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் இரண்டாவது பதவிக்காலம் தமிழர்களைப் பொறுத்தவரையில் படுகொலைகளுடன் ஆரம்பித்துள் ளது. அது பதவி ஏற்று ஒரு வார காலத்துக்குள்ளேயே அப்பட்டமான இரு படுகொலைச் சம்பவங்களை நிகழ்த்தி முடித்திருக்கின்றது.

18ஆம் திகதி இரண்டாவது முறையாக பதவியேற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஈ.பி.டி.பி குழுவினர் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சுயாதீனச் செய்தியாளர் நிமலராஜனை படுகொலை செய்ய, 25ஆம் திகதி அதிகாலை பண்டாரவளை பிந்துநுவெவவில் 31 அப்பாவித் தமிழ்க் கைதிகள் சுட்டுப் பொசுக்கப்பட்டிருக்கிறார்கள். 40ற்கு மேற்பட்டோர் அடித்தும் வெட்டியும் குதறப்பட்டிருக்கிறார்கள்.

1989ஆம் ஆண்டு பதவியேற்ற பிரேமதாச அரசாங்கம் பத்திரிகையாளர் ரிச்சார்ட்டி சொய்சாவை படுகொலை செய்ததும், 1983இல் வெலிக்கடையில் நடந்த படுகொலைகளும், ஜே.வி.பி. எழுச்சி பெற்ற காலத்தில் அதனை அடக்கும் போர்வையில் பிரேமதாச அரசாங்கம் செய்த படுகொலைகளும், 17 வருட ஆட்சிக்காலத்தில் ஐ.தே.க புரிந்த வேறு மனித உரிமை மீறல்களும்தான் 1994 தேர்தலின்போது சந்திரிகாவிற்கு இருந்த பிரச்சார ஆயுதங்கள்.

1994இல் முதற் தடவையாகப் பதவியேற்றபோது ஐ.தே.க. புரிந்த மனித உரிமை மீறல்களால், "நாட்டின்" நற்பெயர் களங்கப்பட்டிருப்பதாக கூக்குரலிட்ட சந்திரிகா அம்மையார் அதனைச் சீர்செய்யப்போவதாக கூறியிருந்த போதும் மனித உரிமை மீறல்களில் முன்னணி வகிக்கும் நாடு இலங்கை என்ற பெயரிலிருந்து அவரால் "நாட்டை" மீட்டெடுக்க முடியவில்லை.

1996இல் யாழ் குடாநாடு முற்றுமுழுதாக ஆக்கிரமிக்கப்பட்ட பின் அங்கு 800க்கு மேற்பட்டோர் செம்மணியில் படுகொலை செய்து புதைக்கப்பட்ட விவகாரம் வெளிவந்தபோது அவரது மனித உரிமை முகமூடி முற்றாகவே கிழிந்தது. அந்த முகமூடியைக் கிழிப்பதில் யாழ்ப்பாணத்திலிருந்து செயற்பட்டு வந்த சுயாதீனப் பத்திரிகையாளர் நிமலராஜனின் பங்கு கணிசமானதாகும்.

இவ்விடயத்தில் மட்டுமல்ல சிறீலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட யாழ். மண் சொர்க்க பூமியாகி விட்டது போன்ற பிரமையை சிறீலங்கா அரசு ஏற்படுத்த முயல உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்கள் யாழ். குடாநாட்டின் "இயல்பு நிலை" குறித்துப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்க யாழ். மக்களின் அவலநிலையை யாழ்ப்பாணம் ஒரு திறந்த வெளிச் சிறைக்கூடம் என்பதை உலகுக்கு வெளிப்படுத்துவதில் பெரும் பங்கு வகித்தவர் இவர்.

நிமலராஜனின் இத்தகைய செயற்பாடுகள் அரசாங்கத்தையும், அதன் அடிவருடிகளான ஈ.பி.டி.பி.யினரையும் பாதித்தது உண்மையே. ஆயினும் அவர்களை மிகவும் ஆத்திரத்துக்கு உள்ளாக்கிய விடயம் தேர்தலில் அவர்கள் செய்த, செய்ய முயன்ற தில்லுமுல்லுகளை அவர் அப்பட்டமாக வெளிப்படுத்தியதுதான்.

சுமார் நான்கு லட்சம் மக்களைக் கொண்ட யாழ். குடாநாட்டிற்கு ஆறு லட்சத்திக்கு மேற்பட்ட வாக்குச் சீட்டுக்கள் அனுப்பப்பட்டது முதல் கள்ளவாக்குகள் ஈ.பி.டி.பி. யினருக்குத் தள்ளப்பட்டது வரை அவர் வெளிப்படுத்தியமை நிச்சயம் அவர்களுக்கு ஆத்திரமூட்டும் செயல்களாகவே இருக்கும்.

இவ்வாறு செயற்பட்ட ஒருவரைத்தான் ஆக்கிரமித்துள்ள பகுதியில் வைத்து தனது அடிவருடிகளைக் கொண்டு படுகொலை செய்வித்திருக்கிறது சந்திரிகா அரசு.

இதேவேளை கடந்த 25ஆம் திகதி பண்டாரவளையிலுள்ள பிந்துநுவேவ தடுப்புமுகாமில் வைத்து 31



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பாவித் தமிழ் இளைஞர்களை கோரமாக வெட்டியும், சுட்டும் படுகொலை செய்ததுடன் 40க்கு மேற்பட்டோரை படுகாயத்துக்கும் உள்ளாக்கியிருக்கின்றது சந்திரிகா அரசு.

இவர்கள் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்தும் தென்பகுதிகளிலிருந்தும் சிறீலங்காப் படையினரால் "சந்தேகம்" என்ற முத்திரையின் கீழ் கைதாகி விசாரணை என்ற போர்வையில் பல்வேறு சித்திரவதைகளையும் அனுபவித்து மனரீதியான உளைச்சல்களுக்கு உட்படுத்தப்பட்டு போலிக் குற்றச்சாட்டுகளின் கீழ் சிறையிலடைக்கப்பட்டவர்கள்.

ஆனால் இவர்கள் குறித்து மனித உரிமை அமைப்புகள் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்காக "புனர்வாழ்வு" என்ற முத்திரையிட்டு இந்த தடுப்புமுகாமை சிறீலங்கா அரசு நடத்தி வந்தது. இந்த தடுப்புமுகாம் சிறீலங்கா இராணுவத்தின் பொறுப்பிலேயே இருந்தது.

சிறீலங்காவில் கைதுசெய்யப்படும் அப்பாவித் தமிழர்கள் தொடர்பாக கேள்வி எழுப்பப்படும் போதெல்லாம் புனர்வாழ்வு முகாம் என்ற பெயரில் நடத்தப்பட்டுவந்த இந்தத் தடுப்பு முகாமையே கைதிகள் புனர்வாழ்வு என்ற பெயரில் அரசு காண்பித்து வந்தது.

ஆனால் புனர்வாழ்வு என்ற பெயரில் சிறைவைக்கப்பட்டிருந்த இவர்களை விடுவித்து அவர்கள் தமது சாதாரண வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான நடவடிக்கைகள் எதிலும் சிறீலங்கா அரசாங்கம் ஈடுபடவில்லை.

இந்நிலையில் இப்பொழுது இந்த தடுப்பு முகாமில் இருந்த இளைஞர்கள் தமது விடுதலை கோரி போராட்டம் நடத்தினார்கள் என்று கூறும் சந்திரிகா அரசாங்கம் இதனையடுத்து இவர்கள் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தியதாகக் கூறுகின்றது.

முதலாவதாக இவர்கள் தமது விடுதலை கோரி நடத்திய போராட்டத்திற்கும் அப்பகுதியிலிருந்த பொதுமக்களுக்கும் என்ன தொடர்பு? என்பது குறித்து விளக்கமளிக்கவில்லை. அவ்வாறு அவர்கள் விடுதலை கோரிப் போராட்டம் நடத்தியிருப்பின் அதனைக் கையாள வேண்டியவர்கள் அரசாங்கமும் அரச அதிகாரிகளுமேயன்றி பொதுமக்கள் இதில் சம்பந்தப்பட வேண்டிய அவசியம் என்ன? இரண்டாவதாக அவ்வாறு பொதுமக்கள் தடுப்பு முகாமிலிருந்த தமிழ் இளைஞர்களைத் தாக்கிய வேளையில் அவர்களைப் பாதுகாக்க வேண்டியது யார்?

ஆனால் பாதுகாக்க வேண்டியவர்களாலேயே தூண்டப்பட்டு அவர்களின் அனுசரணையுடன் அவர்கள் கைகட்டிப் பார்த்திருக்க இவ் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் மீது இவ்வாறான தொரு கொடூரத்தைப் புரிந்திருக்கிறது சிங்களப் பேரினவாதம்.

இந்த இளைஞர்களின் தொகையோ 54. ஆனால் 1500க்கும் மேற்பட்ட சிங்களக் காடையர்களை துப்பாக்கி, கத்தி, கல்லு, பொல்லு, இரும்புக்கம்பியென பலதரப்பட்ட ஆயுதங்களையும் கொடுத்து ஏவிவிட்டிருக்கிறது. இந்தக் கொடூரத்தின்போது கொடூரம் புரிந்தவர்களுக்குக் காவலாகவே அத்தடுப்பு முகாமின் "காவல்படைகள்" இருந்திருக்கின்றன. அத்துடன் இந்தக் "காவல்படைகள்" இத்தாக்குதலின் கொடூரத்திலிருந்து தப்பி ஓட முயன்ற தமிழ் இளைஞர்களை தப்பி ஓடவிடாது காவல் புரிந்திருக்கின்றன.





தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிந்நுவேவ தடை முகாம். சிங்களக் காடையர்களின் தாக்குதலின் பின்னர்.

"தமிழர்களின் இறைச்சியை நாய்களுக்குப் போடுவோம்" எனும் பொருள்படியாக பண்டாரவளை நகரில் சிங்கள இனவாதிகளால் ஒட்டப்பட்டிருந்த தமிழரழிப்புச் சுவரொட்டி.

இறுதியில் இச்சிங்களக் காடையர்கள் தமது வெறியாட்டத்தை முடித்துக்கொண்டபின் இப்போது சந்திரிகா அரசாங்கம் "அதிர்ச்சி" தெரிவித்திருக்கிறது. அத்துடன் வழக்கம் போலவே விசாரணைக் குழுக்களையும் நியமித்திருக்கிறது. மேலும் இதற்கும் புலிகள் மீது சந்தேகம் தெரிவித்திருக்கிறது.

இவ்வாறான ஒரு செயற்பாட்டைத்தவிர விறு எதையும் சந்திரிகா அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்ப்பது மடமையானதே. 1983 வெலிக்கடைப் படுகொலையைக் கண்டித்து வந்த சந்திரிகா அரசாங்கம் தனது ஆட்சிக் காலத்தில் 1997 நவம்பரில் அதே வெலிக்கடைச் சிறையில் கைதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதேபோல் 1998 டிசம்பரில் களுத்துறைச் சிறைச்சாலையில் சிங்களக் கைதிகளால் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் கைதிகளின் கொடூரத் தாக்குதலிலிருந்து தமிழ்ச் சிறைக் கைதிகளைக் காப்பாற்றவோ அல்லது அவர்களைத் தாக்கிய சிங்களக் கைதிகள் மீது நடவடிக்கை எடுக்கவோ முன்வரவில்லை. ஆனால் தமிழ்க் கைதிகள் வெடிகுண்டு தயாரித்தார்கள் என்றே குற்றம் சாட்டியது.

இப்போது அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் உலகின் மத்தியில் அம்பலமாகியுள்ள சூழ்நிலையில் இதனால் ஏற்பட்டுள்ள நிலைமையை கையாள விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்ற போதும், ஆரம்ப பொலிஸ் விசாரணையின் போது கைது செய்யப்பட்ட 200 சிங்களவர்கள் விரைந்து விடுதலை செய்யப்பட்டமையும், மக்களின் ஆர்ப்பாட்டத்தையடுத்தே அவர்கள் விடுவிக்கப்பட்டமையும் இவ்விசாரணைக் குழுக்களின் முடிவுக்குக் கட்டியம் கூறுகின்றன.

எவ்வாறாயினும் சந்திரிகா அரசாங்கம் உலகின் கண்ணை மூடிவிட இவ்வாறான எந்த முயற்சியையும் மேற்கொள்ளலாம். இதனை உலகம் மறந்தும்விடலாம்.

ஆனால், யாழ் சுயாதீனச் செய்தியாளர் நிமலராஜனினதும், அப்பாவி இளைஞர்கள் 31 பேரினதும் படுகொலைகளும் மீண்டும் மீண்டும் தமிழ் மக்களுக்கு ஒன்றைத்தான் உணர்த்த முடியும். அதாவது தமது சொந்தப்பாதுகாப்பில் தமிழரின் தேசியப்படையின் பாதுகாப்பில்தவிர வேறு எங்கும் தமிழர்கள் பாதுகாப்பாக வாழ முடியாது என்பதை அப்படுகொலைகள் புலப்படுத்துகின்றன.



படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜன்

இராணுவச் சோதனைச் சாவடிக்குப் பின்புறமுள்ள வீட்டில் தங்கியிருந்த பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலையும், படையினரின் பாதுகாப்பில் அவர்களால் நடத்தப்பட்டு வந்த "புனர்வாழ்வு" முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அப்பாவி இளைஞர்கள் மீது சிங்கள இனவாதிகள் புரிந்த கொடூரமும் தமிழ் மக்கள் தமக்கு எவ்வளவு "பாதுகாப்பு" உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளப்போதுமானது. எனவே தமிழ் மக்கள் தங்கள் தேசியப் படையை வலுப்படுத்துவது இன்றியமையாத தேவையாகும்.

அதேவேளை சந்திரிகா அரசாங்கம் தனது கைக்கூலிகளையும் காடையர் கூட்டத்தையும் பயன்படுத்தி இவ்வாறான படுகொலைகளைப் புரியலாம். அவற்றை உலகின் கண்ணிலிருந்து தற்போதைக்கு மறைத்தும்விடலாம். ஆனால் வரலாற்றின் தண்டனையிலிருந்து இவர்கள் தப்பிக்கொள்ள முடியாது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உயிர்த்தடம்

-அன்பு-



கார்த்திகை மாதத்து ஊதல்காற்று உடலைச் சில்லிடச் செய்து கடந்து சென்றது. இரண்டாம் கட்ட ஈழப்போர் உக்கிரகட்டத்தை அடைந்திருந்தது. பலாலி இராணுவத்தளத்தை விரிவுபடுத்தி யாழ் நகரை கைப்பற்றிவிட எதிரி முனைந்து கொண்டிருந்தான்.

24.11.1992, பத்தமேனிப்பகுதியில் எதிரி புதிதாக அமைத்திருந்த முன்னணிக் காவலரண்களை ஊடுருவித்தாக்கி அழித்துவிடும் நோக்கில் மது அணிகள் நகர்ந்து கொண்டிருந்தன. மரபு ரீதியில் முன்னேறி வந்து நிலையமைத்துள்ள இராணுவத்தை தாக்கி அழிப்பதற்கு மோட்டார் பீரங்கிகளின் ஆதரவுகூட எம்மிடம் இல்லாத காலமது. சாதாரண தானியங்கித் துப்பாக்கிகளையும், இலகு இயந்திரத் துப்பாக்கிகளையும் கொண்டு எதிரியைத்தாக்கி அழிக்க வேண்டியிருந்தது எனினும் அன்றைய போர்ச்சூழல் அவ்வாறானதொரு சண்டையைச் செய்ய எம்மை நிர்ப்பந்தித்தது.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. அந்த மழைக்காலத்து இருளின் ஊடு சில உருவங்கள் குனிந்தவாறும், தவழ்ந்தவாறும் எதிரியின் முன்னணி காவலரண்களை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தன. பல அணிகள் பங்கெடுத்த அந்தச் சண்டையில் ஒரு குறிப்பிட்ட பகுதியை தாக்கிக்கைப்பற்றும் பொறுப்பு பெண்கள் படையணிப் போராளிகளிடம் கொடுக்கப்பட்டிருந்தது.

அவர்கள் எதிரியின் முன்னணித் தடையை நெருங்கியிருந்தனர். தேடொளி விளக்குகள் உமிழ்ந்த வெளிச்சம் நிலத்துடன் நிலமாக தடைகளின் அருகில் கிடந்தவர்களின் தலைகளின் மேலால் ஒளிபாய்ச்சிச் சென்றது. இடைக்கிடை எதிரி தன்னிடமுள்ள கனரக ஆயுதங்களினால் தனக்கு முன்னால் உள்ள தடைப் பிரதேசத்தினுள் எழுந்தமானமாக சுட்டுக்கொண்டிருந்தான். அவன் ஏவிய எறிகணைகளும் ஆங்காங்கே விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன.

முட்கம்பிவேலித் தடைகளை வெட்டியவாறு அந்த அணியினர் ஒருவர் பின் ஒருவராக கைகளில் இறுகப்பற்றிய துப்பாக்கிகளுடன் எதிரி முதலாவதாக ஏற்படுத்தி வைத்திருந்த தடையை தாண்டினர். "டோப்பிட்டோ" குண்டுடன் அவர்களின் முன்சென்ற போராளி அடுத்திருந்த தடையை நோக்கி ஊர்ந்துகொண்டிருந்தான். இடைக்கிடை எதிரி ஏவும் எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கும் சத்தத்தைத் தவிர எல்லாம் அமைதியாக இருந்தது. சண்டை தொடங்குவதற்கு இன்னும் சில நிமிடங்களே இருந்தன. எதிரியைத்தாக்கி உள் நுழைவதற்கான பாதை ஏற்படுவதற்காய் அணியினர் காத்திருந்தனர்.

எழுந்தமானமாக எதிரி ஏவிய எறிகணையொன்று வெடித்து ஓய்ந்தபோது அணியில் ஒருவளாக அங்கே நிலையெடுத்திருந்த 2ம் லெப். ஜெமிலாவின் கால்கள் இரண்டையும் அது சிதைத்திருந்தது.

எல்லோருடைய விழிகளும் தவிப்புடன்அவளை நோக்கித் திரும்பின. அவளது வேதனையின் முனகலால் அடுத்து நடக்கவிருக்கும் விபரீதத்தை எண்ணி எல்லோர் முகங்களிலும் அச்சத்தின் சாயல் படர்ந்தது. முதலுதவி செய்வதற்காய் ஜெமிலாவின் அருகிலிருந்த போராளி அவளை நெருங்கியபோது அவளுடைய முகம் உணர்ச்சியற்று கல்லாக இறுகியிருந்தது. ஆனால் அந்த விழிகளில் மட்டும் ஏதோ ஒரு ஆத்ம ஒளி பரவியிருந்தது.

மெல்ல அசைந்த அவள் உதடுகளில் இருந்து அந்த வார்த்தைகள் வெளிவந்தபோது யாருமே அதை எதிர்பார்க்கவில்லை.

"என்னை விட்டிட்டு நீங்கள் முன்னேறுங்கோ, நான் சத்தம் போடமாட்டன்" இறுதியாக இவள் கூறியது போலவே அந்தச் சண்டை தொடங்கும்வரை, ஏன் அவள் மருத்துவ விடுதியை அடையும்வரை அவளுடைய நாவு வேதனையில் ஒலியெழுப்பவேயில்லை.

எதிரியின் காவலரண் தொடரின் மிக அருகில் சிறு முனகல் சத்தம்கூட அங்கே நிலவிய நிசப்தத்தைக் குலைத்து எதிரியை உசாரடையச் செய்துவிடும் வேளையில், இன்னும் எதிரியை தாக்க சில நிமிடங்களே உள்ள இறுதிக் கணத்திலே தனது அணி எதிரியால் அவதானிக்கப்படக்கூடாது, தன்னால் அன்றைய சண்டை குழம்பிவிடக்கூடாது, என்பதற்காய் தன் அத்தனை வேதனை உணர்வுகளையும் அவள் தனக்குள்ளேயே அடக்கிக்கொண்டாள்.

ஒரு போராளி என்ற வகையில் தனது வேதனையின் வெளிப்பாடுகளை தனக்குள்ளே அடக்கி, உயரிய மன உறுதியை, தியாகத்தை வெளிப்படுத்துவது என்பதற்கும் அப்பால் எவ்வாறு அந்தப் பெண்

# வீர விருட்சத்தி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணால் தன்னிலை மறந்து வேதனையில் மயக்கமடையும் போதும்கூட, தன் வேதனை உணர்வுகளை தனக்குள் ளேயே அடக்கி அமைதிகாக்க முடிந்தது? சாதாரண மனித உயிர்களினால் செய்ய சாத்தியமற்ற அந்தச் செயல் எவ்வாறு அவளிற்கு சாத்தியமாயிற்று?

எதிரியைத் திகைப்பிலாழ்த்திய அந்தச் சமரின் வெற் றியை சாத்தியமாக்கியது, வெற்றிக்காய் வேதனைகளை தாங்கியவாறு பின்னர் மௌனித்துவிட்ட அவளின் நெஞ் சுறுதியே.

மணலாற்று மண்ணில் எதிரி ஏற்படுத்தியிருந்த ஆக் கிரமிப்பு வடிவங்களிற்கு அரணமைத்து நின்றது, கொக் குத்தொடுவாய் இராணுவத்தளம். எங்கள் மக்கள் வாழ்ந்த நிலத்திலிந்து அவர்களை இடம்பெயர வைத்துவிட்டு, அத் துமீறிக் குடியேறியவர்வர்களின் ஆக்கிரமிப்பின் சாட்சிய மாய் இறுமாந்திருந்தது அந்த முகாம்.

28.07.1995 நள்ளிரவு நேரம் எதிரியின் அந்த முகாமை நோக்கி இருளில் கரைந்தவாறு அணியணியாகப் போரா ளிகள் நகர்ந்துகொண்டிருந்தனர். உயர்ந்த மரங்களினூடு 'ஊ' என்ற இரைச்சலிட்டு வீசிய காற்று அச்சப்படவைத்த வாறு அவர்களைக் கடந்து சென்றது.

அது ஒரு தாக்குதலிற்கான நகர்வு. அடர்ந்த காடுகளி னூடு முன்னேறிக் கொண்டிருந்தவர்கள் எதிரியின் முகாமை நெருங்கியிருந்தனர். எதிரியின் முகாமைச் சுற்றிப் பல முனைகளில் நெருங்கிக்கொண்டிருந்த அணிகளில் ஒரு அணியாகத்தான் பெண்கள் படையணியின் அந்தக் குறிப் பிட்ட அணியையும் ஒரு வேவுப்புலி வழிகாட்டி நகர்த்திக் கொண்டிருந்தான்.

தாக்குதல் ஆரம்பமாவதற்குரிய நேரம் நெருங்கியிருந் தது. அவர்கள் தமது தளப்பிரதேசத்தில் இருந்து கணி சமானளவு தூரம் முன்னேறியிருந்தனர். எதிரியின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்தினுள்கூட அவனது கண்களில் மண் ணைத் தூவிவிட்டு வெற்றிகரமாக நகர்ந்து அவனது தடைவரை அண்மித்திருந்தனர். எதிரி தனது முகாமைச் சுற்றி மின் விளக்குகளைப் பொருத்தியிருந்தான். இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்த அந்த மின்விளக்குகளினூடு அவர்கள் தொடர்ந்தும் முன்னேறவேண்டியிருந்தது. அத னால் இப்போது எதிரியால் தெளிவாக அவதானிக்கப்படக் கூடிய நிலையிலிருந்தனர்.

முகாமைச் சுற்றியுள்ள தடைகளை அகற்றி முகா மினுள் நுழைவதற்குத் தேவையான பாதையை ஏற்படுத்து வதற்காய் போராளிகள் சிலர் முட்கம்பிச் சுருள்களினூடு; "டோப்பிட்டோ" குண்டைப் பொருத்திவிட்டு சண்டை தொடங்கும் இறுதி நேரம்வரை காத்திருந்தனர்.

சண்டை தொடங்கிவிட்டது. முதலாவது தடையை தகர்த்துவிட்டு லெப். மேனகாவின் அணி இரண்டாவது தடை யைத் தகர்க்க முயன்றது. அவர்கள் வைத்த "டோப்பிட்டோ" குண்டு வெடிக்காமல் அவர்களை ஏமாற்றிவிட தொடர்ந் தும் முன்னேற முடியாதவாறு சண்டையிட்டுக் கொண்டி ருந்த அணி மீது எதிரி தாக்குதலைத் தீவிரப்படுத்தினான்.

எதிரியை வீழ்த்தியவாறு முன்னேற வேண்டியவர்கள் எதிரியின் சூட்டிற்கு ஒவ்வொருவராய் தம்மை இழந்து கொண்டிருந்தார்கள். மாற்று வழிகள் ஏதும் உடனடியாகச் செயற்படுத்த முடியாத அளவிற்கு எதிரி அவர்களை நோக் கிச் சுட்டுக்கொண்டிருந்தான். நிலமை அங்கே மோச மாகிக்கொண்டிருந்தது.



சொற்ப நேரம் எதிரிக்கு கிடைக்கும் சாதக நிலமைகூட அங்கே எமது மேலாண்மையை தகர்க்கப்போதுமாய் அமைந்துவிடும் என்பதை உணர்ந்திருந்த லெப். மேனகா தனியொருத்தியாய் நிலமையை மாற்றியமைக்கத் துணிந்தாள்.

எதிரி வானில் ஏவிய பராவெளிச்சக்குண்டுகள் ஒளிவீசிக் கொண்டிருந்தன. இன்னும் தகர்க்கப்படாமல் அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாய் நிற்கும் முட்கம்பிச்சுருள் பராவெளிச்சத்தில் மின்னிக்கொண்டிருந்தது. ஒரு விடுதலைப் போராளி சமர்க்களங்களில் தன் அதீத வீரத்தை வெளிப்படுத்துவது இயல்பு. ஆனால் அவள் தன் முயற்சிக்காய் உயிரையும் பொருட்படுத்தாது, உடலின் ஒவ்வொரு உயிர் அணுக்களும் அடையப்போகும் வேதனையை அறிந்திருந்தும் அசாத்தியமான அந்தச் செயலைச் செய்தாள்.

அந்தப் பகுதியில் இருந்த எதிரியின் துப்பாக்கிகள் எல்லாம் அவர்களின் மீதே மையம் கொண்டிருந்தது. சடசடக்கும் எதிரியின் துப்பாக்கி ரவைகளினூடு உடலிலிருந்து குருதி கொப்பளிக்க ஓடிச்சென்று முட்கம்பிச்சுருள் மீது பாய்ந்தாள். இதுவரையும் அவர்களின் முன்னேற்றத்தைத் தடுத்து தடையாக நின்ற கம்பிச்சுருள் நிலத்தோடு நிலமாக நசுங்கிப்போயிற்று. அவளின் உடலின் மேலால் அணிக்கு ஒரு பாதை பிறந்தது. நசுங்கிக்கிடந்த கம்பிகளின்மேலால் அவள் தன் உயிர் கொண்டு உருவாக்கிய பாதையின் ஊடாக அவளைக் கடந்து அவளது தோழிகள் முகாமினுள் பாய்ந்தனர்.

# ன் வித்துக்கள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிங்களப் பயங்கர
# ஒன்றின் ஓராண்டு

## 20.11.1999 மடுத்திருப்பதிப் படு

புனித மடுமாதா தேவாலயத்தில் கடந்த 20.11.1999 அன்று இரவு திட்டமிட்ட வகையில் சிறீலங்கா இராணுவத்தால் கோரப்படு கொலைகள் நடத்தி முடிக்கப்பட்டன. இச்சம்பவத்தில் ஸ்தலத்திலேயே 37பேர் கொல்லப்பட்டனர். பின்னர் அது 44 ஆக அதிகரித்தது. 60 பேர் வரையானோர் படுகாயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். இச்சம்பவமானது உலகெங்கிலுமுள்ள மடுமாதாவினது பக்தர்களுக்கும் மற்றும் பலருக்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

சந்திரிகா தலைமையிலான சிங்களப் பேரினவாத அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் ஆரம்பமான காலத்தில் இருந்து இற்றை வரைக்கும் தமிழர் தாயகம் எங்கும் 1800ற்கும் அதிகமான வழிபாட்டுத் தலங்கள் குண்டு வீசி அழிக்கப்பட்டுள்ளன. தேவாலயங்கள் கோயில்கள் என்பன பெரும் படுகொலைகளை நடாத்தும் சிறீலங்கா அரசபடைகளின் கொலைக்களங்களாக மாற்றப்பட்டுள்ளன. யாழ் யாகப்பர் ஆலயத்தில், நவாலி புனித பேதுறுவானவர் ஆலயத்திலும் நடந்த பெரும் படுகொலைகள் வரிசையில் மடுத்திருப்பதியில் நடந்த கோரமும் இணைந்து கொண்டது.

சிறீலங்கா இராணுவம் தமிழீழத்திலுள்ள இந்து, கிறித்துவ ஆலயங்களை அழிப்பதும் மாசுபடுத்துவதும், கோவில் தேவாலயங்களை இடித்துத் தள்ளுவதும் வழமையான ஒன்றே. வழிபாட்டுத் தலங்களைப் படைத்தங்ககங்களாகப் பாவிப்பதும், விக்கிரகங்கள், சொரூபங்களை அகற்றுவதும் யாவரும் அறிந்ததே. இவையாவும் இனவாத அடக்குமுறையின் ஒரு வடிவமே.

கடந்த 22.03.1999 அன்று ரணகோச-02 நடவடிக்கை மூலம் இராணுவம் மடுத்திருப்பதியைக் கைப்பற்ற முயற்சிகள் மேற்கொண்ட சமயம்- மடுத்திருப்பதி வளாகத்திற்குள் இராணுவம் நுழைவதைத் தடுக்குமாறு ஜனாதிபதியிடம் மன்னார் ஆயரினால் தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் அது செவிமடுக்கப்படாததோடு- அங்கு தங்கியிருந்த மக்களும் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

அதன் பிற்பாடு மடுப்பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக மட்டுமல்ல, இராணுவத்தின் பிரசன்னமான பகுதியாகவும் இருந்தது. மடுத்திருப்பதியின் புனிதத்தைப் பேண சிறீலங்கா அரசு தயாராக இருக்கவில்லை. இங்கு கவனிக்க வேண்டியது என்னவெனில் இது இராணுவ நலன் கருதி நிராகரிக்கப்பட்ட ஒன்றல்ல ஏனெனில் மடுத்திருப்பதிப் பிரதேசம் அன்றைய நிலையில் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருக்கவில்லை. எல்லாவற்றையும்விட இப்பிரதேசத்தை புனித வலயமாக மதித்த விடுதலைப் புலிகள் அமைதி வலயமாகப் பேணி படை நடவடிக்கை எதனையும் மேற்கொள்வதில்லை. மடுப்பிரதேசத்தை இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் கொண்டு வந்தமையும், யுத்தமின்றிப் பெறப்பட்ட அப்பிரதேசத்தைப் பெரும் இராணுவ வெற்றியாகக் காட்ட முற்பட்டமையும் பௌத்த பேரினவாதத்தின் வெளிப்பாடுகளே ஆகும். அத்தோடு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மடுத்திருப்பதியை பின்னணியாகக் கொண்ட தனது நிழற்படத்தை தேர்தலில் பயன்படுத்தியமையும் பௌத்த பேரினவாத வெறித்தனத்தின் கண்ணியமற்ற செயலின் குறிகாட்டி என்றே கொள்ளலாம்.

17.11.1999 திகதிய மன்னார் பெருநிலப்பரப்பில் வீசிய புலிவீரரின் ஓயாத அலைகள் -3இன் அனல் பட்டு மடுவைவிட்டுப் பின்வாங்கிய



மடுத்தேவாலயப் படுகொலையில் கொல்லப்பட்ட சிறுவர்களின் உடல்கள்.



தனது நான்கு குழந்தைகளையும் சிங்களப் படைகளின் கோரத்தனத்திற்கு பறிகொடுத்த தாயாரின் துயரநிலை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாதம்
# நினைவு
## கொலை






தேவாலயத்தில் நடைபெற்ற படுகொலையில் இறந்த மக்களைப் பார்வையிடும் மதகுருமார்.



சிறீலங்காப் படைகளின் ஏறிகணையால் சிதைக்கப்பட்ட தேவாலயத்தின் உட்பகுதி

இராணுவம், கொலை வெறியோடு 20ற்கு மேற்பட்ட கவசவாகனங்களோடு 20.11.1999 அன்று காலை 10.00 மணிக்கு மடுத்திருப்பதிக்குத் திரும்பியது. மடுத்திருப்பதியைச் சூழ வசித்த மக்கள் அனைவரையும் தேவாலயத் திற்குள் இரவு தங்கவேண்டும் எனக் கட்டளை போட்டது. ஆண்டாண்டு காலமாக தொடர் சிங்களப் பயங்கரவாதத்தின் கோர வீச்சினை தாங்க முடியாமல் அன்னையின் மடியில் தஞ்சமடைந்திருந்த மக்கட்கூட்டம் கலக்கத்துடன் ஆலயத்தில் முடங்கியது. தமிழீழத்தின் பல பாகங்களிலும் காலங்காலமாக சொத்து சுகநலன்களோடு உற்றார் உறவுகளோடு வாழ்ந்த மக்களை நிர்க்கதியாக்கியது சிங்களப் பேரினவாதம். இனிவரும் இன்னல்களிலிருந்து மடுமாதா காப்பாற்றுவார் என்ற ஒரே நம்பிக்கையில் உயிரை மட்டுமே கையில் வைத்திருந்த மக்களை வேட்டையாட நேரம் குறித்தனர் சிங்கள வெறியர். 20.11.1999 அன்று முன்னிரவு 11.00 மணிக்கு இராணுவத்தின் யுத்த தாங்கிகளில் இருந்த பீரங்கிகளின் சுடுவாய்கள் அப்பாவிகள் படுத்திருந்த தேவாலய முன்னரங்க மண்டபத்தின் மீது இலக்கு வைத்து நிறுத்தப்பட்டு குண்டுமாரி பொழிந்தன. ஏதுமறியா ஏதிலிகளின் அவலக்குரல் பரலோகத்தை எட்டுமாற்போல ஆலயத்துள் எழுந்தது.

இராணுவம் படுகொலை நோக்கைத் திட்டமிட்ட வகையில் மடுத் திருப்பதிக்குள் அத்துமீறி நுழைந்து புரிந்துவிட்டுச் சென்றிருக்கின்றது. படுகொலைக்கான காரணிகள் பல இருந்துள்ளன. சிங்கள பௌத்த வணக் கஸ்தலங்களைத் தவிர இலங்கைத் தீவில் வேறு வணக்கஸ்தலங்களுக்கு அவற்றின் புனிதத்தன்மைக்கு மதிப்பளித்தல்கூடாது என்ற சிங்களப் பேரினவாதத்தின் குறுகிய எண்ணமே மடுத்திருத்தலத்தின் மீது தாக்குதல் நடத்தத் தூண்டியது. இதைவிட இலங்கைத்தீவில் தமிழரை அழிப் பதையே நோக்கமாகக் கொண்ட சிங்கள அரசும், அரச படைகளும் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அப்பாவித் தமிழர்களை ஈனத் தனமான முறையில் கொன்றுள்ளனர்.

இதற்கு மடுத்திருப்பதி திறந்த களமாய் இருந்துள்ளது. மாதாவின் கருவறையில் ஒதுங்கிய தமிழர் வேட்டைப் பொருளாயினர். ஏனெனில் மடுத்திருப்பதியின் புனிதத்தை மதிக்கும் புலிகள் அப்பகுதிக்கு வந்து தம் மீது தாக்குதல் நடத்தப் போவதில்லை என்பதை சிங்களப்படை நன் குணர்ந்திருந்தது. இந்நிலையிலே நிராயுத பாணிகளாக ஏதுமறியாத வர்களாக மடுத்திருப்பதியின் உள்ளே தஞ்சமடைந்த மக்கள் மீது வாளேந் திய சிங்கங்கள் மரண விளையாட்டில் ஈடுபட்டன. தனது சரீரமாகிய அப் பத்தையும் இரத்தமாகிய பானத்தையும் யாருடைய மீட்பின் தீர்வாக இறை மகன் பங்கிட்டாரோ அவர்களின் சரீரமும் இரத்தமும் அழிந்து புனித முற்றத்தில் பழி படிந்தது. 13 சிறுவர்கள் உட்பட 44 பொதுமக்களின் குருதி யில் மாதாவின் திருமுடி சூடிய ஒளிவட்டம் உருகி வழிந்து இருள்மண்டி யது. 400 வருடகாலப் பாரம்பரியம் மிக்க மடுத்திருப்பதியில் இரத்தச் சக தியை தோற்றுவித்து மகிழ்ந்தனர் இரு குழந்தைகளின் தாயான சந்திரி காவின் சிப்பாய்கள். மடுத்திருப்பதியில் ஒரே தடவையில் தன் நான்கு குஞ்சுகளைப் பறிகொடுத்து கதறிய தாயின் கூக்குரலுக்கும் 365 நாட்கள் கடந்துவிட்டன.

தறுக்கர் தறித்த உறவுகளின் நினைவுத்துயரில் தோய்ந்து இலக்கு நோக்கிய எம் பயணம் தொடரும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவலங்கள்

-தமிழவள்

கைகளில் குழந்தைகளுடன் நிற்கதியான 25இற்கும் மேற்பட்ட இளம் பெண்கள். பெண்கள் அபிவிருத்தி புனர் வாழ்வு நிறுவனத்தினரால் பராமரிக்கப்படும் "மலர்ச்சோலை இல்லம்" சொல்கின்ற செய்திகள் இங்கே...

'மலர்ச்சோலை' மனத்திற்குள் வசந்தம் பரவச் செய்தது பெயர் மட்டுமே. மலர்ச் சோலையுள் நுழைந்து பார்த்தபோது அங்குள்ளவர்களோடு கலந்துரையாடிய போது சிரிப்பையே மறந்தவர்களாகி நிற்கின்ற பெண்களின் துயரம், இருண்டு போன எதிர்காலம் பற்றிய அவர்களது ஏக்கம், ஆண்- பெண் உடலுறவின் விளைவை, தான் மட்டுமே தாங்கவேண்டிய பெண்மையின் அவலம் இதயத்தை உலுப்பவே செய்கின்றது.

ஆக்கிரமிப்பால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள். அதனால் உருவான நெருக்கடியான வாழ்விடங்கள் பெண் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையே காட்டாத பெற்றவர்கள். சட்டங்கள் தொடர்பான தெளிவின்மை. சுகாதார அறிவின்மை, வறுமை, எவரையும் எளிதில் நம்பிவிடும் இயல்பு போன்றவை தமது பாலுணர்வுகளுக்கு வடிகாலாக மட்டுமே பெண்களைப் பயன்படுத்த நினைக்கும், சமூகச் சீரழிவுக்காரணிகளான சில ஆண்களுக்கு சாதகமான வாய்ப்பை வழங்கி விடுவதால் மலர்ச்சோலைகளின் உருவாக்கம் தவிர்க்கமுடியாததாகி விடுகின்றது.

காதலிக்கும் போதே தாய்மையடைந்து காதலனால் ஏமாற்றப்பட்டவர்கள். பெற்றவர்களின் சம்மதத்துடனும் சம்மதமின்றியும் சோறு கொடுக்கும் திருமண முறைமூலம் மணமாகி தாய்மையடைந்தபின் கைவிடப் பட்டவர்கள், வேலைக்கு நின்ற வீட்டின் (குடும்பத்) தலைவனின் பாலியல் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டு கையில் குழந்தையுடன் நிற்பவர். ஏற்கனவே திருமணமானவன் என்பதை அறியாமல் திருமணம் செய்து விட்டு நிற்கதியாகி நிற்பவர்கள், எனப் பல வழிகளில் பாதிப்பிற்குள்ளானவர்களாக இருக்கும் இந்தப் பெண்கள் அனைவருமே அடிப் படையில் பாலியல் தேவைகளுக்குப் பயன் படுத்தப்பட்டு வீதியில் விடப்பட்டவர்களே.

சாந்திக்கு 32 வயது எழுதப்படிக்கத் தெரியாதவர். பெற்றவர்களற்ற, உறவென்று சொல்ல ஒருவருமற்ற பெண். எதிர்பாராமல் சந்தித்துப் பழகிய ஒருவருடன் உறவு ஏற்பட்டு குழந்தையும் உருவாகிவிடுகின்றது. குழந்தை உருவான பின்னர்தான் அவர் ஏற்கனவே திருமணமானவர் என்ற உண்மை தெரியவருகின்றது. தான் ஏமாற்றப்பட்டு விட்டதை அறிந்தவுடன் காவல்துறைக்கு அறிவிக்கின்றார். ஆனால் அந்த ஆண் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றுவிட்டதால் தற்போது 2 வயதுப் பெண் குழந்தையுடன் மலர்ச்சோலையில்.

19 வயது விமலாவிற்குச் சட்டப்படியான திருமணப்பதிவு இல்லாமல் பெற்றோர்களே திருமணம் செய்து வைக்கின்றனர். விமலாவின் வயிற்றிலே குழந்தை உருவான பின்னரே அவர் ஏற்கனவே திருமணமானவர் என்பது தெரியவருகின்றது. தான் ஏமாற்றப்பட்டுவிட்டதும் தெரியவருகின்றது. வறுமையின் பிடியில் பெற்றோர், கணவருடன் சேர்ந்து வாழ்வது சாத்தியமுமில்லை, விருப்பமுமில்லை. எனவே விமலா மலர்ச்சோலையில்.

ராணியின் குடும்பம் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வது. எனவே ராணி சிறுவயது முதற்கொண்டே வசதிபடைத்த ஒரு வீட்டில் வேலைக்காகத் தங்கி இருக்க வேண்டிய நிர்ப்பந்தம். கல்வியறிவே அற்ற ராணிக்கு கையெழுத்து மட்டுமே வைக்கத் தெரியும். அவளது அறியாமையையும், வறுமையையும் தனது பாலியல் வேட்கைக்காகப் பயன்படுத்த குடும்பத்தின் தலைவர் திட்டமிடுகின்றார். விளைவு... 3 வயதில் ஒரு மகனுடன் ராணி. நீதிமன்றுக்குப் போய் நீதி கேட்கப்பயப்படும் ராணிக்கு அந்தப் பெரியமனிதர் தன்னைக் கைவிடமாட்டார் என்ற அபார நம்பிக்கை. ஆனால் அவரோ தனது மனைவி பிள்ளைகளுடன் கொழும்பில்.

ஜெயா குடும்ப வறுமை காரணமாக 28 வயதில் 42 வயதான ஒருவரை திருமணம் செய்து கொண்டவர். சட்டரீதியான திருமணப்பதிவு இல்லாத திருமணம். 3 1/2 வயதில் ஒரு ஆண்குழந்தை, திருமணமான சில நாட்களிலேயே கணவனின் சந்தேகங்களிற்கும் அடிஉதை சித்திரவதைகளுக்கும் ஈடுகொடுக்க வேண்டிய தேவை. அத்தனையும் பொறுத்து ஒரு குழந்தை உருவான பின்னரே அவர் ஏற்கனவே திருமணமானவர் என்ற விபரம் தெரியவந்தது. அத்தோடு வேறு ஏதோ குற்றச்செயலுக் காக அவரைக் காவல்துறை கைது செய்ததும் சேர்ந்து வாழ்வதே வேண்டாம் என்ற நிலையில் ஜெயா.

குமுதாவிற்கு 28 வயது. வீட்டிற்குத் தெரியாமல் காதலிக்கத் தொடங்கி உடலுறவு வரையும் சென்று விட்டவர். பலன் வயிற்றில் சிசு. என்ன செய்வதென்று புரியாத நிலையில் குழந்தைக்குக் காரணமானவனிடம் கேட்ட போது வீட்டில் இருக்கும் நகைகள் எல்லா வற்றையும் எடுத்துவா வவுனியா போவம் என்றிருக்கிறார். அங்கு போனதும் வெறு மனே தெருவில் விடப்படுவேன் என்பதை உணர்ந்து மறுத்துவிட அவர் தனது சகோதரிகளுடன் வவுனியா சென்றுவிட்டார். குழந்தையை எங்கேனும் விட்டுவிட்டு வா என்று குடும்பத்தினர் கேட்க மறுத்துவிட்டு குழந்தையை வளர்ப்பதற்காக மலர்ச்சோலையில்.

நந்தினிக்கு குழந்தை உருவான பின்னரே காதலன் ஏற்கனவே திருமணமானவன் என்பது தெரியும். நம்பிக்கைக்குத் துரோகம் செய்துவிட்டாரே என்ற ஆதங்கத்தில் அவர் எழுதிய கடிதங்கள் எல்லாவற்றையும் எரித்துவிட்டு பின்னர் நீதிமன்றம் வரை பிரச்சனை போனபோது குழந்தைக்குத் தந்தை அவர்தான் என்பதற்குச் சாட்சிகள் இல்லாமற் தவித்து இன்னற்பட்டு இறுதியில் 1 1/2 மாத சிறையும் குழந்தைக்கு 60,000 ரூபாவும் அவருக்குத் தண்டனையாக விதிக்கப்பட்டது. இங்கும் "குழந்தையை எங்கேனும் விட்டு விட்டு வா" என்று பெற்றோர் கேட்டபோது மறுத்துவிட்டு தான் செய்த தவறுக்கு குழந்தை தண்டனை அனுபவிக்கக்கூடாது என்ற எண்ணத்துடன் நந்தினி.


உஷாவிற்கு உறவினர்களால் செய்து வைக்கப்பட்ட திருமணம், ஆனால் திருமணப்பதிவு இல்லை. கையில் ஒரு பெண்குழந்தை. கணவன் எதுவுமே சொல்லாமல் வவுனியா சென்று வேறு திருமணம் செய்துவிட்டார். தன்னை இப்படி நடுத்தெருவில் விட்டுப் போனதற்கு தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும் தண்டனையைக் கொடுத்து என்ன செய்யிறது? குழந்தையை நல்லபடியா வளர்த்துப் படிப்பிக்க வேணும் என்பது மட்டும்தான் உஷாவிற்கு.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொருளாதார வளம் தேடி தாய் வெளிநாடு ஒன்றிற்குச் சென்றுவிட புஸ்பா வீட்டில் தனிமையில். தனிமையின் தாக்கம் நட்பு என்று சொல்லிக் கொண்டு வந்த ஒருவனிடம் அதீத நெருக்கத்தை ஏற்படுத்திவிட காதல் என்ற பெயரில் அவனுடன் உடலுறவு வரை கொண்டு சென்று விடுகின்றது. வயிற்றில் குழந்தை உருவான பின்னரே காதலனிடம் திருமணம் பற்றிய பேச்சை எடுக்கின்றாள். என்ரை குழந்தை என்று அவ்வளவு நிச்சயமாய் எப்படிச் சொல்வாய்? என்ற கேள்வியே அவளுக்கு பதிலாகக் கிடைக்கின்றது..... இன்று தனது மகனுடன் புஸ்பா மலர்ச்சோலையில்.

மலர்ச்சோலையில் உள்ள பெண்களில் ஒருசிலரின் அறிமுகங்களே மேற் கூறப்பட்டவை. குறிப்பிட்ட ஆணைப்பற்றி எந்த விபரமுமே தெரியாமல் அவனைப்பற்றி பூரணமாக அறிந்து கொள்ள முன்னரே காதல் வலையில் வீழ்ந்து நம்பிக்கை என்ற பெயரில் உடலுறவு வரை சென்றுவிடுகின்ற பெண்களின் பலவீனம், தமது பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைக்கும்போது அந்த ஆணைப்பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பொறுப்புணர்வு அற்ற அல்லது அறியாமை நிரம்பிய பெற்றவர்களின் நடவடிக்கைகள். சட்டரீதியான பாதுகாப்பான திருமணப்பதிவு பற்றிய அறிவின்மை போன்றவை மேற்குறிப்பிட்ட பெண்களின் அவல வாழ்விற்குக் காரணமாகிவிடுகின்றது. அறியாமையாலும் பாலியல் பலவீனங்களாலும் ஆரோக்கியமான சமூகவாழ்வை இழந்து நிற்கும் பெண்களின் அவலம், அவர்களின்,வாரிசுகளாக உருவெடுத்து நிற்கும் மழலைகளின் எதிர்காலம் என்பன வருங்கால சமுதாயத்தின் முன் எழுந்துள்ள சவால்களாகவே முகம் காட்டுகின்றன.

சிறுவயதில் ஏற்படும் உளத்தாக்கங்கள் பெரியவர்களாகும்போது வக்கிர சிந்தனைகளாகவும் தீயசெயற்பாடுகளாகவும், பயந்த சுபாவங்களாகவும் பலவீனமான மனநிலைகளாகவும் உருவெடுக்கும் என்பது குழந்தை உளவியலாளர்களின் கூற்று. நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று, பத்துமாதம், ஏழுமாதம், மூன்றுமாதம் என எல்லா வயதுகளிலும் ஓடியும் தத்தியும், தவழ்ந்தும், மழலைபொழியும் பிஞ்சுகள் மலர்ச்சோலையின் மகிழ்வானதோர் விடயம். எனினும் வாழ்வின் அவலங்கள் ஏதும் புரியாத தம் பிறப்பிற்குக் காரணமானவர்களால் தாமும் உதாசீனப் படுத்தப்பட்டுவிட்டோம் என்பதை அறியாத அந்தப் பிஞ்சு மலர்களின் துயரற்ற வாழ்வு எவ்வளவு நாட்களுக்கு என்பது எம்முன் உள்ள கேள்விகளில் ஒன்று.

விபரம் தெரியாத வயது, தமக்கிழைக்கப்பட்ட அநீதி புரியாத பருவம், தாய் முகம் மட்டுமே தமக்கான உலகமாகக் கொண்டு வளரும் காலம். இவற்றையெல்லாம் தாண்டி குடும்ப உறவின் ஆழம், அதன் அங்கத்தவர்கள், தந்தையின் அரவணைப்புடன்கூடிய வழிநடத்தல், சமூகத்தின் கௌரவமான பார்வை என்பவை பற்றியெல்லாம் அறிந்து கொள்ளும் வயது வரும்போது, இவை எல்லாம் தமக்கு மறுக்கப்பட்டவை என்பதைத் தெரிந்து கொள்ளும்போது, இந்த வண்ணமலர்கள் வாசம் வீசுமா? அல்லது தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக தீயாய் எரிக்குமா? என்பவை காலத்தால் மட்டுமே பதில் சொல்லக்கூடிய கேள்விகள்.

பெண்ணை வெறும் பாலியல் பண்டமாகவே கருதி தம் பாலியல் உணர்வுகளைத் தணித்துக் கொண்ட ஆண்களின் வாரிசுகளான இந்தக் குழந்தைகளின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கி அவர்களைச் சிறந்த பிரஜைகளாக உருவாக்குவதை சமூகத்தை ஒவ்வொரு அங்கமும் தனது கடமையாக ஏற்குமெனில் இந்தச் சிறுவர்களின் எதிர்காலம் பற்றிய பயம் கற்பூரமாய்க் கரைந்து போகலாம்.

இந்த அவலங்களை சீர் செய்வதில் சமூகத்தின் பணி ஒருபுறம் இருக்க சம்பந்தப்பட்ட பெண்களின் பங்கும் இதில் பாரியளவே.எந்தத் தவறையும் அல்லது துரோகத்தையும் புரிந்துவிட்டு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் சென்றுவிடும் ஆண்களின் தப்பித்தல் உத்தி காரணமாக சட்டத்தின் பிடியில் அவர்களை சிக்க வைக்க முடியாதுபோவது துரதிஷ்டம் எனினும் இயலாமையால் ஏற்பட்ட கோபம், இவனோடு இனி எனக்கென்ன வாழ்வு என்ற ஆக்கிரோசம் எல்லாம் சேர சட்டத்தின் முன் சாட்சிகளாக்கப் படக்கூடிய படங்கள், கடிதங்கள் போன்றவற்றை எரித்து அல்லது அழித்து தமதும், தமது குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய இவர்களது திட்டமிடலின்மையை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. சட்டத்தினால் வாழ்வைச் சீர்திருத்த முடியாது உண்மை எனினும், தம் குழந்தைகளிற்காக அந்த ஆண்களிடமிருந்து, சட்டத்தின் உதவியுடன் கிடைக்கக்கூடிய பொருளாதார வளத்தைக் கூட இழக்கின்ற நிலைக்குத் தள்ளப்படுவதும் குறிப்பிட்ட அந்த ஆண்கள் சமூகத்தில் உள்ள இன்னொரு பெண்ணின் வாழ்வைச் சீரழிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவிடாது பாதுகாக்க தடையாக இருப்பதும், இத்தகைய தமது தனிப்பட்ட பலவீனத்திலேயே என்பதைப் பெண்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமது அவலங்களுக்குக் காரணமானவர்களுடன் போராடவேண்டும் என்ற எண்ணமோ, நீதி கேட்டு ஆர்ப்பரிக்கும் சிந்தனையோ இந்தப் பெண்களில் பலரிடம் இன்னமும் இல்லை. அந்த ஆண்களைச் சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதாலோ, தண்டிப்பதாலோ தமது வாழ்வில் எந்த மாற்றமும் வந்துவிடப் போவதில்லை. அழிந்து போன வாழ்வு திரும்பவும் கிடைக்கப் போவதில்லை என்ற சுய பச்சாதாபம் (கழிவிரக்கம்) இவர்களை அழிக்கும் ஒரு கிருமியாகவே தொற்றியுள்ளது. வெறிபிடித்தலையும் நாயைக் கொல்லமுடியாமல் விட்டாலும்கூட, ஒரு கல்லைத்தானும் எறிந்து தன் எதிர்ப்பையேனும் காட்ட முடியாதவர்களாக இருக்கும் இவர்களின் இயல்பு கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டிய விடயமாகவே இருக்கின்றது.

தம் கடந்தகாலவாழ்வை விளக்கும் பொழுதில் அந்த வார்த்தைகளுள் உள்ள வேதனை, ஆதங்கம், ஒன்றும் தெரியாமல் போய் விழுந்துவிட்டோமே என்கின்ற ஏக்கம் என்பவை அவர்களை நேரில் சந்திக்கும் போதுமட்டுமே புரிந்து கொள்ளக்கூடியவை. பெண்மை என்ற குணத்தின், புதிரின் அதிசயத்தின் ஒரு வெளிப்பாடான தாய்மை என்கின்ற உயரிய குணாம்சம் அத்தனை வேதனைகளையும் சுமந்து இவர்களை வாழ வைக்கின்றது. சரியோ தவறோ தமது குழந்தைகளின் உருவாக்கத்திற்கு தாமும் ஒரு கருவியாக இருந்துவிட்டதனால் தம் குழந்தைகளுக்காக எத்தனை இடர்களையும் தாங்கும் நிர்ப்பந்தம் இவர்களுக்கு. இவர்களின் நிலையில் இருந்து நோக்குகின்றபோது பெண்களுக்கு





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டுமே உள்ள தாய்மைப்பண்பு இயற்கையின் வரமா? அல்லது சதியா? என்ற கேள்வி விஸ்வரூபமாய் எழாமல் இல்லை.

இந்தப் பெண்களிற்கான கல்வி, பொருளாதார வாய்ப்புக்கள், உலக அறிவு, கொடுமை கண்டு பொங்கும் போர்க்குணம், நீதிக்காகப் போராடும் வல்லமை, தம் வாழ்வின் மீதான பற்றுதல், மழலைகளின் வளமான எதிர்காலம் போன்றவை மலர்ச்சோலை நிர்வாகத்தின் முன்நிற்கும் பாரிய பணிகள். இவர்களின் வாழ்வை செப்பனிட நீண்ட காலம் எடுக்கலாம். கரும்பாறையில் சிற்றுளி போடும் வேலைதான் இதுவெனினும் பொறுமையோடும், வருங்காலச் சமுதாயம் பற்றிய பொறுப்புணர்வோடும் ஆற்ற வேண்டிய அரும் பணியிது.

'குடும்பம்' பெண்விடுதலைக்குத் தடையாக உள்ளவற்றில் இதுவும் முக்கியமான தொன்றென்று மேற்குலகிலும் இங்குமாக ஆங்காங்கே சில அபிப்பிராயங்கள் எழுகின்ற போதிலும், பெண்ணை இரண்டாம் தரப்பிரஜையாக்கும் கருத்துக்களை உள்ளடக்கிய சில குணாம்சங்கள் இதிலிருந்து களையப்படுமிடத்து உலகின் அற்புதமான அமைப்பு இதுவாகும். அதுவும் ஆழமான அன்புறவோடும் புரிந்து கொள்ளல்களுடனும் கூடியதாய் அமைந்துவிட்டால் அதுவே அதி அற்புதமும் ஆகிவிடுகிறது. அந்த அமைப்பினூடே வளர்ந்துவரும் எதிர்காலச் சந்ததியே இனிமையான ஓர் தேசத்தின் உயிர்நாடியாக முடியும். ஏமாற்றுப் பேர்வழிகளால் வாழ்வு சிதைக்கப்பட்ட மலர்ச்சோலை பெண்களில் சிலர், தம்மைப்பற்றி முழுமையாக அறிந்து கொண்டு, சரி பிழைகளோடு, தம்மையும் குழந்தைகளையும் ஏற்றுக் கொள்ளும் ஆண்களுடன் இணைந்து புதிய வாழ்வமைக்க விருப்பம் கொண்டவர்களாக இருப்பது முற்போக்குச் சிந்தனையும் சமூகப் பற்றுணர்வும் மிக்க இளைஞர்களுக்கு முன் ஒரு விண்ணப்பமாகவே அமைகிறது. இவர்கள் புதிய வாழ்வில் அடி எடுத்து வைக்க இளைஞர்கள் சிலரேனும் முன்வரக் கூடுமெனில் ஒரு சிலரின் வாழ்விலேனும் வசந்தம் வீசலாம். அற்புதமான குடும்பம் அவர்களுக்கு அமையலாம்.

ஒரு புதிய யுகத்தின் ஆரம்பத்தில் தமிழீழத்திலும் சரி உலகிலும் சரி பெண்கள் வியத்தகு வளர்ச்சியோடு நிமிர்ந்து நிற்கும் மகிழ்ச்சியான பொழுதிலும் மலர்ச்சோலை களுக்கான தேவைகளும் ஆங்காங்கே உள்ளதெனினும் செய்தி கசப்பான உண் மையாகவே முகத்தில் அறைகிறது. இனி வரும் காலங்களிலேனும் இத்தகைய அவலங்கள் எம் மண்ணில் நடந்தேறிவிடக் கூடாதென்பதில் ஒவ்வொருவரும் உறுதி யாகச் செயற்படுவார்களெனில் இவ்வாறான மலர்ச்சோலைகளின் உருவாக்கம் தேவையற்றதாகலாம். பெண்களின் அவலங்கள் முடிவில்லையா? என்பது சமூகத்தின் கைகளில்.

# உச்சத்தை நோக்கி...

-சூரியநிலா

இனம் ஒன்றுதான்
ஆனால் சாதிகள் இரண்டு
சாதிகள் ஒவ்வொன்றிற்கும் நீதிகள் வேறு
இது எவ் வகைக் கட்டமைப்பு
என்று புரியாமலேயே இயங்கும்
பிரமாண்டமான உலகின் அசைவை
ஒரு கம்பியால் சாதாரணமாக
நகர்த்திக் கொண்டிருக்கிறது வினாடி முள்

✠ ✠ ✠

இந்த விநாடி முள் அசைய ஆரம்பித்தபோது
அமீபாவிலிருந்து அவதரித்து
நீரில் பிறந்து விண்ணில் பறந்து
மரங்களில் இருந்து மண்ணுக்கு
வந்தவள்தான் நானும்
எனது உடலும் எலும்புக் கூட்டிற்குள்
தசையையும் நரம்பையும் இணைத்துக்
குழைத்து
தோலினால் போர்த்தப் பட்டதுதான்.
என்னிடமும்
உழைக்கும் இரு கரங்களும்
சளைக்காத இரு கால்களும்
உறுதியான மனமும் உள்ளன.
மனிதம் தொடும் உச்சங்கள்
சாதனைச் சிகரங்கள்
இவற்றைத் தொட்டுவிட
என்னாலும் முடியும்.
ஆனாலும் என்னால் முடியாத
பல செயல்கள் இருப்பதாக
ஆதிக்க வர்க்கம் அடித்துரைக்கின்றது
இது ஒரு உளவியல் பிரச்சினை
சுதந்திரமாய்ச் சிறகுவிரிக்க
எனக்கு அனுமதியளித்தால்
அதன் சுடு கதிர்களையும் தாண்டி
சூரியனை நான் தொட்டுவிடலாம்
என்ற பயம்தான்
இதன் உள்ளார்ந்த காரணம்
இதனை நான் உணர்ந்த பின்னர்
இனிமேல் எந்தக் கருத்துலகமும்
என்னை ஆக்கிரமிக்க முடியாது

✠ ✠ ✠

இப்போது ஒன்றை என்னால்
உணர்ந்து கொள்ள முடிகிறது
நானும் அனுமதித்த படியாலேயே
அடக்குமுறை என்னை ஆக்கிரமித்தது.
எனக்குள் மென்மையைப் புகுத்தி
என்னைப் பலவீனப்படுத்தி
எனது திறமைகளை மழுங்கடித்த
நிலவுடமைச் சமூகத்திற் கெதிராய்
இப்பொழுதுதான் நான் நிமிர்ந்திருக்கிறேன்
தட்டிப் பறிக்கப்பட்ட எனது உரிமைகளை
எட்டிப் பிடிக்கும் வரையும்
பேசுவதற்கு எனக்கு நேரமில்லை

✠ ✠ ✠

மென்மையும் தண்மையும்
எனது பண்புகள் மட்டுமே எனப்பட்டன
அதனால்
எனது வன்மையையும் வெம்மையையும்
வெளிப்படுத்த
காலம் எனக்குக் களம் அமைத்துத்
தந்திருக்கிறது.
சாவை எனது சட்டைப் பைக்குள்
பாதுகாத்தபடி
இயற்கையும் செயற்கையும்
இணைந்திழைக்கும் கொடுமைகளை
பிரிவுத் துயர்களை இழப்புக்களை
இது போன்ற இன்னும் பலவற்றை
செங்களங்களில் சந்தித்தபடி
எனது இனத்தின் தனித்துவத்தை
நிலைநிறுத்த
பூதங்கள் ஐந்தையும் எதிர்த்து
புலன்களை அதற்காய் அடக்கி
பொறிகளில் தீ சுமந்து
தீ (மை) யை எதிர்க்கும் தீயாய்
தகித்துக் கொண்டிருக்கிறேன்
அணுத்துகளாகிக் காற்றில் கலக்கவும்
என்னால் முடியுமென்பதால்
இப்பொழுது உலகு அறியும்
என்னால் முடியாதது எதுவும் இல்லை
என்பதை.

✠ ✠ ✠

இயற்கையின் இயல்புகளில் இணைந்தபடி
தோளிலணைத்திருக்கும் துப்பாக்கியுடன்
எதிரியை நோக்கி நடந்தபடியே
எனது சிறகுகளையும் விரித்துக்
கோதிக்கொள்கிறேன். ஏனெனில்
விடியப்போகும் எனது தேசத்தின்
விடியலின் பின்
சாதனை உச்சத்தை நோக்கிய
ஒரு உன்னத பயணம்
எனக்காய்க் காத்திருக்கின்றது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழத் தேசியத் தலைவர் - நோர்வே நாட்டுப் பிரதிநிதிகள் சந்திப்பு

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் அதற்கான அக புற நிலைகள் குறித்தும் தமிழீழத் தேசியத் தலைவரும் நோர்வேப் பிரதிநிதிகளும் கலந்துரையாடினர்.

பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்னால், பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டு, இராணுவ நெருக்குவாரங்கள் நீக்கப்பட்டு, ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, தமிழர் தாயகத்தில் இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார் தமிழீழத் தேசியத் தலைவர்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் 1.11.2000 அன்று மாலை வன்னியில் நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளைச் சந்தித்து, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் பற்றியும், புறநிலைகள் பற்றியும் அவர்களுடன் கலந்துரையாடினார். உறுதியான தளத்திலிருந்து சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு போர் நெருக்கடி தணிக்கப்பட்டு, இராணுவ ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை உருவாக்கப்பட வேண்டுமென்பதை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் நோர்வேப் பிரதிநிதிகளிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவர் திரு. எரிக் சுல்கைம், கொழும்பிலுள்ள நோர்வேயின் தூதுவர் திரு. ஜோன் வெஸ்ட்பேர்க், நோர்வே வெளிநாட்டமைச்சைச் சேர்ந்த செல்வி .கேர்ஸ்டி ரொம்ஸ்டால் ஆகியோரைக் கொண்ட நல்லெண்ண தூதுக்குழு 31.10.2000 அன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பெருநிலத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டது. வன்னியில் நிலவும் உண்மை நிலவரத்தை நேரில் கண்டறியும் நோக்கத்துடன் அங்கு சென்ற நோர்வேப் பிரதிநிதிகள், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களை 1.11.2000 அன்று மாலை மல்லாவியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற் செயலகத்தில் சந்தித்து உரையாடினர். இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. சங்கர் ஆகியோரும் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடல் இரு மணித்தியாலங்கள் வரை நீடித்தது.

விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசிற்கும் மத்தியில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் பற்றி நோர்வேப் பிரதிநிதிகள் தேசியத் தலைவர் பிரபாகரனுடன் கலந்துரையாடினர்.

"சந்திரிகா அரசு சமாதானம் பற்றியும், சமாதானப் பேச்சுக்கள் பற்றியும் வாயளவில் பேசுகிறதே தவிர, உண்மையில் இந்த அரசாங்கத்திற்கு சமாதானத்திலும், அரசியற் தீர்விலும் நம்பிக்கை இல்லை. அனைத்து லகச் சமூகத்தை ஏமாற்றும் நோக்குடனேயே சந்திரிகா அம்மையார் சமாதான முகமூடி அணிந்து நடிக்கிறார்" எனத் தேசியத் தலைவர் அவர்கள் நோர்வே பிரதிநிதிகளுக்கு எடுத்து விளக்கினார்.

சந்திரிகா அரசு இராணுவத் தீர்வையே நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகிறதென்றும், தமிழர் தாயகத்தை இராணுவரீதியாக ஆக்கிரமித்து, தமிழர்களை அடிமை கொள்வதே அரசின் அடிப்படையான கொள்கையாக அமைந்துள்ளதென்றும், அரசாங்கத்தின் சகல நடவடிக்கைகளும், இந்த யதார்த்த உண்மையை எடுத்து விளக்குவதாக இருப்பதாகவும் தலைவர் அவர்கள் எடுத்துரைத்தார்.

சமாதானத்திற்கான வாய்ப்புக்கள் பற்றி விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை விளக்கிய தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு போர் நெருக்கடி தணிக்கப்பட்டு இயல்பு நிலை உருவாக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினார். முதலில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட வேண்டுமென்றும், இராணுவ நெருக்குவாரங்கள் நீங்கி, ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்றும் தமிழீழத் தேசியத் தலைவர் வலியுறுத்திக் கூறினார். சிநேகபூர்வமாக நடைபெற்ற இச்சந்திப்பு ஆக்கபூர்வமாக அமைந்ததாக விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடச் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.



தமிழ தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓராண்டு நிறைவில் ஓயாத அலைக தொடர்ந்து செல்லும் விளைவுகளும்

## ஜெயராஜ் தமிழீழம்

இலங்கையில் இராணுவ - அரசியல் வரலாற்றில் பல திருப்பங்களுக்கும் மாற்றங்களுக்கும் காரணியாக அமைந்த ஓயாத அலைகள் -3 நடவடிக்கை ஆரம்பமாகி ஓராண்டு நிறைவுற்றுவிட்டது. இருப்பினும் அதன் விளைவுகளே இன்றைய இராணுவ அரசியல் செயற்பாடுகளை தீர்மானிக்கும் ஒன்றாக உள்ளது.

சுமார் ஏழு மாதங்கள் வரையில் நீடித்த இத்தாக்குதல் நடவடிக்கையானது விடுதலைப் புலிகளுக்கு இராணுவ - அரசியல் ரீதியில் பெற்றுக்கொடுத்த அங்கீகாரம், விடுதலைப் புலிகள் குறித்த மதிப்பீட்டில் ஏற்படுத்தியுள்ள மாற்றம் என்பன இலங்கையின் எதிர்கால இராணுவ - அரசியல் வரலாற்றை நிர்ணயம் செய்யும் சக்தியாக விடுதலைப் புலிகள் உள்ளனர் என்பதை உறுதி செய்தது.

"விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இறுதிக்காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது" "யுத்தத்தில் 90 சதவீதத்திற்கும் அதிகமான வெற்றி பெற்றாகிவிட்டது" "விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் மிகச்சிறிய நிலப் பகுதி மட்டுமே உள்ளது"; "விடுதலைப் புலிகள் விரைவில் பலமிழந்த சிறிய கெரில்லா குழு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவார்கள்" என சிறீலங்கா ஆட்சியாளர்களும், இராணுவத் தலைமைப்பீடமும் அறிவிப்புக்கள் செய்து கொண்டிருக்கையில், "விடுதலைப் புலிகள் ஓர் இராணுவ சக்தியாகவோ அன்றி அரசியல் சக்தியாகவோ செயற்படும் சக்தியை விரைவில் இழந்துவிடக்கூடும். தமிழர்தாயகம் என்ற அவர்களின் சித்தாந்தம் பலவீனமாகிப் போவது தவிர்க்க இயலாததாகிவிடும்" என சில இராணுவ ஆய்வாளர்கள் ஆருடங்களும், அபிப்பிராயங்களும் தெரிவித்துக் கொண்டிருந்த நிலையில் ஓயாத அலைகள் -3 நடவடிக்கை 1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாம் திகதி அதிகாலை விடுதலைப் புலிகளினால் முன்னெடுக்கப்பட்டது.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் நெறிப்படுத்தலில் தொடங்கிய இந்நடவடிக்கையின் முழுஅளவிலான வீச்சை ஆரம்பத்தில் சிறீலங்கா இராணுவத் தரப்பினராலும் சரி, இராணுவ விமர்சகர்களினாலும் சரி சரியாக மதிப்பீடு செய்ய முடியவில்லை. முதல் ஓரிரு தினங்களில் இது சில முகாம்கள் மீதான மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையாக இருக்கலாம் எனக்கருதிய பலர், நடவடிக்கையின் வீச்சை அது திறந்த பல களமுனைகளையும், பல திசையிலான நகர்வையும் கண்டுகொண்ட பின்னரே உணர முடிந்தது. அதன்பின் இந்நடவடிக்கையின் நோக்கம் குறித்து ஊகங்களை வெளியிடுவதைத் தவிர்த்துக் கொண்டனர்.

வன்னிப் பெருநிலப்பரப்பின் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டானில் ஆரம்பமாகி மன்னார், கிளிநொச்சி, யாழ். மாவட்டமென யாழ். குடா நாட்டில் பளைப் பிரதேசம் வரை மீட்டெடுத்ததுடன் முடிவுக்கு வந்த இந்நடவடிக்கையானது சிறீலங்கா இராணுவத்திற்கு வரலாறு காணாத தோல்வியையும், இழப்பையும் சிறீலங்கா அரசின் இராணுவ மேலாண்மை என்ற அபிலாசைக்கு பெரியதொரு அடியையும் கொடுத்தது.

ஓயாத அலைகள் -3இல் சிறீலங்கா இராணுவரீதியில் தெளிவானதொரு தோல்வியை சந்தித்ததென்பதில் கேள்விக்கோ, விவாதத்திற்கோ இடமில்லை. அதாவது ஓர் இராணுவத் தோல்வியை மதிப்பிடக்கூடிய பல அம்சங்களிலும் அது பின்னடைவைக் கண்டது.

1. ஆளணி மற்றும் ஆயுத தளபாட இழப்பு

ஓயாத அலைகள் -3இல் சிறீலங்கா இராணுவத்தின் ஒட்டுமொத்த இழப்பு சரியாக மதிப்பிடப்படவோ அன்றி வெளியிடப்படவோ இல்லை. எனினும் ஆயிரக்கணக்கில் துருப்புக்கள் கொல்லப்பட்டும் காயங்களுக்கு உள்ளாகியும் உள்ளனர். ஆயிரக்கணக்கானோரை இராணுவத்தைவிட்டு ஓடவும் வைத்தது.

இதே சமயம் கனரக போர்த் தளபாடங்கள் உள்ளடங்கலாக பெருமளவு ஆயுத தளபாடங்கள் விடுதலைப் புலிகளினால் அழிக்கப்பட்டும், கைப்பற்றப்பட்டும் இருந்தன. இந்த வகையில் எம்.ஐ. 24 ரக தாக்குதல் உலங்குவானூர்தி, டோறா அதிவேகப் பீரங்கிக்கலன்கள் உட்பட இருபதிற்கும் மேற்பட்ட ஆட்லறிகள் மற்றும் ஆயுத தளபாடங்கள் பெருமளவு வெடிபொருட்கள் என்பன அழிக்கப்பட்ட அதேவேளை 155எம்.எம் ஆட்லறிகள், 122 எம்.எம்



மோட்டார்கள் உட்பட பெருமளவு ஆயுத தளபாடங்கள் கைப்பற்றப்பட்டும் இருந்தன.

2. பிரதேச ரீதியிலான இழப்பு

சிறீலங்கா இராணுவம் வன்னியிலும், யாழ். குடாநாட்டிலும் பல இராணுவ நடவடிக்கைகள் மூலம் ஆக்கிரமித்த பிரதேசங்கள் ஓயாத அலைகள் -3இன் மூலம் மீட்கப்பட்டன. 2500 சதுரகிலோ மீற்றருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு மீட்கப்பட்டதோடு கேந்திர முக்கியத்துவம் மிக்க முக்கிய பிரதேசங்களும் புலிகளின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டிருந்தன. குறிப்பாக நெடுங்கேணி, ஆனையிறவு, கேரதீவு, நாவற்குழி என்பனவற்றையும் சுட்டிக்காட்டமுடியும்.

3. சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பைச் சிதைத்தது

அதாவது ஓயாத அலைகள் -3 சிறீலங்கா இராணுவ உயர்பீடத்தில் பல மாற்றங்களுக்கு வித்திட்டது மட்டுமல்ல, பல சிரேஷ்ட அதிகாரிகள் கட்டாயத்தின் பெயரில் லீவில் அனுப்பப்படவும், சில உயர் அதிகாரிகள் களத்தில் பலியாக வேண்டியும் சில சிரேஷ்ட அதிகாரிகள் களமுனையில் இருந்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ள் - 3உம்



வெளியேறிச் செல்லவும் காரணமாகியது.

இந்தவகையில் ஓயாத அலைகள் -3 சிறீலங்கா இராணுவத்தின் தோல்வியைப் பல்வேறு அம்சங்களும் உறுதி செய்வதாக இருக்கையில் ஓயாத அலைகள் -3 விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியான பரிமாணத்தையும் உலகிற்கு வெளிக்காட்டி நின்றது.

ஓயாத அலைகள் -3 மூலம் விடுதலைப் புலிகள் தம்மை உலகின் பார்வையில் ஒரு முழுவடிவிலான மரபுவழி இராணுவமாக உறுதிசெய்து கொண்டிருந்தனர். ஓயாத அலைகள் -3 நடவடிக்கைகளுக்கு முன்னதாகவே மரபுவழி இராணுவத்திற்குரிய பண்புகளைப்பெற்றுக் கொண்டிருப்பினும் ஓயாத அலைகள் -3இன் பின்னரே வெளியிலுள்ள இராணுவ ஆய்வாளர்கள் இதனை விளங்கிக்கொள்ள வாய்ப்பேற்பட்டது.

அத்தோடு இவ் ஓயாத அலைகள் -3 நடவடிக்கைகளின்போது விடுதலைப் புலிகள் இயக்கம் சிறீலங்காவின் முக்கியமான ஐந்து படைப்பிரிவுகளுடன் -டிவிசன் சண்டையிட்டுள்ளதோடு மூன்று படைப்பிரிவு-டிவிசன்களின் தலைமை அலுவலகங்களையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்திருந்தனர். அதாவது, வன்னிப் பிரதேசத்தில் இருந்த 55ஆவது 56ஆவது டிவிசன்களின் தலைமையகங்களும் ஆனையிறவுப் பிரதேசத்தில் இருந்த 54ஆவது டிவிசனின் தலைமையகமும் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. இதேசமயம் 53ஆவது, 52ஆவது டிவிசன் படையணிகளுடனும் சண்டையிட்டு அவற்றின் சில பிரிகேட் தலைமையகங்களைக் கைப்பற்றிய அதேவேளை சில பிரிகேட்டுகளுக்கு பெரும் இழப்பையும் கொடுத்தனர். குறிப்பாக 53வது டிவிசனின் சில பிரிகேட்டுக்கள் தாளையடி, சோரன் பற்றுப் பகுதியிலும் இத்தாவில் பகுதியிலும் பெரும் இழப்புக்களைச் சந்தித்திருந்தன.

இந்த வகையில் போரிட்டு புலிகள் மரபுவழி இராணுவம் என்ற வடிவத்தைப் பெற்றுக் கொண்டது மட்டுமல்ல பெரும் சமர்கள் மூலம் சிறீலங்கா இராணுவத்தை விரட்டியடித்தும் தமது திறமையும், ஆற்றலையும் வெளிக்காட்டி நின்றமை விடுதலைப் புலிகளிடம் உறுதியான இராணுவக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுவிட்டதை வெளிக்காட்டியது.

இவ்வாறாக ஓயாத அலைகள் -3 இராணுவ ரீதியில் கொடுத்த பெரும் அழுத்தம் சிறீலங்கா அரசு வெளிநாடுகளில் இருந்து இராணுவ உதவிகோரும் நிலைவரை கொண்டுசென்றது. சிறீலங்கா அரசு வெளிப்பார்வையில் இராணுவ உதவி என்ற ரீதியில் விடுத்த கோரிக்கை ஆயுத தளபாடங்கள் என்ற ரீதியிலேயே நோக்கப்பட்டதாயினும் உண்மையில் ஆளணி ரீதியிலான இராணுவ உதவியையும் அது எதிர்பார்த்தே இருந்தது. இதற்கு ஏற்பவே இந்தியாவை அது அணுகியதாயினும் அது சாத்தியப்பாடானதாகாத நிலையில் ஆயுத உதவி என்ற அளவில் அது நின்று கொண்டு விட்டது.

அதேசமயம், சிறீலங்கா அரசோ யுத்தத்திற்கென மேலும் 2000 கோடி ரூபாவை ஒதுக்கி இராணுவச் செலவீட்டைச் சுமார் 8000 கோடி ரூபாவரையில் அதிகரிக்க வேண்டியும் வந்தது. அதன் மூலம் நவீன போர்க்கப்பல்கள் பல களமுனையில் அறிமுகம் செய்யப்பட்டன.

இவ்வாறாக இராணுவரீதியில் சிறீலங்கா இராணுவத்திற்கும், அரசிற்கும் பெரும் பின்னடைவு ஏற்படக்காரணமாக இருந்த ஓயாத அலைகள் -3 அரசியல் ரீதியில் சிறீலங்கா அரசிற்கு சில தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவதாகவே மாறியிருந்தது.

1. விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரசு வெற்றிகொண்டு வருகின்றதென சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சு மேற்கொண்ட பெரும் எடுப்பிலான பிரச்சாரம் அர்த்தமற்றதாக்கப்பட்டது.

2. யுத்த நிலை கைமீறிச் சென்று கொண்டிருப்பதினால் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான தீர்வு குறித்துப் பிரஸ்தாபிப்பதை அவசியமானதாக்கியது.

3. இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கு வெளிநாட்டு ஏற்பாட்டாளர் ஒருவர் தேவை என்பதையும் உறுதியாக்கியது.

விடுதலைப் புலிகளுடன் அரசியல் பேச்சுவார்த்தைகள் சர்வதேச மத்தியத்துவம் அல்லது ஏற்பாட்டாளர்கள் என்ற விடயத்தில் சந்திரிகா குமாரதுங்கா அரசு வெளிப்படையான நகர்வுகளை மேற்கொள்ள பெரும் தயக்கம் காட்டிவருகின்றது. ஏனெனில், சிங்களப்பேரினவாதம் அந்தளவிற்கு தனது எதிர்ப்பை வெளிக்காட்டுவதாய் உள்ளது.

ஆனால் ஆட்சியாளர்களுக்கு சர்வதேச அனுசரணையாளர் இன்றி இவ்விடயத்தில் முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டுவிடப்போவதில்லை என்பது நன்கு தெரியும். அத்தோடு, அவ்வாறானதொரு உதவி பெறப்படாது யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதும் இலகுவானதொன்றாக இருக்கப்போவதில்லை என்பதும் அதற்குத்தெரியும். ஏனெ



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓயாத அலைகள்-3

னில், யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதாகில் அதற்கும் வெளிநாட்டவர்களின் நிதி உதவி அவசியமானதாகும்.

இந் நிலையில்தான் ஓயாத அலைகள் - 3றைத் தொடர்ந்து நோர்வேயின் மத்தியத்தம் சிறீலங்கா அரசினால் உத்தியோகபூர்வமாகக் கோரவும்பட்டது. நோர்வே அரசாங்கமும் இதற்கு முன்பிருந்தே இவ்விடயத்தில் தீவிர அக்கறை காட்டி வருகின்றது. ஆனால் நோர்வேயின் சமரச முயற்சியானது சிறீலங்காவின் உள்நாட்டு அரசியல் காரணிகளால் ஏறுவதும் இறங்குவதுமாக உள்ளது.

ஏனெனில் இனப்பிரச்சினை விவகாரத்துக்கு சர்வதேச மத்தியத்துவத்துடன் தீர்வொன்றைக் காண்பதற்கு பௌத்த பேரினவாத அமைப்புக்கள் தமது பலமான எதிர்ப்பைக் காட்டுவதே இந் நிலைக்குக் காரணமாகும். அத்தோடு சமரச முயற்சியில் ஈடுபட முனையும் நோர்வேக்கு எதிராகவும் அவர்கள் தமது அதிருப்பதியை வெளிக்காட்டியுள்ளனர்.

அதிலும் குறிப்பாகத் தேர்தல் காலங்களில் ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது குறித்துப் பேசவே அஞ்சுகின்றனர். ஆயினும் ஓயாத அலைகள் -3 இராணுவ ரீதியில் கொடுத்த அழுத்தமானது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றே சாத்தியமாக்கப்பட வேண்டியது என்ற அவசியத்தை ஆட்சியாளர்களுக்கு நிர்ப்பந்திப்பதாக உள்ளது.

இந்நிலையில்தான் தேர்தல் காலத்தில் வெளிநாட்டு மத்தியத்தம் குறிப்பாக நோர்வேயின் சமரச முயற்சிகள் என்பனவற்றை காட்டமாக விமர்சித்த பொ.ஐ.முன்னணி தற்பொழுது மீண்டும் நோர்வேயின் நடவடிக்கைகளுக்கு பச்சைக்கொடி காட்டியுள்ளது. தேர்தல் முடிந்த பின் நோர்வே சென்ற சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நோர்வேயின் முயற்சிகளுக்கு ஆதரவை வெளிப்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்துதான் நோர்வேயின் அடுத்தகட்ட நகர்வுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் ஓர் அங்மாகவே நோர்வே தூதுக்குழு வன்னி வந்ததோடு தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனையும் சந்தித்து பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளது.



நோர்வேக் குழுவின் வன்னி வருகையும் தலைவர் பிரபாகரனுடனான பேச்சுவார்த்தையும் அரசின் தூண்டுதலினாலோ அன்றி அரசின் தகவல்களைப் பரிமாறுவதற்காகவோ மேற்கொள்ளப்படவில்லை எனச் சிறீலங்கா அரச தரப்பு அறிவிப்புக்களைச் செய்துள்ளது. இது உண்மையாக இருப்பினும்கூட இப் பேச்சுவார்த்தைக்கு நோர்வேக்குழு வன்னிவர அனுமதித்ததின் மூலம் தலைவர் பிரபாகரனின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதில் அரசாங்கம் சிரத்தை காட்டுகின்றது என்பதை எந்த அரசியல் நோக்கர்களும் நிராகரித்துவிடமாட்டார்கள்.

அதாவது விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் ஒடுக்கும்வரை யுத்தம் தொடரும் எனவும் புலிகளுடன் பேச்சுவார்த்தை என்பதற்கு இடமே இல்லை என்ற ரீதியிலும் அறிவிப்புக்களை வெளியிடும அரசு, நோர்வேக் குழுவினரை விரும்பியோ அன்றி விரும்பாமலோ வன்னிப் பிரதேசத்திற்குள் செல்ல அனுமதித்தமையும், இதன் மூலம் தேசியத் தலைவர் பிரபாகரனுடன் சந்திப்பொன்றை ஏற்படுத்துவதற்குரிய சூழ்நிலை உருவாவதற்கு வாய்ப்பைக் கொடுத்தமையும் விருப்பத்தின் பாற்பட்டது என்பதைவிட நிர்ப்பந்தத்தின் பாற்பட்டது எனக்கூறுதலே சரியானதாகும்.

இந் நிர்ப்பந்தமானது நிச்சயமாக ஓயாத அலைகள் -3இனால் கொடுக்கப்பட்டதே ஆகும். அதாவது சந்திரிகா அரசு இராணுவத் தீர்வு குறித்தும் விடுதலைப் புலிகள் இன்றி இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு குறித்தும் பேசலாம். ஆனால் ஓயாத அலைகள் -3 விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெற்றிகொள்ள முடியாது என்பதை மட்டுமல்ல அரசியல் ரீதியில் விடுதலைப் புலிகள் இன்றி எதுவித முயற்சியும் வெற்றி அளிக்கப் போவதில்லை என்பதையும் உறுதி செய்துள்ளது. அதாவது ஓயாத அலைகள் - 3இன் விளைவுகள் சிறீலங்காவின் இராணுவ அரசியல் போக்கைத் தீர்மானிக்கும் வலுவான சக்தியாக இன்று உள்ளது என்பதையே அண்மைய நிகழ்வுகள் வெளிக்காட்டி நிற்கின்றன.

## அலைகள் தொடரும்

தமிழனை அழிக்க
வந்த படை
இன்று
தமிழனால் அழிக்கின்ற
படையாய்ப் போச்சு.
மண்ணினைப் பிடித்த
சிங்களம்
இன்று மண்ணை விட்டு
ஓடுதலாச்சு.
ஒட்டுசுட்டானில்
நெற்றி அடி பார்த்தாயா?
ஒலுமடுவில்
படை ஓடியதைப்
பார்த்தாயா?
வன்னியன் ஆண்ட
மண்ணில்
அன்னியன் வாழலாமா?
எம் வாழ்வினைக்
குலைத்தவனை
வாழ விடலாமா?
புளியங்குளத்திலும்
நீ மாண்டாய்
புதுார்ச்சந்தியிலும் நீ
சிதைந்தாய்
ஓமந்தையில் நீ இருப்பாயா?
எப்போதும் இங்கு வர
நினைப்பாயா?
தாய் மண்ணினை மீட்கும்
புலி
இனி
யாழ் மண்ணிலும் படை
எடுக்கும்.
பாய்விரித்து உறங்க
மாட்டாய்
புலி பாய்வதினை
மறக்க மாட்டாய்
ஓயாத அலை மூன்று
உனை ஓரம் கட்டியாச்சு.
இனியும் ஓயாத அலை
ஈழம் மலரும் வரை
உறங்காது அலை.
இது தமிழரின் அலை.
ஈழ மண்ணின்
விடுதலையின் தலை.

– நீர்வைக்குமார்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களப்படப்பிடிப்பாளர் வீரவேங்கை கிளிமொழி
(சடாச்சரம் - செல்வலட்சுமி)
மாதகல் - யாழ்
பிறப்பு - 03.09.1981 வீரச்சாவு - 02.04.2000

**கிளிமொழி...**
**சுடுகருவி தாங்கிய வீரர்களோடு**
**சுடமுடியாத கருவி கொண்டு**
**களமுனையெங்கும் உலாவந்தாள்.**

**களப்புலிகள் வீரத்தைக்**
**கமராக்குள் சிறைப்பிடிக்க**
**நெருப்பு மழைக்குள்ளும்**
**நிமிர்ந்திவள் நின்றாள்.**

**இவள் சிந்தனைத் தூரிகைகள்**
**வரைந்த அந்த ஒளிஓவியங்கள்**
**உலகத் திசையெங்கும் தாயக**
**வீரத்தை முரசறைந்து**
**கொண்டிருக்கும்.**
**வேதனையில் வாடுகின்ற உறவுகளின்**
**கோலங்களை வெளியுலகெங்கும்**
**வெளிப்படுத்திக் கொண்டிருக்கும்.**
**பொய்தனைப் பரப்பும் பகைவனின்**
**செய்தியைப் பொய்களாக்கும்.**
**வரிப்புலிகள் சேனைக்குள்**
**கலைப்புலியாய் இவள் மிளிர்ந்தாள்**
**களம்நடுவே கமராவுடன் இவள் மடிந்தாள்.**

**வரலாற்றைப் பதியும்வேளை**
**வரலாறாய் வீழ்ந்தவளே...**
**நீ பதித்த காலப் பதிவுகள் போல்**
**என்றும் நீ வாழ்வாய் – எம்மோடு.**

**எங்கள் நெஞ்சில் உந்தன் தாகம்**
**உந்தன் சுவட்டில் எங்கள் பாதம்.**

ஓயாத அலைகள் -3 நடவடிக்கையின்போது மாமுனை, குடாரப்பு பகுதியில் தரையிறங்கி கண்டி வீதியை ஊடறுத்து நிலை எடுத்திருந்த வேளை சிறீலங்காப் படையினருடன் நடைபெற்ற மோதலைப் படம்பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவேளை இவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

**– செந்தோழன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலைக்களம்

கார்த்திகைமாதம் வேர்த்தறியாக்காலம்.
மேகமுந்தானை விலக்கி
வானத்தாய் பூமிக்குப் பால்கொடுப்பாள்.
வேர்கள் விருட்சத்துக்கு விருந்தளிக்கும்.
நீரும் நிலமும் கலந்திளகி
பூமிப்பெண் புத்தாடை புனைவாள்.
ஆயிரம் கண்வேண்டும் அதைக்காண.
ஊரின் ஒழுங்கையெங்கும்
வாரடித்தோடும் வெள்ளம் வரைகின்ற
நீரரித்த கோடுகளில் பாதம்பதிக்க
உச்சிகுளிர்ந்து உருகும்.
மருதாணி போட்ட அழகான விரலாய்
மண்கிழித்தெழும் காளான்மடை
பூனைமேனிப் புசுபுசுப்பாய்
சின்னக்குடை விரித்துச் சிரிக்கும்.
கூரைவழியும் நீர்த்தாரை மீது
திண்ணை மீதிருந்து திளைப்பதில்
என்ன ஆனந்தம்.
மனசில் பூபரவிப் போகும் இந்தமாதம்.
வீரத்தைக் கொண்டே விரல்மடிப்பதெனில்
கார்த்திகை மாதமே எமக்குக் கண்திறந்தமாதம்.

ஈழத்தமிழருக்கு இருநூறு கைமுளைத்ததும்,
ஈழத்தமிழரையே கூரிய வேல்துளைத்ததும்
இந்த மாதத்திற்தான்.
தமிழரை மீண்டும் தமிழரென்றாக்க
முதல்நாள் பிள்ளையொன்று விழிதிறந்தது
தமிழரின் நெஞ்சில் இடிசொருகிவிட்டு
மறுநாள் பிள்ளையொன்று விழிமூடியது.
ஆண்டுகள் வேறாயினும் தேதிகள் அருகருகாயின
இது தற்செயலான சம்பவமல்ல
ஒரு சரித்திரமான அதிசயம்.
கார்த்திகை 27 மாவீரர்நாள்.
சாவிலும் மானம்பெரிதென்று சாற்றியநாள்.
ஈழத்தமிழர் இழிந்திருக்க மாட்டோமென
ஆளும் கதிரைகளுக்கு அறிவித்தநாள்.
கூண்டிருக்க இனிவிரும்போமென
நீண்ட காலத்தின் பின் நிறுவிய நாள்.
சிறகெடுத்துப் பறந்த சிட்டுக்குருவிகளின்
தீபத்திருநாள்.
ஊனக் கனவேதுமற்ற ஞானத்துறவிகளின்
உயிர்த்தநாள்.
தேசத்தைமட்டும் ஆராதிக்கத் தெரிந்தவரின்
வாசம் பரவும் அந்தவாசல்.
மெழுகாய் விழியுருக
மெய் விதிர்க்க
அழுவோராயும், தொழுவோராயும்
பூக்கொண்டு போவோம் அப்புனிதரிடம்.
நெஞ்சுருக, நெஞ்சுருக நெய்விளக்கேற்றிக்
கல்லறை முன்னின்று கரைவோம்.
ஒருதரமேனும் விழிமலருங்களென்று உருகுவோம்.
பூச்சொரிந்து அவர்பாதம் பூசிப்போம்.
வல்லமை தாருங்களென வரம் கேட்போம்.
வில்லாண்ட வீரத்தின் ஒருதுகளை
வெளியே எறியுங்களென வேண்டுவோம்.
நதியாய்க் குதித்தோடிய நாட்களும்,
பூவாய்ச் சிரித்திருந்த பொழுதுகளும்

-வியாசன்-





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சாவரினும் தளரோம் யார்வரினும் பணியோம் வெந்துதணியாது வீரநிலம்

நினைவிருக்கா? எனக் கெஞ்சுவோம்.
உள்ளே வேர்பிடித்திருக்குமா உங்களுக்கென
காதோடுரசிக் கேட்போம்.
கல்லறைக்குள்ளே கண்மலரும்.
மேனி அசையும்.
மெல்லச் சிரிக்குமொலி உள்ளே கேட்கும்.
கல்லறைக் கதவுகள் விரியப்
பிள்ளை முகம் காண்பாள் பெற்றவள்.
"அம்மா" என்றோர் அசரீரி
அவளுக்கு மட்டும் கேட்கும்.
"அப்பா" என்றோர் குரல்
அவருக்கு மட்டும்தான் கேட்கும்.
தோழனே! என்ற அழைப்பு மட்டும்
துயிலுமில்லமெங்கும் கேட்கும்.
தோழியே! என்ற குரல் மட்டும்
திசையெங்கும் எதிரொலிக்கும்.
குரல் கேட்டதும்
அந்தக்குளிரிலும் வேர்த்துக்குளிப்போம்.
சில்லிட்டுப் போகுமெம் ஜீவன்.
புதைக்கவில்லை விதைத்தோமென்ற
பொருளுணர்ந்து பெருகுமெம் விழிகள்.
உள்ளே கொதிப்புறும் குறுதி.
சுடரும் விளக்கொளியில் மேனிசூடேறும்.
ஓவென்றிரையும் ஊதற்காற்று.
வானம் இருள்விலத்தி வழிவிடத்
தூரத்தில் தெரியும் விடிவெள்ளி.
பிரிய மனமின்றிப் பிரிவோம்.
மாவீரரே!
நடுகல்லாகிவிட்ட நந்தா விளக்குகளே!
விடுதலைக்கு நீர்தந்த விலையதிகம்.
உரிமைக்கான போரில் உயிர்கொடுத்தலே
பெரியபேறு.
கவிதை எழுதுதல் கால்தூசு.
கண்ணீர் விடுதலும் கையளவே.
மண்ணுக்காக மரணிப்பதே மாதவம்.

ஒன்றுமட்டும் உறுதி,
இனியுமெம் தேசம் படுக்காது.
குனிந்தெவருக்கும் குற்றேவல் செய்யாது.
தேவநிலை வந்தெய்தினும்
தாயகக் காதல் மட்டும் தணியாது.
சாவரினும் தளரோம் இதுசத்தியம்
யார்வரினும் பணியோம் இதுசத்தியம்
போரெடுத்தோம் வெல்வோம் இதுசத்தியம்
வெந்துதணியாது இந்த வீரநிலம்.
பகையுழுது போகலாம் உங்கள் படுக்கைகளை
தகையழிந்து போகுமோ சந்தனக்காடுகள்?
வேரறுந்து வீழுமோ விடுதலை?
ஊரெரிந்தும், உயிர்பிரிந்தும் போகலாம்
பிரியும் நொடியிலும் உம்மையே பேசுமெம்வாய்.
விரியும் மலரிலும் தெரியுமும் முகம்.
உமக்கருகில் எமக்கும் வேண்டும் ஓர்குழி.
உறவுகள் வந்து விளக்கேற்ற
உள்ளேயிருந்து நாமும் சிரிப்போம் ஓர்நாள்.
அதுவரை ஓயாதெம் அலைகள்.
எத்தனை புயல்களும் எழுந்து வீசட்டும்
சித்தம் கலங்கிச் சிதறோம்.
எத்தனை துயரெனினும் அழுத்தட்டும்
அத்தனை வரிப்புகளையும் ஆனந்தமாக்குவோம்.
விடுதலை எங்களின் பேச்சு.
விடுதலை எங்களின் மூச்சு
விடுதலை நெஞ்சிற் பதியம்போட்ட நாற்று.

*மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை*
*முடிசூடும் தமிழ்மீது உறுதி.*
*வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்*
*வரலாறு மீதிலும் உறுதி.*
*விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை*
*வீரர்கள் மீதிலும் உறுதி.*
*இழிவாக வாழோம் தமிழீழப் போரில்*
*இனிமேலும் ஓயோம் உறுதி.*



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இருள் பிளந் நாளை

கிளி...கிளி....கிளி....
உற்சாகத்துடன் உயரே எழும்பி ஒலித்த அந்தக் குரல்களே கரிப்பட்டமுறிப்புச்சந்தியில் எம்மை வரவேற்றன.

ஓயாத அலைகள் மூன்றின் ஐந்தாம் நாள். நவம்பர் ஏழாம் திகதி எதிரியிடமிருந்து மீட்கப்பட்ட கரிப்பட்டமுறிப்பு மண்மீது எம் பாதம் பதிகின்றது. காலம் காலமாக வலிசுமந்த எம் மனங்களின் மீது, மகிழ்வையும், நிறைவையும், துணிவையும் நிரப்பிய நாட்கள் இவை. இனி என்றும் வீழோம் எனும் உறுதியுடன் என்றும் வெல்வதற்காகவே எம் கரங்கள் எழுந்தன என்பதன் சாட்சியாகி எங்கள் மண் மீண்டும் எங்கள் கரங்களில். அழிந்து போன ஆக்கிரமிப்பின் அடையாளமாக சிதைவடைந்த காவலரண்கள், அறுந்துபோன முட்கம்பி வேலிகள் என போர் ஓய்ந்த களம் ஒன்றின் காட்சி.

ஓரிரு நாட்களின் முன் எறிகணைகளும் துப்பாக்கி ரவைகளும் முழக்கமிட ஓட வழியின்றி எதிரி



பிணமாகிக் கிடந்த நிலம் அது. அங்கே மாங்குளம் நோக்கிய வீதியின் சந்தியில் இருந்து இடப்புறமாகத் திரும்பும் வளைவில் பெண் போராளிகள் தாச்சி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

லேசான மழைத் தூறல்களினூடு சூரியன் வானில் புதைந்து கொண்டிருந்த ஒரு மாலைநேரம். சூழல் மனதுள் இறக்கியிருந்த மௌனமான களம் ஒன்றின் இழைகள் இந்த இளசுகளின் உற்சாகத் தெறிப்பில் மெல்ல அறுந்து போனது.

"வணக்கம் அக்கா" என்னுடன் வந்திருந்த பெண் போராளிக்கும் எனக்குமாக அந்தச் சின்ன வாய்கள் உற்சாகத்துடன் மலர்ந்தன.

உலகமே வியந்து நிற்கும் வெற்றிக்காக தமது வியர்வையையும், உதிரத்தையும் விலையாகக் கொடுத்தவர்கள் இவர்களே.

தமக்குரித்தான அந்த வெற்றி பற்றிய பெருமித எல்லைகளைத் தாண்டி....இயல்பான குழந்தைத் தனத்தோடு புன்னகைக்கும் அந்தத் தேசக்குழந்தைகளின் தழும்பேறிய கைகளை கண்களில் ஒற்றிக் கொள்ள மனம் விரும்பியது.

அவர்கள் வழிகாட்ட அங்கிருந்த அணித்தலைவியின் அனுமதியுடன் சிதறிக்கிடந்த எதிரி முகாமினுள் நடக்கத் தொடங்கினோம். அலையடித்துப் போனதன் அடையாளங்கள் ஆங்காங்கு சிதறிக்கிடக்கும் இராணுவ உபகரணங்கள், உடைகள், காலணிகள், குறிப்பேடுகள், சமையற் பொருட்கள் என சில நாட்களின் முன்புவரை இங்கிருந்தவர்களை நினைவூட்டின. மரங்களிலும், நிலத்திலும், காற்றிலுங்கூட அந்நியத்துள் புதைந்து மீண்டதன் அடையாளம் தெரிந்தது. மனிதர்களே அங்கு வாழவில்லை என்பதாகக் காற்று கனத்திருந்தது. புதர் மூடிய கட்டடங்கள், புல் மூடி அடையாளமே இல்லாதொழிந்த மக்களின் வாழ்விடங்கள், இருவருடங்களின் முன்புவரை உயிர்ப்பும், செழிப்பும் நிறைந்திருந்த அவ்வூரின் ஆன்மா தொலைந்து வெறுமை கொண்ட பேரிருள் மூடிக்கிடந்ததான தோற்றமே கண்களினுள்.

அச்சூழலின் பேரமைதியைக் கிழித்து சூழலை இயல்பினுள் நகர்த்தும் போராளிகளின் பேச்சுக்குரல்களும் நடமாட்டமும் மீண்ட அந்த மண்ணின் மீதான எமது இருப்பை உறுதி செய்தன.

முகாமின் களஞ்சிய அறையை ஒட்டியபகுதி ஒன்றில் போராளிகள் இரவுச் சமையலில் ஈடுபட்டிருந்தனர். எங்களிற்கு இனிப் பிரச்சனையில்லை. ஸ்ரோர் கிளியர் பண்ணும் வரை ஒரே சமையல்தான் எனக் கூறிச்சிரித்தார்கள்.

வெள்ளைச்சம்பா அரிசியும், கருவாடும் அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்தது. எம்மை உட்கார வைத்து மகிழ்வுடன் உபசரித்தார்கள். இடம் எதுவானாலும் மாறிவிடாத உபசரிக்கும் அந்தப் பண்பு என் எண்ணத்துள் அவர்களை இன்னும் உயரவைத்தது.

ஓயாத அலைகள் மூன்றின் பிரமிப்பான வெற்றி பற்றிய தமது மகிழ்வைவிட மக்களின் மனநிறைவையும், மனநிலையையும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒளி எழுந்த
# ன்றில்...

அறிந்து கொள்வதிலேயே அதிக ஆர்வம் தெரிந்தது. தமது மக்கள் முகங்களில் புன்னகை மிளிர வீதிகளில் இறங்கி போர்க்களத்தின் திசைவரை உணர்வுகளால் இணைந்து கால்களில் சிறகு முளைத்த சந்தோஷத்துடன் தமது நேற்றைய வாழ்வின் சுமைகளை மறந்து மகிழ்வுறுகிறார்கள் என்பதில் அந்த மனங்கள் நிறைவு கொண்டன.

இந்தச் சண்டைக்கான சூழலைத் தமக்குத் தந்த தலைவர் பற்றிப் பெருமை பொங்கப் பேசினார்கள். எங்கள் மனங்களில் எரிகின்ற தீயுடன் அவனுக்கு எங்கள் பலத்தின் முழுமையைச் சொல்கின்ற நாளுக்காக நாங்கள் காத்திருந்தோம். எங்கள் அண்ணா மிக அருமையான களத்தையும் காலமொன்றையும் எங்கள் கரங்களில் தந்துவிட்டார். அம்பகாமத்தில் அன்று நாங்கள் இழந்த எங்கள் பிள்ளைகளின் பெயர் சொல்லி இன்று நாம் சாதித்துவிட்டோம். அசைக்க முடியாதென்ற ஆணவத்தோடு அவன் பரவிநின்ற காவலரண்கள் கடந்து நாம் முன்னேறும்போது மனதுள் எழுந்தடங்கிய உணர்வின் நிறைவை வார்த்தைகளில் சொல்லமுடியவில்லை என ஒரு அணியின் தலைவி உணர்வு பொங்கச் சொன்னார்.

காவலரண் வேலியிட்டு கண்விழிக்கத் தொடங்கிய நாளிலிருந்து எதிரியை ஓட ஓட விரட்டியே கால்கள் சோர்ந்துவிட்ட நேற்றைய சண்டைவரை ஓயாத வேலையில் அலுத்துக் களைத்திருந்த தனது உடலின் சோர்வையும் வேதனையையும் தாங்கியபடி அவள் பேசப்பேச.... சில நிமிடமேனும் நீட்டிநிமிர்ந்து கைகளை வீசித் தூங்க அவள் உடல் கெஞ்சும் என்பதையும் இந்த வேதனைகளை எல்லாம் தாங்கியபடியேதான் இவர்கள் எமக்காக வருடங்கள் பல தாண்டியும் உறுதி சரியாது போராடுகிறார்கள் என்பதும் என் நினைவை வருத்தியது. ஒட்டுசுட்டான் முகாம் ஒன்றிற்கான தாக்குதலிற்கான தமது நகர்வுபற்றி இன்னுமொரு போராளி சொன்னாள்.

இருள் மூடிப் போயிருந்த நள்ளிரவில் எதிரி கண்ணில் மண்தூவிய நகர்வு. கால்களை முன்வைக்கவோ, எமக்கான திசையை அனுமானிக்கவோ முடியாத கரும் இருள். நிலமும், மரங்களும், வானும்கூட இருளில் குளித்து கருமையை தம்மேல் அள்ளிப்பூசியிருந்தன. நகர்வின் திசைமாறாதிருக்க முன்செல்பவரின் இடுப்புப் பட்டிகளையே இறுகப்பற்றி நடந்தோம் என எத்தனை நாள் தூக்கமோ விழிகளை அழுத்த கண்களை மூடியபடி சண்டையின் ஆரம்பத்திலிருந்து தன் நினைவில் இருந்தவைகளை மூச்சுவிடாது கூறிமுடித்தாள். சண்டை அணியொன்றின் பிரதான போராளியாக நல்ல வளர்த்தியுடன் அழகும், உறுதியும் கொண்ட அவளுடைய பேச்சில் மட்டும் இன்னும் மாறாத மழலை தெரிந்தது. இருட்டு என்பதை இரிசல் என அவள் உச்சரித்தவிதம் எம்மை ரசிக்க வைத்தது. இந்தச் சண்டையில் தனது கனரக ஆயுதத்தைக் காப்பாற்றுவதற்காக அதன்மேல் குப்புறப்படுத்து தன் உயிரைப் பலிகொடுத்த பெண்போராளி ஒருத்தி பற்றி அவர்களின் தளபதி ஒருவர் வேதனையும் பெருமையுமாகக் கூறினார்.

வாழ்வு என்பதையே நாலு கோட்டினுள் வரையறுத்து சமூக நிர்ப்பந்தங்களையே ஆபரணங்களாக்கி அழகு பார்க்கும் எங்களின் வாழ்விலிருந்து வந்த இவர்களாலேயே தம்மைப்புறந்தள்ளி தேசத்தின் நாளைக்காக எம் உள்ளம் கசியும் வகையில் உயிர்விட முடிகிறது.

நாம் அர்த்தப்படுத்தியுள்ள எம் நடைமுறைவாழ்வு மனங்களில் இருந்து முற்றாக விலகி உயர்ந்து மலர்ந்துள்ள இந்த அற்புதமானவர்களின் உள்ளத்தையும் உணர்வுகளையும் காலம் எழுதித்தீர்க்குமா?

இவர்கள் உணர்வு சொல்லும் வார்த்தைகள் என்றேனும் காலத்தின் கரங்களினுள் வசப்படுமா?

வெற்றி என்பது விண்ணிலிருந்து விடிகாலை ஒன்றின் பரிசாக எமக்காக வந்து சேர்வதல்ல, அதன் பின்னே வலியினதும் கண்ணீரினதும் இரத்தத்தினதும் நீண்ட வரலாறு உள்ளது. காவலரண்களில் தம் உடலின் உணர்வுகளையே மறந்து மழையிலும், பனியிலும், வெய்யிலிலும் வாடிய போராளிகளினதும் இயல்பான மனங்களின் அச்சங்களை வென்று சாவிடம் தம்மைக் கையளித்து நகரும் வேவுப்புலிகளினதும், இன்னும் சண்டை ஒன்றுக்காகத் தம்மை உடல்வருத்திப் பயிற்சி பெறும் புலிவீரர்களது உடலும் மனமும் சுமந்திருக்கக்கூடிய துயர்மிகு கணங்களிலிருந்தே எமது வெற்றிகளிற்கான காலம் உருவாகிறது. அவர்களின் வலி சுமந்த நாட்களைக் கடந்தே இன்றைய வெற்றியின் மகிழ்விற்கான நாட்கள் எழுந்து வந்துள்ளன.


விடுதலைப் போர் என்னும் நெருப்பு நதியில் மாறா உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் பயணம் செய்யும் இவர்களின் சுமைகளைப் பகிர்ந்துகொள்ள இன்னும் இன்னும் தோள்கள் உயருமா எனும் கேள்விக்கு வரும்போது நடந்தும் வாகனங்களிலும் வெறிச்சிட்ட மீட்கப்பட்ட நகரங்களை உயிர்ப்பித்தவாறு உலவிக் கொண்டிருந்த எல்லைப் படைவீரர்களினதும், தங்கள் மனம் நிறைவடையக் கூடியதாக இப்போருக்கான தமது பணிபற்றிய தேடலுடன் வீதிகளில் உலவும் மக்களினதும் முகங்களே மனதுள் வந்துபோயின.

சத்தியத்தைச் சுமப்பவர்களின் துயரினை மறந்து சரித்திரம் ஒருபோதும் தீர்ப்பினை எழுதுவதில்லை எனும் நினைவினை சுமந்து இருளும், குளிரும் பொழுதைப் போர்த்தியிருந்த அந்த முன்னிரவில் அவர்களிடமிருந்து விடைபெற்றோம்.

**-தாரணி**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்




www.tamilarangam.net

காப்பை ஒத்ததான உச்ச பாதுகாப்புக் கொண்டதாக அத்துறைமுகப்பிரதேசம் இருந்தது.

இந்நிலையிலும் இத்துறைமுகப் பிரதேசத்திற்குள் ஊடுருவியதோடு, அதனைச் சூழவுள்ள பகுதி ஒன்றை தமது தேவையின் நிமித்தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும் பயன்படுத்தவும் விடுதலைப் புலிகளினால் முடிந்தது எவ்வாறு என்பதே சிறீலங்கா இராணுவ வட்டாரத்தில் எழுந்துள்ள முக்கிய கேள்வியாகும்.

விடுதலைப் புலிகளின் இத்தாக்குதலானது பல வகையில் முக்கியத்துவம் பெற்ற தொன்றாகும். இதில் முதலாவதாக தாக்குதல் திட்டத்தினைக் குறிப்பிடமுடியும். திருகோணமலைத் துறைமுகத்தின் அமைவானது இயற்கையின் சீற்றத்தில் இருந்து ஒரு பெரும் கப்பற்படைக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடியது என்பது மட்டுமல்ல எதிரிகளின் தரைவழித் தாக்குதலாயினும் சரி கடல்வழித் தாக்குதலாயினும் சரி அவற்றில் இருந்தும் பாதுகாப்பு அளிக்கக் கூடியதாகும்.

# திருமலைத் துறைமுகத்தின் பாதுகாப்பை பெரும் கேள்விக்குள்ளாக்கிய தாக்...

திருமலைத் துறைமுகத்தினுள் கடந்த திங்கட்கிழமை (23.10.2000) விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் தாக்குதல் சிறீலங்கா இராணுவ அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. புலிகளின் இத்தாக்குதல் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மிக உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிட்டதோடு மட்டுமல்ல, இது குறித்த விசாரணைகளுக்கு நேரடியாகப் பணிப்புக்களை விடுத்து வருவதில் இருந்தே இதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளமுடியும்.

கடற்கரும்புலிகளும், கடற்புலிகளின் படையணியினரும் திருமலை தாக்குதல் படையணியும் இணைந்து மேற்கொண்ட இவ் வெற்றிகரமான தாக்குதலில் சிறீலங்கா ஆயுதப்படை போர்த்தளபாட ரீதியில் பலத்த இழப்பைச் சந்தித்தது என்பதில் கேள்விக்கு இடமில்லை. இத்தாக்குதலில் ஒரு தரையிறங்குக் கப்பல், ஒரு டோறா, அதிவேக பீரங்கிக்கலம் உட்பட மூன்று போர்க்கப்பல்களும் ஒரு இராணுவத்திற்கான விநியோகக் கப்பலும் அழிக்கப்பட்ட அதேவேளை சிறீலங்கா விமானப்படையின் எம்.ஐ.24 ரக உலங்குவானூர்தியும் லெப்.கேணல் ராதா விமான எதிர்ப்புப் படையணியினால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

இவ்வாறானதொரு இராணுவத் தளபாட இழப்பை சிறீலங்கா இராணுவத் தரப்போ அன்றி அரசியற்தரப்போ திருமலைத் துறைமுகத்தில் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள் என்பது நிச்சயமானது. ஏனெனில் திருமலைத் துறைமுகம் மிக உச்சப் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கூடியதானதொரு பிரதேசமாகும். சற்று விரிவாகக் கூறுவதானால் வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் உச்சப் பாதுகாப்புக் கொண்ட பலாலி-காங்கேசன்துறை கூட்டுத்தளத்தின் பாது

அதாவது கடல்வழித் தாக்குதல் அணிகள் எவையும் திருமலைத் துறைமுகம் அமைந்துள்ள கொட்டியாரக்குடாவிற்குள் பிரவேசிப்பதென்பதும் இலகுவானதொன்றல்ல. ஒடுங்கிய வாயிலைக் கொண்ட இக்குடாவை ஒரு கப்பற்படையின் சிறிய அணியினர்கூட மூடிவிடமுடியும்.

இதேசமயம் திருமலைத் துறைமுகத்தின், குறிப்பாக கடற்புலிகளினால் தாக்குதலுக்கு உள்ளான கடற்படைத் தளத்தின் மீது தரைப்பகுதி ஊடாக தாக்குதல் நடத்துவதாயின் மிக ஒடுங்கிய ஒரு பிரதேசத்தின் ஊடாகவே உட்புகுதல் வேண்டும். இது சாத்தியப்பாடற்றதொன்றாகும்.

இந் நிலையில் தாக்குதல் திட்டமானது மிகவும் நுட்பமான முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஒருபுறம் கொட்டியாரக் குடாவிற்குள் அதிவேகமாக உட்புகும் கடற்புலிகளின் தாக்குதல் அணிகளும் கடற்புலி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களும் கடற்படையின் துறைமுகத்தில் தரித்திருந்த சிறீலங்காவின் கடற்படை அணியை நேரடியாகத் தாக்கிய அதே வேளை, கொட்டியாரக்குடாவின் மேற்குக் கரையோரப் பகுதியில் இருந்து எறிகணைகள் மூலம் கடற்பரப்பிற்கு மேலால் துறைமுகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

அதேசமயம் கொட்டியாரக்குடாவின் மேற்குக்கரை, அதாவது சீனன்குடாப்பகுதி பாதுகாப்புக் குறைந்ததொரு பகுதியல்ல. சிறீலங்காவின் விமானப்படைத் தளம் ஒன்று அப்பகுதியில் உள்ள அதேவேளை இராணுவ முகாம்களும் படையினரும் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். இந் நிலையில் கொட்டியாரக்குடாவிற்குள் கடற்புலி அணிகள் எவ்வாறு புகுந்தது என்பதும், கொட்டியாரக்குடாவின் மேற்குக் கரைக்கு குறிப்பாக "மாபிள்பீச்" பளிங்குக் கடற்கரை பிரதேசம் நாச்சிக்குடா மற்றும் வெள்ளை மணல் பகுதிக்குள் தரைத்தாக்குதல் அணிகள் எவ்வாறு நிலைகொண்டன என்பதுமே அவர்கள் முன் எழுந்துள்ள முக்கிய கேள்வியாகும்.

அதிலும் தரைத்தாக்குதல் அணி மோட்டார்கள் உட்பட கனரக ஆயுதங்களையும் கொண்டு இப்பகுதிக்குள் ஊடுருவியுள்ளதை அவர்கள் கடற்படை துறைமுகம் மீதும் எம்.ஐ.24 ரக உலங்குவானூர்தியைச் சுட்டு வீழ்த்தியமையும் வெளிக்காட்டுவதாக உள்ளது.

இந்த நிலையில் இத் தாக்குதல் திட்டமானது மிகவும் நேர்த்தியானதாகவும், நுட்பமானதாகவும் அமைந்திருந்தது என்பதில் இரண்டாம் கேள்விக்கே இடமில்லை. இதே போன்றே இத்தாக்குதலானது இராணுவ பொருளாதார அரசியல் ரீதியில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்களும் கேள்விக்குரியவையல்ல.

# ...குதல்!

இராணுவரீதியில் நவீன போர்க்கப்பல்கள் சிலவற்றையும் தாக்குதல் உலங்குவானூர்தி ஒன்றையும் சிறீலங்கா ஆயுதப் படையினர் இழந்தது மட்டுமல்ல கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருமலைத் துறைமுகம் மற்றும் அதைச் சூழ கொட்டியாரக் குடாப் பகுதி முழுவதற்குமான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மீளாய்வு செய்யப்பட வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது.

1995இல் இக் கடற்படைத் தளத்தின் மீது கடற்கரும்புலிகள் நடத்திய தாக்குதலில் ரணவிரு, சூரயா போர்க்கப்பல்கள் மூழ்கடிப்பைத் தொடர்ந்து திருமலைத் துறைமுகத்தின் பாதுகாப்பிற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டிருந்தது. நவீன கடற்படைச் சாதனங்கள் உட்பட புதிய யுக்திகளும் வகுக்கப்பட்டிருந்தன.

ஆனால் தற்போதைய தாக்குதலானது கடற்படைத் துறைமுகத்தின் பாதுகாப்பு வியூகத்தை மட்டுமல்ல இத் துறைமுகம் அமைந்துள்ள கொட்டியாரக்குடாவின் பாதுகாப்பையே கேள்விக்குரியதாக்கியுள்ளது.

ஆனால் இப்பகுதிகூட பாதுகாப்பற்ற பகுதியாக இருந்ததில்லை. குறிப்பாகப் புலிகள் மோட்டார்களை நிலைநிறுத்திய "மாபிள்பீச்" பளிங்குக் கடற்கரை பகுதி மற்றும் மோதல்களில் ஈடுபட்ட நாச்சிக்குடா பகுதி போன்றவை சீனன்குடாவில் அமைந்துள்ள விமானப் படைத்தளத்தின் பாதுகாப்பிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்ட பகுதியாகும். இந்நிலையில் இத் துறைமுகத்தின் மீதான தாக்குதலானது சீனன்குடாவிலுள்ள விமானப் படைத்தளத்தின் பாதுகாப்புக் குறித்தும் சில கேள்வியை எழுப்புவதாக உள்ளது.

இவற்றிற்கும் அப்பால் வடபகுதிப் போர் முனைக்கான முக்கிய கடல்வழி விநியோக மார்க்கமாக திருமலைத் துறைமுகமே உள்ளது. இக் கடல்வழி விநியோகப் பாதை அடிக்கடி விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகின்றபோதும், இவ்விநியோக மார்க்கமானது இராணுவத் தரப்பிற்கான முக்கியத்துவத்தை இழந்து விடவில்லை.

இந் நிலையில் திருமலைத் துறைமுகத்தில் ஏற்படும் ஒவ்வொரு சிறிய பாதிப்பும் குடாநாட்டிலுள்ள இராணுவத்தினரின் மன நிலையைப் பெரியளவில் பாதிப்பிற்கு உள்ளாக்கக் கூடியதாகும்.

இராணுவ ரீதியில் இவ்வாறாகப் பல நெருக்கடியை உருவாக்கியுள்ள இத்தாக்குதலானது சிறீலங்காவின் பொருளாதாரத்திலும் பாதிப்புக்களை விளைவிக்கும் சக்தி பொருந்தியதாகவே உள்ளது. அதாவது, திருகோணமலைத் துறைமுகத்தை அடியொட்டியதாக உருவாக்கப்பட்டுள்ள பொருளாதார நடவடிக்கைகள், குறிப்பாக பெரும் ஆலைகள் மற்றும் கப்பற் போக்குவரத்து என்பனவற்றின் எதிர்காலம் குறித்து ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் எழக்கூடும்.

சிறீலங்காவில் இரண்டாவது பெரிய துறைமுகமான திருமலைத் துறைமுகம் சர்வதேசக் கடல்வழிப் போக்குவரத்துடனும், பிறிமா மா ஆலை, மிச்சுபிசி சீமெந்து ஆலை போன்ற முக்கிய ஆலைகளின் உற்பத்தியுடனும் தொடர்பு கொண்டுள்ளது. ஆகையினால் இத்துறைமுகத்தின் பாதுகாப்பு இன்மையோ கப்பற் போக்குவரத்திற்கான இடையூறுகளோ சிறீலங்காவின் பொருளாதாரத்தில் பாதிப்பை விளைவிக்கத்தக்கதாக அமைவது தவிர்க்க இயலாததாகவே இருக்கும். அதிலும் வெளிநாட்டு முதலீடுகளுடன் கூடியதான தொழிற்சாலைகள் செயற்படுவதில் ஏற்படும் பாதிப்பானது வெளிநாட்டு முதலீட்டையே பெருமளவும் நம்பியுள்ள சிறீலங்காவிற்கு குறிப்பிடத்தக்க தாக்கத்தினை விளைவிக்கத் தக்கதாகும்.

இவற்றிற்கு அப்பால் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தமே முடிந்த முடிவு என்ற கடுமையான நிலைப்பாட்டினை எடுத்துள்ள நிலையில் விடுதலைப் புலிகள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருமலைத் துறைமுகத்தினுள் பாரிய தாக்குதல் ஒன்றை நிகழ்த்தியிருப்பதானது ஆளும்தரப்பிற்கு கொடுக்கப்பட்டுள்ள பலமானதொரு அடி என்பதில் ஐயமில்லை.

இவற்றின் விளைவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்விடயத்தில் தீவிர அக்கறை காட்டவதற்குக் காரணமாகும். அதாவது திருமலைத் துறைமுகத்தில் ஏற்படும் குழப்பங்கள், நெருக்கடிகள் இராணுவ - பொருளாதார அரசியல் ரீதியில் விளைவிக்கும் பாதிப்புக்கள் மிகக் காத்திரமானவையாகவே இருக்கும்.

-ஜெயராஜ்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத்தமிழர் விடுதலைப்போராட்டமும் அதன் இலக்கியப் பதிகையும்

கருணாகரன்

எமது வரலாறு எப்படியானது? நாம் வரலாற்றில் எப்படி இருக்கிறோம்? எமது வரலாறு எப்படி அமையப்போகிறது? இவை அடிப்படையானதும் மிக முக்கியமானதுமான இன்றைய கேள்விகள்.

இந்த நூற்றாண்டில் ஈழத்து அரசியல் இரண்டு பிரதான நிலைமைகளில் இருந்திருக்கிறது. பிரித்தானியர் ஆட்சியின் கீழான அரை நூற்றாண்டு கால அரசியல் ஒன்று. சிங்கள ஆட்சியாளரை எதிர்த்துப் போராடும் பின் அரை நூற்றாண்டு கால அரசியல் மற்றையது. இந்த இரண்டு நிலைமைகளுக்கேற்ப தமிழரின் வாழ்வும், சிந்தனையும், அநுபவமும், மாற்றம், வளர்ச்சி, தேக்கம், உடைப்பு, பாய்ச்சல் என்பனவற்றைக் கண்டிருக்கிறது. இவையெல்லாம் ஈழத்தின் கலை, இலக்கியத்திலும் பிரதிபலித்திருக்கின்றன.

ஈழத்துக் கலையும் இலக்கியமும் அநேகமாக எப்போதும் சமூக அரசியல், கலாச்சாரத் தளத்தையே பிரதிபலித்திருந்தே வந்திருக்கின்றன. இதில் எந்த அணியாக இருந்தாலும் அதனதன் போக்கிற்கேற்பவும் கொள்கைகளுக்கமையவும் தத்தம் நிலைப்பாட்டில் நின்று இந்த அம்சங்களில் எமது இலக்கிய அமைப்புகளும் குழுக்களும் செயற்பட்டிருக்கின்றன. தமிழ்க் கலை, இலக்கிய வரலாற்றில் ஈழம் இந்த அடிப்படையில் எப்போதும் தன் கவனிப்பைச் செலுத்தியே வந்திருக்கிறது.

இலங்கை சுதந்திரம் பெற்றபின் நிகழ்ந்த ஆட்சிமாற்றம், அரசியல் மாற்றங்களுக்கேற்ப தமிழ்மக்களின் வாழ்விலும் மாற்றம் ஏற்பட்டது. இந்த மாற்றம் ஆங்கிலேயரின் ஆட்சியின்போது இருந்த வாழ்வை விடவும், பிரச்சினைகளைவிடவும் வேறானது. சுதந்திரத்தின் பின்பு சிங்கள ஆட்சியாளர்கள் தமிழின விரோத நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர். ஆரம்பத்தில் தமிழரின் பாரம்பரிய நிலப்பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி நில ஆக்கிரமிப்பைத் தொடங்கியதிலிருந்து இன்று வரை பல வடிவங்களிலும் ஒடுக்குமுறை விஸ்வரூபமாகி இன்று போராகப் பரிணமித்துள்ளது.

தமிழ் மக்களின் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் சகல ஒடுக்குமுறைகளையும் அந்தந்தக் காலங்களிலேயே கலை, இலக்கியங்களில் பதிவு செய்தும், இந்த ஒடுக்குமுறையின் அநியாயத்தை எதிர்த்தும் வந்திருக்கிறார்கள் எமது படைப்பாளிகள். தமிழினத்தை விழித்தெழச் செய்து, போராட உத்வேகப்படுத்தி, போராட்டத்தின் நியாயப்பாட்டை வலியுறுத்தி எமது கலை, இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.

ஒடுக்குமுறைகளின்போதும், ஒடுக்குமுறைக்கு எதிரான போராடுதலின்போதும் கலை, இலக்கியங்கள் அவற்றிற்குரிய வலுவோடும் குணவியல்புகளோடும் உலகெங்கும் படைக்கப்பட்டுள்ளன. இந்த அறிமுகங்களையும், அநுபவங்களையும் எமது படைப்பாளிகள் உள்வாங்கி, எமது விடுதலைக்கான கலை, இலக்கியத்தைப் படைத்திருக்கிறார்கள். அதேவேளையில் உலகின் பிற தேசங்கில் நிகழ்ந்த போராட்ட இலக்கியங்களும் எமது தேவை கருதியும் சூழற்பொருத்தம், கால இசைவு கொண்டும் மொழிமாற்றங்களினூடாக தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வியட்நாமிய விடுதலைப் போராட்ட இலக்கியம், பாலஸ்தீன விடுதலைக் கவிதைகள், லத்தீன் அமெரிக்க நாடுகளின் போராட்டப் படைப்புகள், சீன இலக்கியம், ரஷ்யப் படைப்புகள் என இது விரிகிறது.

தமிழ் மக்களின்மீது காலத்துக்குக் காலம் நிகழ்த்தப்பட்டுவரும் அரசியல் வன்முறைகள் ஒடுக்குமுறைச் சட்டங்கள் - நடவடிக்கைகள் எல்லாம் எவ்வெவ்காலங்களில் எப்படியெப்படி நிகழ்த்தப்பட்டனவோ, அவையெல்லாம் இலக்கியத்தில் பதியப்பட்டுள்ளன. இது இலக்கியத்தினூடான அரசியல் வரலாறு அல்ல. அரசியல் வரலாற்றின் இலக்கியப் பதிகை என்று அமைந்திருக்கிறது. தமிழர்களின் வரலாறே பொதுவாக இலக்கியப் பதிவினூடாகவேதான் நிகழ்ந்து வந்திருக்கிறது. வேறு ஒழுங்கும் கட்டமைவும் கொண்ட வரலாற்றுப் பதிவு எதுவும் தொடர்ச்சியாக நிகழ்ந்திருப்பதாக வேறு சான்றுகள் இல்லை. இந்தியாவிலும் ஈழத்திலும் தமிழர் வாழ்வு இப்படித்தான் இருந்திருக்கிறது. தமிழரின் வாழ்வையும் வரலாற்றையும் இலக்கியங்களே பேசி வந்திருக்கின்றன. இதன் தொடர்ச்சியாகவே இந்த அரை நூற்றாண்டுகால எமது வாழ்வும் வரலாறும் எங்களின் படைப்புலகிலும் இடம்பெற்றுள்ளன.

எங்களுடைய அரசியல் வரலாறு இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு பெரும் நெருக்கடிக்குள்ளாகியே வருகின்றது. இதனால் எமது வாழ்வும் தாக்கங்களுக்குள்ளாகி வந்துள்ளது. 1948ல் தமிழர் தாயகப் பரப்பில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், 48ல் மலையகத் தமிழர்களின் பிரஜாவுரிமை பறிப்பு, 56ல் தனிச்சிங்களச் சட்டம், 58ல் 105 தமிழர்கள் பலியாகிய இனக்கலவரம், 72ல் புதிய அரசியல் திருத்தச் சட்டத்தில் சிங்கள மொழிக்கும் பௌத்தத்துக்கும் முதலிடம், அத்துடன் தரப்படுத்தல், 74ல் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள், 77ல் மீண்டும் இனக்கலவரம், 81ல் தமிழர் நகரங்கள் எரிப்பு, பொதுமக்கள் தாக்கப்படுதல், யாழ். நூலக எரிப்பு, தொடர்ந்து இராணுவ வன்முறைகள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், 83ல் மீண்டும் இனக்கலவரம், அவசர காலச் சட்டம், ஊரடங்குச் சட்டம், தமிழ்ப் பொதுமக்கள் சுடப்படுதல், கைதுகள், சிறைவைப்புகள், சித்திரவதைகள், காணாமற்போதல்கள் என்று தொடர்ந்து கடல்வலயச் சட்டம், சிறைச்சாலைப் படுகொலகள், குண்டு வீச்சுகள், எறிகணை வீச்சுகள், கிராமங்கள் சுற்றி வளைக்கப்படுதல், படுகொலை செய்யப்படுதல், கிராமங்கள் ஆக்கிரமிக்கப்படுதல், பெண்கள் பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கப்படுதல், மக்கள் அகதிகளாக விரட்டப்படுதல், மருந்துத்தடை, போக்குவரத்துத் தடை என்று நீளுகிறது ஒடுக்குமுறையின் மாபெரும் விரிகரம்.

அரை நூற்றாண்டில் எமது இனம் சந்தித்த இன்னல்கள் சாதாரணமானவையல்ல. எங்களின் துயரம் சிறியதல்ல. எமது வாழ்வு சந்தித்த நெருக்கடிகள் கொஞ்சமல்ல. எங்களின் துயரம் பெரியது. எங்களின் கண்ணீர் வலியது. எங்களின் பாடுகள் அதிகமானவை. நாம் சாவை உதைத்து வாழவே பிறந்தோம். ஆமாம் மரணம் வலியது. எனினும் வாழ்வு அதனிலும் பெரியது; வலியது என்று எழுந்தோம். இந்த எழுச்சி 1949ல் மலையகத் தமிழரின் குடியுரிமை பறிக்கப்பட்டபோது கண்டனக் குரலாக ஒலித்தது. பின்பு 1961இல் சத்தி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாக்கிரகப் போராட்டமாகியது. தொடர்ந்து தமிழ் மக்களின் ஆயுதமேந்திய விடுதலைப் போராட்டமாக வளர்ச்சி பெற்றது. இன்று நாம் விடுதலைக்காகப் போரிடும் மாபெரும் சக்தியாக, பேரியக்கமாக, வரலாறாக, வரலாற்றை உருவாக்கும் இயக்க விதியாக மாறிவிட்டோம். எங்களின் போராட்டம் உண்மையும் நியாயமும் உடையது. தியாகமும் அர்ப்பணிப்பும் நிறைந்தது. உணர்வும் கருணையும் மிக்கது. தர்மத்தின் பாற்பட்டது. தமிழர் வாழ்வுக்குப் புதியது. உலகப் போராட்ட வரலாற்றில் பொதுவானது. எங்களின் விடுதலைக்கும் சுதந்திரத்துக்கும் ஒரே ஆதாரமானது.

இந்த ஐம்பது ஆண்டுகளிலும் நாங்கள் சந்தித்த அனுபவங்கள் சாதாரணமானவை அல்ல; அவை கொஞ்சமுமல்ல. நாம் சந்தித்த நெருக்கடிகள் சிறியவையுமல்ல. எமது போராட்டம் ஒரு சிறுபொறியுமல்ல. அது பெருந்தீ; பற்றிப் படரும் மாபெரும் அக்கினிக்கொழுந்து.

இப்படித்தான் எமது வாழ்வும் வரலாறும் இருக்கின்றது.

இனப்பிரச்சினை எமது இனத்தின் உள்ளேயும் வெளியேயும் ஏற்படுத்திய தாக்கங்கள் வலுவானவை. எமது ஆன்மா நசியுண்டபோதும் எமது ஆன்மா விழித்தெழுந்தபோதும் அதை வெளிப்படுத்தியிருக்கின்றன எமது படைப்புகள். மலையகத் தமிழரின் பிரஜாவுரிமை பறிப்புடன் வெளிப்படையாகத் தமிழின ஒடுக்குமுறையில் செயற்பட ஆரம்பித்த சிங்களப் பேரினவாதத்தின் முகத்தை அம்பலப்படுத்திய சிறுகதை அ.செ. முருகானந்தனின் "காளி முத்துவின் பிரஜாவுரிமை" இக்கதை 1951ல் எழுதப்பட்டது. இதைத்தொடர்ந்து செந்தூரன் எழுதிய "உரிமை எங்கே", சத்தியாக்கிரகப் பேராட்டத்தைச் சித்தரிக்கும் "உரிமைக்கு உயிர்" (முத்து சிவஞானம்), "அப்பேலங்கா" (புதுமைலோலன்), "நந்தாவதி" (செ. கணேசலிங்கம்), "1+1=1, 1-1=2" (வ.அ.இராசரத்தினம்) மற்றும் இனக்கலவரத்தை வைத்து எழுதப்பட்ட "கற்பு" (வரதர்), "இரத்தம்" (மு.தளையசிங்கம்), "எதிரொலிகள்" (பிரான்சீஸ் சேவியர், "பேய்களுக்கு யார் பயம்" (இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்) என்பன வெளிவந்தன. சிங்களக் குடியேற்றத்தை எதிர்க்கும் கதையாக "அந்நியமான உண்மைகள்" (சாந்தன்), மொழிப்பிரச்சினையைச் சித்தரிக்கும் "கிருஸ்ணன் தூது" (சாந்தன்), "இன்னொரு மனிதன்" (செ.யோகநாதன்) மற்றும் "தேடி வந்த கண்கள்" (உதயணன்), "மனிதர்களும் மனிதர்களும்" (சாந்தன்) ஆகியன.

தமிழர்களும் ஒரு தேசிய இன மக்கள், உரிமைக்கு உரித்துடையவர்கள், இந்த மண்ணுக்குச் சொந்தமானவர்கள், இலங்கையில் வேறு இனமக்களுடன் ஒற்றுமையாக வாழவும், பிரிந்துபோகவும் தயாரானவர்கள் எனும் கருத்தோட்டத்தை முன்னிறுத்தியவை. இதேபோல மலையகத் தமிழர் இனரீதியாகப் பாதிக்கப்பட்ட நிகழ்வைச் சொல்லும் இன்னொரு சிறுகதை "எங்கள் இரத்தங்கள் வித்தியாசமானவை". தமிழாராட்சி மாநாட்டுப் படுகொலையின் வெளிப்பாடு வரதரின் "இனி ஒரு புதுயுகம் பிறக்கும்" அவசரகால நிலையைச் சித்தரிக்கும் கதை பிரான்சீஸ் சேவியர் எழுதிய "விடியாத இரவுகள்" குருநகர் மீனவர் படுகொலையைச் சித்தரித்தது ச. முருகானந்தனின் "தரை மீன்கள்" இவை தவிர ஜனகமகள் சிவஞானம், சந்திரா தியாகராஜா, குமுதன், நந்தி, சுதாராஜ், ஞானரதன், சு.இராஜநாயகன், சொக்கன், ந. சத்தியபாலம், தெணியான், மு.பொ, கோகிலா மகேந்திரன், செம்பியன் செல்வன், தெளிவத்தை ஜோசெப், சண்முகம் சிவலிங்கம், செ.பொ. சிவனேசு, இணுவையூர் சிதம்பரதிருச் செந்திநாதன் என்று பலரும் போராட்டச் சிறுகதைகளை எழுதியிருக்கின்றார்கள்.

1983இலிருந்து போராட்டச் செயற்பாடுகளும் மக்களின் மனஉணர்வுகளும் வாழ்க்கை முறையும் இன்னொரு கட்டத்தை அடைந்தது. இவற்றைப் பிரதிபலிப்பனவாகப் பல படைப்புக்கள் அக்கால கட்டத்தில் எழுதப்பட்டன. எண்பதுகளில் கலை இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்ட எல்லாக் கலைஞர்களும் முழுப் படைப்பாளிகளும் போராட்டக் கலை இலக்கியத்தை வெளிப்படுத்தியிருந்தார்கள். அப்போது வெளிவந்த மிக முக்கியமான படைப்புக்களாக "கோசலை", "காலம் உனக்கொரு பாட்டெழுதும்" (ரஞ்சகுமார்), "இப்படியும் ஒரு காலம்" (அ. இரவி), "கேள்விகள் உருவாகின்றன" (நந்தி) என்பன முதன்மை பெறுகின்றன. எண்பதுகளில் பல புதிய படைப்பாளிகள் தோன்றினர். இந்திய இராணுவத்தின் வருகை, அதன் பின்னான இரண்டாம் ஈழயுத்தம் என்பன இலக்கியத்தில் பதியப்பட்டுள்ளன. "காலங்கள்" (சாந்தன்), "காலத்தகைமை" (செம்பியன் செல்வன்), "அரசனின் வருகை" (உமா வரதராஜன்), "ஒரு



மழைக்கால இரவு" (தாமரைச்செல்வி) என்று இன்னும் பலவாக இது விரிகின்றது.

சிறுகதைகளில் மட்டுமல்ல, கவிதைகளிலும் இத்தகைய முன்வைப்புக்கள் நிகழ்ந்தே வந்திருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் அதிகமாகவும், ஆழமாகவும், அழுத்தமாகவும் நமது அரசியல் பிரச்சினை பேசப்பட்டுள்ளதெனலாம். கவிதையின் வடிவமும் அதன் பொருளுணர்த்தும் இயல்பும் போராட்டத்தை மேலும் உத்வேகப்படுத்தக்கூடிய பொதுக் குணச்சிறப்பும் அதிகம் அதற்கு உண்டு. நமது கவிதையும் இந்த அடிப்படையில் 50 ஆண்டுகளாக முழங்கியே வந்திருக்கின்றது. மஹாகவி, காசி ஆனந்தன், முருகையன், நீலவாணன், இராஜபாரதி, பாண்டியூரான், தில்லைச்சிவன், சண்முகம் சிவலிங்கம், சிவசேகரம், சா. வே. பஞ்சாட்சரம், மு. பொ, நுஃமான், புதுவை இரத்தினதுரை, அ. யேசுராசா, இளவாலை விஜயேந்திரன், நிலாந்தன், முல்லையூரான், ஊர்வசி, மைத்ரேயி, கல்வயல் வே. குமாரசாமி, தா. இராமலிங்கம், சாருமதி, சோலைக்கிளி, மு.இ.அ. ஜபார், நா. சபேசன், ஆதவன், ஹம்சத்வனி, நற்பிட்டிமுனைபஷீர், வாசுதேவன், செ.பொ.சிவனேசு என்று தொடர்ந்து நீள்கிறது கவிஞர்களின் வரிசை. இதில் அறுபதுகளிலே எழுதப்பட்ட காசி ஆனந்தனின் 'தமிழன் கனவும்', சண்முகம் சிவலிங்கத்தின் 'வெளியார் வருகையும்' மிக முக்கிய கவனத்துக்குரியன. இன எழுச்சியையும் போராட்டத்தின் அவசியத்தையும் நியாயத்தையும் அதற்கான அர்ப்பணிப்பையும் வீரியத்தையும் வெளிப்படுத்தியுள்ளன நம் கவிதைகள். சிங்களப் பேரினவாதத்தின் அராஜக மனத்தை உலகின் முன் அம்பலப்படுத்தியிருக்கின்றன இவைகள். காலப் பதிவாகவும், வரலாற்றுச் சான்றுகளாகும் நியாயக் குரல்களாகவும் இவை அமைந்திருக்கின்றன.

ஈழத்தின் அரசியல் பிரச்சினையைப் பேசிய இலக்கிய வடிவங்களில் நாவல்களும் இடம்பெறுகின்றன. ஆனாலும் சிறுகதைகளில் எழுதப்பட்ட அளவுக்கோ கவிதைகளின் வெளிப்பாட்டுத் தொடர்ச்சியோ போலல்லாமல் இருந்தாலும் பதிவுகளாகவும் பிரச்சினையைப் பேசுபவையாகவும் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றில் "இலங்காராணி" (அருளர்) முக்கியத்துவம் பெறும் நாவல். "ஒரு கோடைவிடுமுறை" (இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்), "ஒட்டுமா" (நாவல்), "வதையின் கதை" (செ. கணேசலிங்கம்) என்பன ஏனைய நாவல்கள்.

தொடரும்....



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

ஈழநாதம்
மக்கள் தினசரி
www.tamilarangam.net

# இரட்டைத்தனம் !

'நோர்வே நாட்டுத் தூதுக் குழுவினர் வன்னிக்கு விஜயம் செய்தது தொடர்பாகவும், விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேசியது தொடர்பாகவும் எனக்கு எதுவும் தெரியாது' என சிறீலங்காவின் பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார். சிறீலங்காப் பிரதமரின் இக் கூற்றுக்கள் நோர்வேக் குழுவின் விஜயத்திற்கும் தனக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதை வெளிப்படுத்துவதற்காகக் கூறப்பட்டதாகும்.

சிறீலங்கா அரசியல்வாதிகள் இவ்வாறு பேசுவதொன்றும் புதுமையானதல்ல. ஒரு விடயத்தை ஒருவர் முன்னெடுப்பதும், ஆதரித்துப் பேசுவதும் நடந்து கொண்டிருக்கையில் அதே கட்சியில் வேறொருவர் அதற்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்வதும், பேசுவதும் வழமையானதே ஆகும். அதிலும் இனப்பிரச்சனை விவகாரத்தில் இவ்வாறு நடந்து கொள்வது இதுதான் முதற் தடவையும் அல்ல, ஆகையினால் இது புதுமையானதும் அல்ல.

அத்தோடு, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா வெளியிட்டுள்ள கருத்து சிலரால் ஏற்றுக் கொள்ளப்படவும்கூடும், ஏனெனில் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ஏற்கனவே சமாதானப் பேச்சுக்களை நிராகரித்துவிட்டதோடு, நோர்வேயின் மத்தியஸ்தத்தையும் நிராகரித்தவரும் ஆகும்.

ஆனால் தற்போதைய அரசியல் - பொருளாதாரச் சூழ்நிலையில் சந்திரிகா குமாரதுங்காவினால் அவ்வாறானதொரு நிலைக்குச் செல்ல முடியாத நிலையே உள்ளது. ஏனெனில் சந்திரிகா குமாரதுங்கா அரசினால் இன்னமும் அடுத்த ஆண்டிற்கான (2001) வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்க முடியவில்லை. அத்தோடு உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து இவ்வாண்டிற்கான கடனையும் பெறமுடியவில்லை.

இந்நிலையில் அரசியற் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை மேற்கொள்ளாது வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளுதல் கடினமானதொன்றாகவே இருக்கும். ஆகையினால் வரவு- செலவுத் திட்டத்தில் அதிகரித்த பெரும் துண்டு விழும் தொகையை ஈடுகட்டுவது என்பதும் இலகுவானதொன்றாக இருக்க மாட்டாது. இதனால் ஆட்சித்தலைவரான சந்திரிகா குமாரதுங்காவினால் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா நோர்வே குழுவை நிராகரித்தது போன்று இலகுவில் நிராகரித்துவிட முடியாது.

இருப்பினும், இனப்பிரச்சனைக்கான அரசியற் தீர்வு புலிகளுடன் பேச்சுவார்த்தை என்ற விடயத்தில் இரட்டைத்தனமான ஒன்றிற்கொன்று முரணான அபிப்பிராயங்களை உருவாக்குவதும் குழப்பங்களை மேற்கொள்வதும் எதிர்பார்க்கத்தக்கதொன்றுதான். அத்தோடு சமாதான முயற்சிகள் சற்று உத்வேகம் பெற பௌத்த பேரினவாதமும் அதற்கெதிராக கிளர்ந்தெழுந்து குழப்பியடிப்பதும் எதிர்பார்க்கத் தக்கதே.

இவ்வாறானதொரு நிலையே சிறீலங்காவின் அரசியல் என்றாகிவிட்ட நிலையில் விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் ஏன்? என்ற கேள்வி பலர் மத்தியில் தவிர்க்கப்பட முடியாது எழும்புவதும் உண்டு. அதாவது சமாதான முயற்சிகள் அர்த்தமற்றவை எனின் ஏன் அது நடைபெறுதல் வேண்டும் என்பதாகும். ஆனால், இங்கு விடுதலைப் புலிகளின் நடவடிக்கையை அரசியல்- இராஜதந்திரத்தின் பாற்பட்டது என்றே நோக்குதல் வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் சமாதானம் குறித்த நிலைப்பாட்டை நீண்ட காலமாகத் தெளிவாகவே வலியுறுத்தி வந்துள்ளார். இது மகத்தான இராணுவ வெற்றிகளின்போதும் சரி, பின்னடைவுகளின்போதும் சரி மாற்றம் கொண்டவையாகவும் இருந்ததில்லை. இதனை அடிப்படையாகக் கொண்டே நோர்வே குழுவினரின் வன்னி வருகையும், அவர்களைத் தேசியத் தலைவர் பிரபாகரன் சந்தித்தமையையும் பார்த்தல் வேண்டும்.

சமாதானம் குறித்தும், அரசியல் நிலைப்பாடு குறித்தும் விடுதலைப் புலிகள் எப்பொழுதுமே இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. ஆகையினால், நோர்வே குழுவைச் சந்தித்து தேசியத் தலைவர் பிரபாகரன் புலிகளின் நிலைப்பாட்டைத் தெளிவாக்கியுள்ளமை இனப்பிரச்சனைத் தீர்வு விவகாரத்தில் எங்கே நெருக்கடி உள்ளது என்பதை அது புரிந்து கொள்வதற்கான வாய்ப்பைக் கொடுக்கக்கூடியது ஆகும்.

அதாவது, இனப்பிரச்சனை குறித்து உறுதியானதொரு நிலைப்பாட்டையும், ஒருமித்த நிலைப்பாட்டையும் ஆட்சியாளர்கள் கொண்டிருக்கவில்லை. அவர்கள் அரசியல் இராணுவ சூழ்நிலைகளுக்கு ஏற்பவே இனப்பிரச்சனைக்கான தீர்வு குறித்துப் பேசுகின்றார்கள். இதனை உலகம் புரிந்து கொள்வது அவசியமானதாகும். இல்லாதுவிடில், இனப்பிரச்சனைக்கான தீர்வில் உள்ள முக்கிய நெருக்கடிகளை அவர்களால் உணர முடியாது போவது மட்டுமல்ல, பிரச்சனைக்கு ஓர் அரசியற் தீர்வு நோக்கிப் போவதற்கான வாய்ப்புக்களை முன்நோக்கி நகர்த்திச்செல்லவும் முடியாது.



ஓவியர் புகழேந்தி – தமிழ்நாடு




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாராளுமன்ற உறுப்பினருக்கே இதுவெனில்!

“அவசரகாலச் சட்டவிதிகளில் உள்ள அத்தனை விதிகளின் கீழும் குற்றவாளி எனக் கருதப்பட்டே நான் கைதுசெய்யப்பட்டதாக தடை உத்தரவுப் பத்திரம் எனக்குக் கையளிக்கப்பட்டது. ஆனால் விசாரணையின்போது எந்தவிதக் குற்றமும் என் மீது சுமத்தப்பட முடியாததால், என்னை விடுதலை செய்துள்ளனர்” என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரசேகரன் தனது கைதிற்கும், விடுதலைக்குமான காரணத்தைத் தெரிவித்தார்.



சந்திரசேகரனின் கைது மலையகத்தில் சிறீலங்கா ஆயுதப்படையினரும், பொலிசாரும், சிங்களக் காடையர்களும் மேற்கொண்ட வன்முறையை மூடிமறைத்து விடவும், திசை திருப்பிவிடவும் அரசாங்கம் மேற்கொண்டதொரு நடவடிக்கை என்பது சாதாரணமாக அரசியல் புரிந்தவர்களுக்குத் தெரிந்ததொரு விடயம்.

அதாவது பண்டாரவளை-பிந்துநுவேவ தடுப்பு முகாம் படுகொலைகளினால் பெரும் கண்டனத்திற்கு உள்ளாகியிருந்த சந்திரிகா அரசாங்கத்திற்கு மலையகத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூடும், சிங்களக் காடையர்கள் மேற்கொண்ட அராஜகமும் காரணமாக மீண்டும் பெரும் கண்டனங்கள் எழலாம் என்ற அச்சத்தை ஊட்டியது.

இந்நிலையில் தமிழர் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறையை மூடிமறைத்துவிடவும் அரசு மீதான குற்றச்சாட்டை திசை திருப்பி விடவுமே சந்திரசேகரனை அரசாங்கம் கைது செய்ததோடு, இந்நெருக்கடிக்குக் காரணம் என்ற ரீதியில் அவசரகாலச் சட்டவிதிகளின் அனைத்துச் சரத்துக்களின் கீழும் குற்றஞ்சாட்டியது. ஆனால், குற்றம் எதுவும் நிரூபிக்க முடியாத நிலையில் ஒருவாரம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பின்னர் சந்திரசேகரன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

திரு. சந்திரசேகரன் தனது கைதானது அரசியல் நோக்கம் உடையது. தமது அரசியல் தலைமைத்துவத்தையும், தமது அரசியல் கட்சியையும் அழித்தொழிக்கும் வகையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட பழிவாங்கும் நடவடிக்கை எனத் தெரிவித்துள்ளமை ஒரு வகையில் சரியானதுதான். ஆனால் சந்திரசேகரனின் கைது அதை மாத்திரம் உணர்த்துவதாக இல்லை.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம் ஜனநாயகத்திற்குக் கொடுக்கும் கௌரவத்தையும், அதன் மீதுள்ள, நம்பிக்கையையும்கூட வெளிக்காட்டுவதாகவே உள்ளது. எவ்வாறெனில் சந்திரசேகரன் சாதாரணதொரு நபரல்ல, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் வேறுவிதமாகக் கூறுவதானால் ஒரு மக்களின் பிரதிநிதி, அவ்வாறானவரைக் கைது செய்வதானால் ஜனநாயக மரபுகளின்படி சில வரன்முறைகளும், ஒழுங்குகளும் உண்டு.

குறிப்பாக சந்தேகத்தின் பெயரிலோ அன்றி ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலோ கைது செய்தல் ஜனநாயகப் பண்புகளுக்கு மாறான செயலாகும், அதற்கும் அப்பால் கைது செய்யப்பட வேண்டும் என முடிவு செய்யப்படும் பட்சத்தில் அதற்கு சபாநாயகரின் அனுமதி பெறப்படுதல் வேண்டும்.

ஆனால் சந்திரசேகரன் கைதில் அவ்வாறானதொரு வரன்முறையும் கைக்கொள்ளப்படவில்லை. ஏதோ ஒரு சுற்றிவளைப்புத் தேடுதலில் ஒருவர் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டார் என்பது போன்றே இரகசியப் பொலிசார் நடந்து கொண்டனர். அதேபோன்றே தடுத்து வைக்கவும்பட்டார். ஆகையினால் இக்கைதானது திரு. சந்திரசேகரன் கூறுவது போன்று அரசியல் நோக்கம் கொண்டது என்பது ஒருபுறம் இருக்க, இலங்கையிலுள்ள தமிழர்களின் அவலத்தை வெளிக்காட்டும் ஒன்றாகவே இது உள்ளது எனலாம்.

அதாவது ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அதிலும் குறிப்பாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினருக்கே இக்கதி எனின் சாதாரண பொதுமகனின் கதிதான் என்ன? ஒரு பாராளுமன்ற உறுப்பினரை உறுதியான குற்றச்சாட்டுக்கள் எதுவும் இன்றி கைது செய்யவும் தடுத்து வைக்கவும் முடியும் எனின் சாதாரண மக்கள் கைதாவதிலும் சிறைகளில் வாடுவதிலும் என்ன ஆச்சரியம் இருக்கப் போகிறது?

ஆனால், சந்திரசேகரனுக்கு பாராளுமன்ற உறுப்பினர் என்ற கௌரவமோ அன்றி பாதுகாப்போ கிடைக்க முடியாது போனமைக்கு அவர் ஒரு தமிழர் என்பதே காரணமாகும். ஏனெனில் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீது இவ்வாறானதொரு நடவடிக்கையை இலகுவில் ஆட்சியாளர்கள் எடுக்கவும் மாட்டார்கள். அவ்வாறு எடுப்பினும் இலகுவானதாக இருக்கவும்மாட்டாது.

இந்தவகையில் சந்திரசேகரன் கைது என்பது, அவர் மீதானதும், அவர் கட்சி மீதானதும் ஒடுக்குமுறை என்பதற்கும் அப்பால் தமிழர் மீதான ஒடுக்குமுறையையும்- தமிழர்களின் அவலத்தையும் வெளிக்காட்டும் ஒன்றாகவுமே கொள்ளத் தக்கதாகும். அதாவது தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு சிங்கள ஆட்சியாளர்கள் விடுக்கும் அச்சுறுத்தல் இதுவாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழரின் தலைவா நீ வாழி



## தலைவா வாழ்க

ஓயாத அலை ஓயவில்லை
ஒருபோதும் அது உறங்கவில்லை
சாகாத பலம் தமிழனுக்கு உண்டு
தரணியை மீட்கும் கடமையும் உண்டு
போரினை நடத்தும் தலைவா வாழ்க
வெற்றியின் மாலை உன் மேனியில் வாழ்க
ஈழத்தைச் சுமக்கும் மன்னனே வாழ்க
முத்தமிழ் காத்த தலைவனே வாழ்க
வெண்ணிலவு உனைச் சேர்ந்ததைய்யா
வெற்றியும் உனைச் சூழ்ந்ததைய்யா
ஈழ மண்ணும் உனை வாழ்த்துமைய்யா
எம்மவன் என்று உனைப் போற்றுமைய்யா
ஈழத்துத் தேவனே நீ வாழ்க
உனை ஈன்ற மண்ணும் சேர்ந்து வாழ்க.

–நீர்வைக்குமார்

## இனிவரும் நூற்றாண்டிலும் இனிது வாழ்கவே

வெற்றியலை தேசமெங்கும் ஆர்ப்பரித்து மூசுது
வேலுப்பிள்ளை பிரபாகரன் பேரினையே கூறுது
பெற்றெடுத்து எமக்களித்த வல்வை மண்ணுமே
பெருமையோடு பொங்கியெழுந்து சிரிக்குது
நற்றமிழில் சொல்லெடுத்து நம் தலைவரை
நானுமிங்கே பாடிடவே துடிதுடிக்கிறேன்
வற்றிடாது ஊற்றெடுக்கும் வார்த்தை தேடியே
வானளாவ சுற்றிவந்து தவிதவிக்கிறேன்.

நாட்டிலுள்ள கலைஞரெல்லாம் ஒன்றுகூடுங்கள்
நம் தலைவர் மீதவொரு பரணி பாடுங்கள்
எட்டிநடை போடுகின்ற வெற்றி நாளிலே
எம் தலைவர் நாற்பத்தாறாவது அகவை நிறையுமே
கொட்டிடவே கைகளிலே முரசு ஏந்துங்கள்
கொம்பெடுத்து நாள் முழுதும் ஊதி மகிழுங்கள்
தட்டினிலே மலரேந்தி வாழ்த்திப் பாடுங்கள்
தமிழீழம் காணவிங்கே எழுந்து வாருங்கள்.

அன்னைத் தமிழே! அழகுக் கவியே!
அருஞ்செயல் படைத்திடும் திருமலர்த்தேனே
திங்கள் ஒளியே! தண்மைச் சுனையே!
தங்கமண் தந்த தவத்தின் கொழுந்தே
பொங்கிடும் கடலே! புலரும் பொழுதே!
போரினை வென்றிடும் விடுதலை விறலே
எங்கள் தலைவனே! இன்னருள் தேவனே!
இனிவரும் நூற்றண்டிலும் இனிது வாழ்கவே

–ஆ.ந.பொற்கோ.

## தாலம் போல் என்றென்றும் தலை நிமிர்ந்து நீ வாழி!

காலம் எமக்களித்த கற்பகமாய் வந்துதித்த
ஞாலம் போற்றும் நம் தலைவா நீ வாழி
ஆலம் கழுத்தில் அணிந்தோர் படையமைத் தெம்
அல்லல்கள் தீர்க்க வந்த அண்ணலே நீ வாழி.

உள்ளத்தில் உறுதியும் உயர்வான தமிழ்ப் பற்றும்
எண்ணத்தில் தமிழர் உயர்வே நினைவாய்க் கொண்டு
அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற
நல்லவனே தமிழர் நாயகனே நீ வாழி.

தூய மனத்தவனே, துயர் போக்க வந்தவனே, யெம்
தாயகம் அமைக்க வந்த தலைவனே நீ வாழி
பாயும் புலிப்படையால் எம் பகைவர் தனை ஒழித்த
பைந்தமிழ் காவலனே பல்லாண்டு நீ வாழி.

நாதியற்று நின்ற நம்மவரின் நிலைகண்டு
சாதிமத பேதமின்றி எம் சதிகாரரை அழித்து
நீதியுள்ள அரசமைத்து நிம்மதியாய் நாம் வாழ
மேதினியில் உழைத்துவரும் மேலவனே நீ வாழி.

வரலாற்று நாயகனே வரலாற்றைப் படைத்தவனே
மறத்தமிழர் துயர் போக்க எம் மண்ணில் உதித்தவனே
தன்மானம் கொண்டு எம் மானம் காத்தவனே
தாலம் போலென்றும் தலைநிமிர்ந்து நீ வாழி.

– கீழ்க்கரவைச் சிவனேசன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர்நாள் 2000

## ஜேர்மனி - டென்மார்க் - சுவிஸ்

25.11.2000 அன்று ஜேர்மனியில் டோட்முன்ட் மாநகரில் நடந்த மாவீரர்நாள் நிகழ்வில் ஜேர்மனியின் எல்லாப்பகுதிகளிலிருந்தும் 8000ற்கும் அதிகமான தமிழீழ மக்கள் கலந்து கொண்டனர். மாவீரர்களுக்கான அகவணக்கம், மாவீரர் குடுபத்தை சார்ந்தோரை கௌரவிக்கும் நிகழ்வு மற்றும் எழுச்சிஇசைநிகழ்ச்சிகள், எழுச்சிநடனங்கள் என்று மிகவும் எழுச்சிகரமாவும், உணர்வுபூர்வமாகவும் இந் நிகழ்வு சிறப்பாக நடந்தேறியது.






25.11.2000 அன்று டென்மார்க் கேணிங் நகரில் நடந்த மாவீரர்நாள் நிகழ்வில் 1300ற்கும் அதிகமான டென்மார்க் வாழ் தமிழீழ மக்கள் கலந்து கொண்டனர். மாவீரர்களுக்கான அகவணக்கத்துடன் ஆரம்பமான இந் நிகழ்வானது எழுச்சிபாடல்கள், எழுச்சிநடனங்கள் மற்றும் கவிஞர் அறிவுமதியின் சிறப்புரை என்பனவற்றோடு மிகவும் எழுச்சிகரமாகவும் சிறப்பாகவும் நடந்தேறியது.






27.11.2000 அன்று சுவிஸ் தலைநகர் பேர்ணில் Bea Expo மண்டபத்தில் நடந்த மாவீரர்நாள் நிகழ்வில் 5000ற்கும் அதிகமான தமிழீழ மக்கள் கலந்து கொண்டனர். மாவீரர்களுக்கான அகவணக்கத்துடன் ஆரம்பமான இந் நிகழ்வானது எழுச்சிபாடல்கள், எழுச்சிநடனங்கள், கவிஞர் அறிவுமதியின் எழுச்சி உரை என்று மிகவும் எழுச்சிகரமாக சிறப்பாக நடந்தேறியதுடன் தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் நாள் உரை மண்டபத்தில் நேரடியாக ஒலிபரப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.





**ஏனைய நாடுகளில் நடைபெற்ற மாவீரர்நாள் நிகழ்வுகளின் விபரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முழுஅளவில் யுத்தமா? பேச்சுவார்த்தையா? உரத்துப் பேசமுடியாத நிலையில் சந்திரிகா

## (இரண்டும் கெட்டான் நிலையில் சந்திரிகாவின்




சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த நவம்பர் 9 அன்று பாராளுமன்றத்தில் ஆற்றிய பொதுஜன ஐக்கிய முன்னணியின் இரண்டாவது பதவிக்காலத்திற்கான கொள்கை விளக்கவுரை பலருக்கு ஏமாற்றம் அளித்திருக்கக்கூடும். ஏனெனில் அவர்களின் எதிர்பார்க்கைக்கு ஏற்ப சந்திரிகா குமாரதுங்க இக்கொள்கை விளக்கவுரையில் புதிதாக எதையும் கூறவில்லை.

குறிப்பாக இனப்பிரச்சனை குறித்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மாற்றங்களுடன்கூடிய புதிய அறிவிப்புக்கள் சில வற்றை வெளியிடலாம் என அரசியல் வட்டாரங்களில் ஒருவகை நம்பிக்கையும் எதிர்பார்க்கையும் இருந்தது. இந்த நம்பிக்கையும், எதிர்பார்க்கையும்கூட அர்த்தமற்ற ரீதியில் உருவாக்கிக் கொண்டவை அல்ல.

தேர்தல் பிரச்சாரத்தின்போது இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வே ஒரே வழி என ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி பிரச்சாரம் செய்தது. அத்தோடு வெளியார் மத்தியஸ்தம் அதிலும் குறிப்பாக நோர்வேயின் சமரச முயற்சி என்பதையும் அது முற்றாக நிராகரித்திருந்தது.

ஆனால், ஆட்சி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றியவுடன், நோர்வேயின் சமரச முயற்சிக்கு அரசாங்கம் பச்சைக் கொடி காட்டியது. சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நோர்வே சென்றதோடு சமரசமுயற்சியில் பங்காற்ற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். அதே சமயம், தேர்தல் காலத்தில் சர்வதேச மத்தியஸ்தம் குறித்து ஆளும் கட்சியினர் விமர்சித்திருந்தமை, பொருட்படுத்தத் தக்கவை அல்ல என்ற ரீதியில் பத்திரிகைகளுக்குப் பேட்டியும் அளித்திருந்தார்.

இதன் விளைவாக தேர்தலுடன் சற்று ஒதுங்கியிருந்த நோர்வே அரசின் விசேட பிரதிநிதியான எரிக்சுல்கையும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசத்திற்கு விஜயம் செய்யவும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்துப் பேசவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

வேறுவிதமாகப் பார்த்தால் நோர்வேயின் தூதுக்குழு ஒன்று வன்னி வருவதற்கும் தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கும் சிறீலங்கா அரசாங்கம் பச்சைக் கொடி காட்டியது எனலாம். சிறீலங்கா ஆட்சியாளர்கள் நோர்வேக் குழுவின் வன்னி விஜயம் தம்மால் ஒழுங்கமைக்கப்படவில்லை எனக் கூறுவது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும்கூட நோர்வேக் குழு வன்னிவர அது அனுமதி அளித்திருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

இதனைத் தொடர்ந்து வன்னி வந்து திரும்பிய நோர்வேக்குழு விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்து விளக்கமளித்தது. இச்சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரும் உடனிருந்தார்.

இதேசமயம், வன்னி வந்து திரும்பிய நோர்வேக் குழு, இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்குப் புலிகள் நிபந்தனை எதையும் விதிக்கவில்லை என்றும் சமாதானத்தீர்வு ஒன்றில் தலைவர் பிரபாகரன் நாட்டம் கொண்டுள்ளார் எனவும் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வேக் குழுவுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் குறித்துப் பிதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவுடன் தீவிர கலந்தாலோசனையிலும் இறங்கினார். இதனைத் தொடர்ந்து பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தியும் இருந்தார்.

இதன் காரணமாகத்தான் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கொள்கை விளக்கவுரை பலரதும் எதிர்பார்க்கைக்குரியதாக இருந்தது. அதாவது யுத்தமே இனப்பிரச்சனைக்கு முடிந்த முடிவு என்ற நிலைப்பாட்டை வெளியிட்டுத் தேர்தலில் வென்றபின்னர் அரசு நடந்து கொண்ட முறை பேச்சுவார்த்தைகளுக்கான சாதகமான போக்கைக் கொண்டதாக நோக்கர்களால் கணிக்கப்பட்டது.

இவ்வாறாகச் சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம் நோர்வேயின் சமரசமுயற்சிகளுக்கு மறைமுகமாகவேனும், அங்கீகாரமும் ஆதரவும் அளித்தமைக்கு சில காரணிகளும் அரசியல் அவதானிகளால் கூறப்பட்டன. ஒருபுறம் அதிகரித்துச் செல்லும், யுத்தச் செலவீனமானது சுமக்கமுடியாத கட்டத்தை அடைந்திருந்தது. சர்வதேசச் சந்தையில் பெற்றோலின் விலைஏற்றத்தின்பின் மொத்த இராணுவச் செலவீடானது 10,000 கோடி வரையில் உயர்ந்துள்ளது. இது பொருளாதாரத்தைப் பெரும் பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளதோடு இதனால் ஏற்பட்ட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மக்கள் பெரும் அல்லல்களிற்க்கும் உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தோடு இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டும் என்பதைப் பல சர்வதேசநாடுகள் குறிப்பாக மேற்குலகம் விரும்புகின்றது. இதனை நோர்வேக் குழு மேற்கொண்ட முயற்சிகளுக்கு - அதாவது தேசியத் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க எடுத்த முயற்சிகளையும் பேச்சு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## காள்கைப் பிரகடனம்)

வார்த்தைகளையும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உட்பட பல நாடுகளும், பல அமைப்புக்களும் வரவேற்றிருந்தன.

அத்தோடு சந்திரிகா அரசாங்கம் இச்சந் தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என உள்நாட்டிலும், வெளிநாட்டி லும் பல குரல்கள் ஒலித்தன. இந்தவகையில் சந்திரிகா அரசிற்கு ஒருவகையில் அது அழுத் தமாகவே உருவாகியிருந்ததெனலாம்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகாவின் கொள் கைவிளக்கப்பேச்சானது பழைய குருடி கத வைத் திறவடி என்பதுபோன்றதாகவே இருந் தது. அதாவது, இனப்பிரச்னைத் தீர்விற்கான பேச்சுவார்த்தைகளுக்கான எந்தவித வெளிப் பாடுகளும் அதில் தெரியவில்லை.

அதாவது சந்திரிகா குமாரதுங்க அரசாங் கம் தனது நிலைப்பாட்டில் மாற்றம் எதையும் அறிவிக்கவில்லை. கடந்த காலத்தைப் போன்றே புலிகள் பேச்சுவார்த்தைக்கு நிபந் தனைகள் விதிப்பதாகவும் யுத்தம் நிறுத்தப் படப்போவதில்லை எனவும் பொருளாதாரத் தடைகளைத் தளர்த்தப் போவதில்லை என வும் புலிகள் பலமடைய அனுமதிக்கப்போவ தில்லை எனவும் கொள்கைப் பிரகடனத்தில் அறிவிப்புச் செய்யப்பட்டது. அதே சமயம் விடுதலைப் புலிகளுடன் அரசு பேசுவதற்குக் கதவுகளைத் திறந்தே வைத்துள்ளது என வும், தமது அரசியல் யாப்புத் திருத்தத்திற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் எனவும் சம்பிர தாயபூர்வமான அறிவிப்பும் விடுக்கப்பட்டது.

இந்த வகையில், திருப்புமுனைகளோ அன்றி மாற்றங்களோ இன்றி ஜனாதிபதி சந்திரிகா தனது உரையை முடித்துக் கொண் டமையே பலரின் எதிர்பார்க்கைக்கு மாறான தாக அமைந்துவிட்டது. அத்தோடு யுத்தம் என்பது தற்போதைக்கு நிறுத்தப்படப்போவ தில்லை என்பதையும் வெளிப்படையாக அறிவிப்பதாக அது இருந்தது.

ஆனால் சந்திரிகா குமாரதுங்காவின் இப் பேச்சானது கடந்தகால அவரது பேச்சுக்கள் போன்று கடுமையானதும் தீவிரமானதாக வும் இல்லாது, சிறிதளவு சுருதி குறைந் ததாகவே இருந்தது. அதாவது தேர்தலுக்கு முன் யுத்தம் குறித்துப் பேசிய வீரத்துடன் தற்பொழுது பேச முடியவில்லை என்றே கூறலாம். இதற்கு உள்ளும், புறமுமாக மேற் சொன்ன காரணிகள் காரணமாக இருக்கலாம்.

ஏனெனில் தேர்தலின்போது முகம் கொடுக் காத பிரச்சனைகள் பலவற்றிற்கு அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. பொது வில் பொருளாதார நெருக்கடிகள் இராணுவ வெற்றிகளில் நம்பிக்கையீனம் என்பன இருக்கையில் வெளிநாடுகள் குறிப்பாக உதவி வழங்கும் நாடுகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் அரசியல் ரீதியான தீர்விற்கும் வற்புறுத்துபவையாக இருந்தன. இவ் அழுத்தங்கள் சந்திரிகா குமாரதுங்கா விற்கு ஒரு வகையில் நெருக்கடி மிக்கதா கவும், அதேசமயம் அரசு எதிர்கொள்ளும் நெருக்கடியில் இருந்து விடுபட அவசிய தேவையானதாகவும் இருந்தது.

ஆனால் சந்திரிகா குமாரதுங்கா விரும் பியிருந்தாலும்கூட, அதற்கேற்றதானதொரு நிலைப்பாட்டை அதாவது, கொள்கைப்பிரக டன உரையில் புதிய அறிவிப்புக்களைச் செய்வதற்கான அரசியல் சூழ்நிலை இருப் பதாக இல்லை. அவ்வாறு மேற்கொள்ளப் படும் ஒரு முயற்சி அரசாங்கத்திற்கே ஆபத் தானதாகக்கூட அமைந்துவிடலாம்.

எடுத்துக்காட்டாக நோர்வேக் குழு வன்னி வந்து திரும்பியதைத் தொடர்ந்து சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்துப் பேசியது. இது குறித்து விசேட அமைச்சரவைக் கூட்டம் ஒன்றை நடத்த சந்திரிகா குமாரதுங்கா விரும்பினார். இக் கூட்டம் கொள்கை விளக் கவுரை இடம்பெறும் நாளுக்கு முதல் நாள் கூட்டப்படவும் ஏற்பாடாகவும் இருந்தது. ஆனால், இறுதி நேரத்தில் இது ரத்துச் செய்யப்பட்டது.

இவ்வாறு ரத்தாகியமைக்கு நோர்வே யின் சமாதான முயற்சியில் ஆளும்கட்சிக் குள் கருத்தொற்றுமை ஏற்படாமல் போன மையே காரணம் என அரசியல் வட்டாரங் களில் பேசப்பட்டது. பிரதமமந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்காகூட முரண்பாடான கருத்தே கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது ஒருபுறம் இருக்க நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஜே.வி.பி தனது எதிர்ப்பை ஏற்கனவே வெளியிட்டிருந்ததோடு அதற்கு எதிராகப் போராட்டங்களை நடத்தப் போவதாகவும் அறிவிப்புச் செய்திருந்தது.

அத்தோடு சந்திரிகா குமாரதுங்கா பெரிய தொரு அமைச்சரவையை அமைத்தமை யானது சிறுபான்மை இனக்கட்சிகளின் கோரிக் கைகளையும், நிபந்தனைகளையும் நிவர்த்தி செய்யும் நோக்கத்துடனேயே என ஜே.வி.பி, சிகல உறுமய போன்றவை குற்றம்சாட்டின. மேலும் அமைச்சரவையைச் சிறுப்பிக்குமாறு போராட்டம் நடத்தப்போவதாகவும் எச்சரித்த வண்ணமும் இருந்தன.

இதேவேளை பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே கட்சியோ அரசாங்கம் மீது நம்பிக் கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவது குறித்து தீவிரமாக ஆராய்ந்து கொண் டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருந்தன. இந்த நிலையில் சந்திரிகா குமாரதுங்காவினால் தேர்தலுக்கு முன்னர் அறிவிப்புச் செய்த கொள்கையில் இருந்து விரும்பியோ, விரும்பாமலோ மாற்றம் எதை யும் கொண்டுவர முடியாததொரு நிலையே இருந்தது எனலாம். இவற்றை மீறி ஒரு விஷப்பரீட்சையைச் சந்திரிகா குமாரதுங்கா செய்யத் துணிவார் எனவும் எதிர்பார்க்க முடி யாது. ஏனெனில் கடந்த பாராளுமன்றத்தில் ஏற்பட்ட சில அனுபவங்கள் இதற்கு எச்ச ரிக்கை போன்று அமைந்திருந்தது.

அதாவது அரசியல் யாப்புத்திருத்தத்தைக் கடந்த பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த ஆளும் தரப்பு- எதிர்தரப்பில் இருந்து சிலரை உடைத் தெடுக்க முயன்று கொண்டிருக்கையில், சிலர் இங்கிருந்து- ஆளும்கட்சியிலிருந்து- எதிர்க்கட்சிக்கு ஓடிவிட முடிவெடுத்தனர். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அவ்வாறு நடந்தும் கொண்டார்.

இவ்வாறானதொரு நிலை தற்போதைய கொள்கை விளக்கவுரை தொடர்பாகவும் நிகழ்ந்துவிடக்கூடாது என்பதை சந்திரிகா வும் நன்கே விளங்கியிருந்தார். அதிலும் முன்னைய பாராளுமன்றத்தைவிட மிகவும் பலவீனமான நிலையில்- அதாவது ஓரிரு பாராளுமன்ற ஆசனங்களே அதிகப்படியான நிலையில் ஆட்சி அமைத்திருக்கையில் திடீர் மாற்றங்கள், அறிவிப்புக்கள், ஆட்சி அதி காரத்தைத் தக்க வைப்பதையே கேள்விக் குரியதாக்கிவிடும் என்பது புரியும்.

இந்த வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விரும்பினால் என்ன? விரும் பாதுவிட்டால் என்ன? சிறீலங்காவின் அரசிய லில் பெரும் மாற்றங்கள் எதனையும் அவ ரால் அறிவிப்புச் செய்யவோ அன்றி வெளியி டவோ முடியாது. அந்தளவிற்கு அவரது அர சாங்கம் பலவீனமானதொன்றாகவே உள் ளது. ஆகையினால் அழிவிற்கான வழியில் சிறீலங்காவை வழிநடத்திச் செல்வதைத் தவிர அவரால் வேறு எதனையும் செய்ய முடியாது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





போராட்டத்திற்கு உறுதுணையாக சாரதிப்பயிற்சி பெறத்தீர் மானித்து அதில் வெற்றியும் பெற்றுவிடுகிறான்.

1978ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஒரு நாள் இரவு மீண்டும் தம்முன் வந்து நின்ற சத்தியநாதனை ஏறிட்டனர் ஏனைய போராளிகள். அவர்கள் முகங்களில் புன்னகை. அதில் சத்திய நாதனின் உறுதி புலப்படுகிறது. சத்தியநாதனுக்கு தலைமறைவு வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் புனைபெயர் சூட்டப்படுகிறது. சத்தியநாதன்... சங்கராக விடுதலைப் புலியாக மாறினான்.

சங்கரின் உள்ளத்தைப்போலவே உடலும் உறுதிபெற்றது. ஓயாது உழைத்தான். எதிலும் ஆர்வம் எப்போதும் சுறுசுறுப்பு. தோழர்கள் ஒன்றுகூடிக் கருத்தரங்குகள் வைப்பதும், திட்டங்கள் தீட்டுவதும், விவாதிப்பதுமாக... சங்கரின் அரசியல் அறிவு விரிந்தது. வளர்ச்சி பெற்றது.

இயக்கத்தில் ஆரம்பகாலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருக்கு மட்டுமே ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டது. ஓய்வு நேரங்களில் ரிவோல்வரில் குறிபார்ப்பதிலும் ஆங்கில சினிமாப்படங்கள் மூலம் தன் ஆயுத அறிவை வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டினான் சங்கர். 1979இல் சிறிய ஆயுதங்களில் குறிபார்த்துச் சுடும் பயிற்சி சங்கருக்கு வழங்கப்பட்டது.

சங்கருக்கு குறிபார்த்துச் சுடும் பயிற்சியிலிருந்த திறமையால் தலைவரிடமிருந்து வெகுமதியாக 0-45 ரிவோல்வர் ஒன்று கிடைத்தது. அது சங்கருக்கு கிடைத்த பின் அதை வைத்து மேலும் தனது திறமையை வளர்த்துக் கொண்டான். இரு கரங்களாலும் குறி பார்த்துச் சுடுவதில் தன்னிகரற்றவனாயினான். சிறந்த ஆயுதப் பராமரிப்பு. தினசரி துப்பரவாக்கப்பட்டு பளபளத்தது ரிவோல்வர்.

# லெப். சங்கர் ஈகத்தின் முதல் வித்து

லெப். சங்கர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் வித்தாக வீழ்ந்த மாவீரன். இன்று தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகளாவிய ரீதியில் கூர்ந்து கவனிக்கப் படுவதற்கு முதலாவது அத்திவாரக்கல்லாய் அமைந்த உறுதி மிக்க போராளி லெப். சங்கர்.

சத்தியநாதன் என்னும் இயற்பெயரைக் கொண்ட லெப். சங்கர் 1961இல் பிறந்தவர். 1977ஆம் ஆண்டு.., வீட்டில் கடிதம் ஒன்றை எழுதிவைத்துவிட்டு அவர் பண்ணை ஒன்றில் இயங்கிய விடுதலைப் புலிகளின் பாசறையை அடைந்தார். விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் பண்டிதருடன் வந்த அவரை கூர்ந்து நோக்கினார். இளைஞன்... தோற்றத்தில் சின்னவன். தலைமறைவுப் போராட்டம் என்பது மிகவும் கடினமானது. குறி வைத்த எதிரியை வீழ்த்துவதற்காக எதிரியின் கண்களில் மண்ணைத் தூவி பல நாட்கள் அலைந்து திரியவேண்டும். நிரந்தரமாக ஓரிடத்தில் தங்கமுடியாது. நேரத்திற்கு உணவு கிடைக்காது. அல்லது பலநாட்கள் உணவின்றியே இருக்கவேண்டும். இவற்றையெல்லாம் தாங்கும் மனோபலம் சிறுவனுக்கு இருக்குமா...?

தலைவர் பிரபாகரன் கூற்றுப்படி படிப்பைத் தொடர்வதற்காக வீடு திரும்புகிறான் சத்தியநாதன்.

“ஏதோ அறியாதவன். சில நாட்கள் சுற்றிவிட்டு வீடு வந்து விட்டான். இனி ஒழுங்காகப் படிப்பைத் தொடர்வான்” என இவரது பெற்றோர் எண்ணினர்.

ஆனால், சத்தியநாதனின் உள்ளத்து உறுதி கலைய வில்லை. தானும் ஒரு போராளியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக்கொள்கிறான். இடைப்பட்ட காலத்தில்

1979 வைகாசியிலே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதாக அறிவித்திருந்த அரசு, விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்குடன் தேடுதல் வேட்டைகளை விஸ்தரித்தது. சங்கரின் பெயரும் எதிரிக்குத் தெரிந்துவிட்டது. அவனும் தேடப் பட்டான்.

1981ஆம் ஆண்டு நவீன ரக ஆயுதங்களை இயக்கும் பயிற்சி சங்கருக்கு வழங்கப்பட்டது. சங்கர் தாக்குதல் படைப்பிரிவில் ஒருவனானான்.

1982 ஆடி 2ஆம் நாள் முதல்முதலாக எதிரியுடன் ஆயுதம் தாங்கிய மோதலில் சங்கர் ஈடுபடப்போகும் நாள், திட்டமிட்டபடி போராளிகள் எழுவர் நெல்லியடியில் ரோந்து வந்த பொலிஸ் ஜீப் மீது தாக்குதல் தொடுத்தனர். சங்கரிடம் ஒரு ரிவோல்வர் வேறொரு போராளியிடம் ஒரு இயந்திரத்துப்பாக்கி இதைத்தவிர வேறு ஆயுதங்கள் இல்லை புலிகளிடம்.

முதலில்... எதிரி வாகனச் சாரதி சுட்டு வீழ்த்தப்பட்டான். சங்கரின் நீண்டகாலக் கனவு நனவாகத் தொடங்கியது. வெற்றிகரமான தாக்குதலில் எதிரிகளில் நால்வர் கொல்லப்பட்டனர். அவர்களின் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகள் எந்தவித இழப்புகளுமின்றி வெற்றியுடன் மீண்டனர்.

1982இல் தலைவர் பிரபாகரனின் பாதுகாப்பிற்காக முதன் முதலாக இரு மெய்ப்பாதுகாவலர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். அவர்களில் ஒருவனாக சங்கரும் தெரிவுசெய்யப்பட்டிருந்தான். இக் காலகட்டத்தில் நவீனரக ஆயுதவரிசையில் இரண்டு ஜீ-3க்கள் மட்டுமே இயக்கத்திடமிருந்தன. இவற்றில் ஒன்று சங்கருக்கு வழங்கப்படுகின்றது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராணுவத் தாக்குதல்களில் மட்டுமல்ல மக்களை அரசியல் மயப்படுத்தும் நடவடிக்கைகளிலும் சங்கர் ஈடுபட்டான். புலிகளை வலை வீசித்தேடும் நடவடிக்கைகளுக்கு ஊடாகவே இவற்றை யெல்லாம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

கூலிப்படைகளின் தேடுதல் வேட்டை மும்முரமாகின்றது. புலிகள் இயக்க ஆதரவாளராக இருந்த விரிவுரையாளர் ஒருவரின் வீட்டில் சங்கர்... இதை மோப்பம் பிடித்துவிடுகின்றது கூலிப் படை... வீடு முற்றுகையிடப்படுகிறது... முற்றுகை முற்றுமுழு தான முற்றுகை. சங்கரின் கை இடுப்பிலிருந்த ரிவோல்வரின் பிடியை இறுகப் பிடிக்கின்றது. தப்பியோடத் தீர்மானிக்கின்றான் சங்கர். கூவிப் பாய்ந்த ரவைகளில் ஒன்று சங்கரின் வயிற்றைப் பதம் பார்த்துவிடுகிறது. தரையை நனைக்கின்றது குருதி. உடல் சோர்ந்தாலும் உள்ளம் சோரவில்லை. எதிரியின் கையில் தனது ரிவோல்வர் கிடைத்துவிடக்கூடாது. எப்படியும் தன் தோழர் கையில் அதனை ஒப்படைத்துவிட வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தை உறுதியாக்க கிட்டத்தட்ட இரண்டு மைல் ஓடி யிருப்பான். தெரிந்த ஒருவரின் உதவியுடன் நண்பர்கள் இரக சியமாகக் கூடும் இடத்தை அடைந்தான். ரிவோல்வரை தோழர் களிடம் கையளித்துவிட்டு உணர்விழந்தான் சங்கர். தோழர்கள் அவனைத் தாங்கிக் கொள்கிறார்கள்.

முற்றுகையில் அகப்பட்ட புலி கைநழுவிவிட்டது என்ற ஆத்திரம் அரச படையினருக்கு. ஆதரவாளர் கைது செய்யப் பட்டார். தேடுதல் முடுக்கிவிடப்பட்டது. தெருவெங்கும் இராணு வம். காயமுற்றவனை வெளியில் கொண்டு செல்லமுடியாத நிலை. இரத்த வாந்தி எடுத்த சங்கர் துவண்டு போனான். ஐந்து நாட்கள் கடந்தன. சங்கரை பாரதம் கொண்டு செல்வதற்காக மோட்டார் படகு தயார் செய்யப்பட்டது.

பலத்த சிரமத்தின் மத்தியில் சங்கர் ஒருவாறு கரைசேர்க்கப் பட்டான். அங்கும் போதிய வைத்தியம் செய்ய முடியாதநிலை. உடல்நிலை நாளுக்கு நாள் நலிவடைந்தது.

27.11.1982 அன்று... விடுதலைப் புலிகளால் மறக்கவே முடியாத நாள். தமிழீழ மக்கள் மனதில் உத்வேகத்தை ஊட்டிய நாள். ஆயிரமாயிரம் போராளிகளை தன்னகத்தே கொண்டு விடுதலைப் போர் வீறுநடைபோட வித்திட்ட நாள் அன்றுதான்...

தலைவர் தம்பி பிரபாகரனின் மடியில் அவர் கைகளை இறுகப்பற்றி "தம்பி" என்றவாறே சங்கர் உயிர் துறந்தான்.

தலைவரின் விழிகளை நிறைத்த கண்ணீர் விழுந்து தெறித்து அவ் வீரனுக்கு அஞ்சலி செலுத்தியது.

தாயக மீட்புக்கான உரிமைப் போரில் வீரச்சாவடைந்த முதற் புலி லெப்டினன்ட் சங்கரின் உடல் தமிழீழத்திற்கு வெளியே பார தத்தில் தகனம் செய்யப்பட்டது. இவனது வீரச்சாவுகூட மக்களுக் கும் புலிகளுக்கும் இடையே இருந்த இணைப்பு இறுகிய பின்னரே வெளியே தெரியப்படுத்தப்பட்டது.

இம் மாவீரனின் வழித்தடத்தில் நடந்த ஆயிரக்கணக்கான பேராளிகளில் 16000ற்கு மேற்பட்ட போராளிகள் விடுதலைப் போருக்கு தம்மை வித்தாக்கியுள்ளனர். இம் மாவீரர்களை யெல்லாம் நினைவுகூரும் நாளாக லெப். சங்கர் வீரச்சாவடைந்த தினம் மாவீரர் நாளாக தமிழீழ மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருவதுடன் அவர்களின் இலட்சியப் பயணம் பல வெற்றிகளைப் பெற்று உறுதியுடன் தொடர்கின்றது.

## வாசலெங்கும் தீப ஒளி

*வானம், முகில், நிலவும் வந்துலவும் வாடையதும்*
*வாசலிலே... நின்று பணியும்*
*வாரியெடுத் துங்களது மேனியிலே பூவிதழால்*
*வருடிவிட்டுத் தலைகள் குனியும்.*
*கானம் இசைத்துவரும் கருங்குயில்கள் உங்களது*
*கல்லறையில் மெல்ல உருகும்.*
*காலைமலர் யாவுமுமக் காகவெனப் பூத்தபடி*
*காத்திருந்து கண்கள் சொரியும்.*



*மானம், மறம் தமிழர் மரபின் மகுடமெலாம்*
*மண்டியிட வந்து குவியும்.*
*மாலைமணி ஆறுவெனக் கோயில்மணி*
*ஓசையுடன்*
*மாவிளக்குத் தீபம் ஒளிரும்.*
*பாணரென நாமிருந்து பாட்டிசைக்க உம்முகங்கள்*
*பால்பருகி மெல்ல விரியும்.*
*பார்த்திருக்கும் எங்களது மேனியெலாம்*
*வேர்த்தொழுகப்*
*பாதைதெளி வாகத் தெரியும்.*
*தாயாளின் மடிவிட்டுத் தவழ்ந்திட்ட மண்மீது*
*தணியாத அன்பு என்றவர்.*
*தாலாட்டில் மயங்காது தமிழீழப் போர்ப்பாட்டின்*
*தமிழ் மீது வெறிகொண்டவர்.*
*பாய்கின்ற நதியாகிப் பகைதன்னைப் பலியாக்கிப்*
*பணியாதோர் எனச் சொன்னவர்.*
*பகையேறும் வழியெங்கும் புலியாகி எதிர்கொண்டு*
*பல வீரக்களம் நின்றவர்.*
*சாயாதெம் தமிழ்வீரம் தளராதெம் நடையென்று*
*சமராடி உயிர் விட்டவர்.*
*சந்திரனும், சூரியனும் தாள்பணியத் தக்கதொரு*
*சரித்திரமாய் வான் தொட்டவர்.*
*தேயாதோர் உறங்குகின்ற திருவிடத்தில்*
*பூச்சொரிந்து*
*தீபஒளி ஏற்று தினமே.*
*தேடியவர் கல்லறைக்குப் போயிருந்து*
*கண்சொரியத்*
*தேவநிலை ஆகும் மனமே.*

- புதுவை இரத்தினதுரை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கேள்விகள் உருவாகின்றன

எண்பதுகளில் தமிழர் போராட்டத்தின் முக்கிய காலப்பகுதி. விடுதலை இயக்க வெளித்தெரிகை, மக்கள்-இயக்க அறிமுகங்கள், உறவுகள், போராட்டம் போர்க்கட்டத்திற்குள் நகர்ந்தது என்று இது விரிகின்றது. இந்தக் காலப் பகுதியில் இராணுவ நடமாட்டம் முடக்கப்பட, படையினர் முகாங்களில் இருந்தவாறே செல்லடியிலும், விமானத் தாக்குதலிலும் ஈடுபட்டனர். இதனால் மக்கள் படுகொலைக்குள்ளாயினர். இந்தப் புலத்தை விபரிக்கின்றது.

நந்தியின் 'கேள்விகள் உருவாகின்றன.'

மினிவான் யாழ்ப்பாண ஆரியகுளச் சந்திக்கு வந்தபோது, ஒரு பையன் ஓடி வந்து தொத்தி அதில் ஏறி, சிவப்பிரகாசம் மாஸ்ரருக்குப் பக்கத்தில் அமர்ந்தான். அவன் இராப்பயணம் செய்தவன் போல, கண்கள் சிவந்து பொருமினதாகவும் முகம் உரோமமும் எண்ணெயுமாகவும் தோன்றினான். ஏதோ நோக்கம் நிறைந்த அவன் பார்வையும், அப்பி வைத்தது போன்ற கொழுத்த மூக்கும், காத்திரமான மீசையும் அவன் இளமைக்கு தீவிரம் தீட்ட, மாஸ்ரர் அவனைச் செவ்வையாகவும் சாடையாகவும் பார்த்துப் பார்த்து விகற்பமான பலவித யோசனைகளால் மனம் சோரலானார். அவன் தனது முழங்கால்களில் சிவப்புக் கோடுகளிட்ட ஒரு வெள்ளைக் கன்வஸ் பையை இருத்திக் கெட்டியாகப் பிடித்திருந்தான்.

அதற்குள் என்ன வைத்திருக்கிறானோ மாபாவி? நேரம் பிசகிய வேளையில் அந்த சிறு பைக்கருவி பஸ்ஸை போர்த் தேங்காயெனச் சிதறடித்து என்னையும் மற்றப் பிரயாணிகளையும் பிண்டம் துண்டுகளாக அகலமாக படைத்தவன் மடியில்.

வீரமாகாளி அம்மன் கோவில் வாசல் முன் இந்த வான் தரித்தது. கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த விதமான கதைதான். சிவப்பிரகாசம் மாஸ்ரர் வணக்கத்துடன் சால்வையை விலக்கி, பவித்திரமாக இதய பீடத்தைத் தொட்டு, உணர்விழந்த குரலில் 'அம்மா' என்று பிச்சை கேட்டார், மற்ற வேளைகளில் இத்தகைய கருமம் சாதாரண சம்பிரதாயம்தான். அன்றோ அது அர்த்தமுள்ள அவசியமானது. அதுவும் வேண்டியது உயிர்ப்பிச்சை! அவருக்கு வேறு எந்த விதமான பிச்சையும் எதற்கு?

இடைக்காடு கிராமப் பாடசாலை ஒன்றில் பல வருடங்களாக ஆசிரியர் என இருந்தவர் அவர். மூன்று வருடங்களுக்கு முன் பென்சன் பெற்றார். பாடசாலை ஆட்சிக் காலத்தில் பையன்களை 'அடக்கி ஆண்டதாக' சொல்லுவார். வகுப்பறையில் கண்ணயர்ந்தவன், கொட்டாவி விட்டவன், முணுமுணுத்தவன், அனுங்கியவன், சொறிந்தவன், சோகித்தவன், அங்கே சிறிதேனும் தாமதமாக வந்தவன் இன்னும் அவர் மனதில் படும் ஒழுக்க விருப்பு வெறுப்புகளுக்கு ஒவ்வாத எந்த அசைவு இசைவுகளையோ செய்தவன், அவரது ஏச்சுக்கும், அடிக்கும், வெளியேற்றலுக்கும் ஆளானவன். குட்டுக்கும், நுள்ளுதலுக்கும், உதைக்கும்கூட குறைவில்லை. மாணவரின் செய்கைக்குக் காரணம் கேட்க ஏன், யோசிக்கக்கூட மாஸ்ரர் எந்தக்காலத்திலும் எத்தனித்ததில்லை. ஏன், எதற்கு எதனால், எப்போது- என்ற வினாக்களுக்கு அவர் அகத்திலும் அகராதியிலும் இடமே கிடையாது. பையன்களும் அடங்கிப் போனதுண்டு. அதுவே அவருக்கு நிம்மதியையும் மனத்திருப்தியையும் தந்தது. அப்படியானவருக்கு இப்போது 'பொடியன்கள்' என்றால் அந்த வார்த்தையே அலர்ஜி. கேட்டதும் அவர் உடல் உதறும்.

'கெட்டுப் போனான்கள்'

அத்தனைக்கும் அவருக்கு மூன்று பையன்கள். ஆசைக்கு ஒரு மகள் இல்லை. ஒரு பெட்டை மட்டும் இருந்திருந்தால்-லண்டனில் ஒரு வீடு, 30,000 பவுண் சீதனம், 5000 டினார். டொனேசன் 10,000 டொச்மார்க் நகை என்று தமையன் தம்பிமாரைச் சாட்டிச் சீதனம் பேசித் தனது சர்வதேசப் பெறுமதிக்கு ஒருசார் விளம்பரம் விடுத்திருக்க மாட்டாரா?

மூத்தவன் 74ஆம் ஆண்டு பெண் கொடுத்த ஓவசியர் மாமனைத் திருப்தி செய்வதற்காக, இங்கிலாந்துக்கு அறுவை மருத்துவம் பயிலச் சென்று மூன்றாம் தடவையும் ஆரம்ப எவ். ஆர். சீ. எஸ். பரீட்சை ஒத்துவராது போகவே, ஜீரியாற்றிக்ஸ் என்ற கிழடுகள் மருத்துவமே மகேஸ்வரன் காட்டிய சேவை என்று எப்போது கையை வைத்தானோ, அவனுக்கு அடித்தது யோகம்- இலங்கையின் செலாவணி மொழியில் கோடீஸ்வரன். நடுவிலான் பரந்தன் இரசாயனச் சாலையில் தொழில்நுட்ப உதவியாளனாக இருந்தவன். 1977 இனக்கலவரத்தை வைத்து நாட்டின் எதிர்காலத்தை எடை போட்டதன் விளைவாக ஓமான் போய், அங்கே ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் 'ரூம்போய்' நமது நாட்டின் அதிஉயர் அரசாங்க அதிகாரிகளின் ஒரு மாத ஊதியத்தை மூன்றே மூன்று நாட்களில் உழைக்கின்றான். கடைசிப் பையன் வேலையற்றவன், 'விடுகாலி', 'கழிசறை' என்று ஊரில் பெயர் பெற்றவன். 1983 கலவரத்தின் வாய்ப்பாக ஜேர்மனிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அகதிப்பணம் பெறுகின்றான். அவனுக்குச் சம்பளம் 30,000 ரூபா என்று தாய் பெருமைப்படுவா. ஆகவே இந்த மூவரையும் தவிர, உலகத்தில் மற்றப்பையன்கள் கெட்டுப் போனாங்கள் என்று வசைகூற, அவர் மனைவி ஆமோதிப்பாள்.

நாட்டின் எதிர்காலம் சூனியத்தை நோக்குவதற்கு மட்டுமல்ல, தனது சொந்த வாழ்வின் இன்னல்களுக்கெல்லாம் இவன்கள் தான் காரணம் என்பது மாஸ்ரரின் தீர்ப்பு. எவ்வளவு வசதிக்குறைவுகள், மாத இறுதியில் பென்சன் பணம் வாங்க கியூவில் நிற்க வேண்டும். தபாற்கந்தோரிலே வான்கடிதம் கிடைப்பதில்லை, கொழும்புக் குளிர்பானம் வருவதில்லை- மாஸ்ரரின் முறையீடு நீண்ட பட்டியல்.

மினிவான் யாழ்ப்பாணத்தின் சன சஞ்சடியான பகுதி

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களைக் கடந்து இருபாலை வருவதற்கிடையில், தெரு ஓரம் இருந்த கோவில்கள் எல்லாவற்றையும் மாஸ்ரர், தான் வகுத்த கிரமத்தில், 'அப்பு' 'அம்மா' எனத்தொழுது கொண்டு போனார். அவன் எந்தக்கோவிலையும் கவனிக்கவில்லை. வானின் முன் கண்ணாடி ஊடாக நேரே வெறித்துப் பார்த்தவாறு புலப்படாத எதையோ குடைந்து கொண்டிருந்தான்

'இது நல்லதற்கல்ல' மாஸ்ரர் கிரகித்தார். 'கோவிலைப் புறக்கணிப்பவன்- தெய்வத்தில் நம்பிக்கை இல்லாதவன்- உலக நடத்தைக்கு அடங்காதவன்- அவன் எதையும் செய்யத் துணிவான். இப்படியான தருக்கவாதம் மனத்தைப் பலவீனப்படுத்த, அவனுடன் சினேகித வேசம் போடுவதுதான் தற்போதைய சாதுரியம் என்று மாஸ்ரர் தீர்மானித்தார். அவர் கேட்டார்.

'தம்பி கொழும்பில் இருந்தா வருகிறீர்?'

'ஓம்'

"றயிலிலா?" இப்போது றயில் வடக்குப் பக்கம் பார்த்து வருவதில்லை என்று அவருக்குத் தெரியும். "ஓம்" என்ற ஒரே சொல்லான பதிலைத் தவிர்க்கக் கேட்ட கேள்வி இது.

"இல்லை"

மாஸ்ரர் இடைக்காட்டில் ஒரு சாவீட்டிற்குப் போய்க் கொண்டிருக்கிறார். போஸ்ற் மாஸ்ரர்(பி.எம்) சரவணபவனின் மனைவியர் இறந்து போனா. அன்று காலைதான் பத்திரிகையில் பார்த்தார். ஈமக்கிரியைகள் காலை பதினொரு மணியளவில்.

'உம், ஒரு மணி செல்லும்.' பென்சன் எடுத்தபின் அவர் இடைக்காட்டுக்குப் போகவில்லை, ஆனைக்கோட்டையில் தங்கிவிட்டார்.

'செத்தவீட்டில் பல சினேகிதரைச் சந்திக்கலாம். அவர்களின் பிள்ளைகளும் வெளிநாடுகளில் இருக்கிறார்கள். விசா, பாஸ்போட், குடியுரிமைப் பிரச்சனைகள் என்றும், வெளிநாட்டுப் பணத்தின் பெறுமதி, மக்களின் மேல் விலாசங்கள், பேரப்பிள்ளைகளின் படிப்பு- இப்படியான புளுகுகள் என்றும் ஆராயவும் அருட்டவும் அதிகம் இருந்தது.

மன்செஸ்ரரில் ஒரு நீர்வேலிப் பெட்டை இருக்கிறாள், என்ஜினியர் தமையனுடன் பத்து வருடமாக, நிரந்தர அந்தஸ்த்துடன் ஏதோ வேலையாக போனகிழமை அவளின் போட்டோவும் குறிப்பும் வந்தன போட்டோவில்

# ரண -நந்தி

அவள் பொதுநிறம், ஓவர்கோட் போட்டிருந்ததாலோ என்னவோ சற்றுக் கனமாகத் தோன்றினாள். ரேவதி நட்சத்திரம், வெளிநாட்டுச் சீவியம், அவள், நடுவிலானுக்கு, ஒமானிலிருந்து இங்கிலாந்து போவது சுலபமாம்.

நீர்வேலியில் இருந்து ஒரு ரியூசன் கொட்டிலில் இருந்து ஒரு கூட்டம் பெண் பிள்ளைகள், பூப்பு வயதினர், ஆரவாரித்து வானில் ஏறி நிற்க இடம் பிடித்தார்கள். அவர்களில் ஒருத்தி முகத்திலே செவ்வழகு செல்லமாகத் தவழ, மிதமான தேக வனப்பும் வளர்ச்சியுமாகத் தோன்றியவள், இந்தப் பையன் பக்கத்தில் அவனுடன் ஒட்டாத குறையாக மிக நெருக்கமாக நின்று, தனது கையிலிருந்த அடுக்குப் புத்தகங்கள் தனது கைப்பாரம் குறைப்பதற்காக இவனிடம் உரிமையுடன் கொடுத்தாள். எந்தவிதமான அறிமுகமும் பிணைக்காமல்- ஒரு சம்பிராதாயப் புன்சிரிப்பு? அதுகூட இல்லை.

'இவன் என்ன அண்ணனா? அத்தானா? ஓ! தலைவனோ? அக்கம் பக்க உணர்வே இல்லாது இருக்கும் முரட்டு இவனைச் சுமூகமாக ஏற்றுக்கொள்ளும் இவளும்தான் யார்? இவர்கள் இந்தப் பெண்கள் எல்லோரும் யார்? இது ஒரு புதிய குலம், ஒரே சாதி.




இப்போது சிவப்பிரகாசம் மாஸ்ரருக்கு இன்னொரு ஊகம் ஊர்ஜிதமாகிறது. பொடியன்கள் மட்டுமல்ல, பெட்டையள்கூட எங்கோ போகிறார்கள்!

கெட்டுப்போனாளவை ?

ஒரு சிறு மழை சொரிந்து ஓய்வது போல் அந்தப் பெதும்பைகள் வானிலிருந்து சலசல வென இறங்கினார்கள். இவனின் அவள்கூடப் போய்விட்டாள். அந்தத் தரிப்பில் ஒரு ஆறே மூமாதக் கர்ப்பிணி ஏறினாள். அவளைக் கண்டதும் மாஸ்ரர் பிரசவத்தையே பார்த்தவர் போல திடுக்கென மறுபக்கம் முகம் திருப்பியன்னல் ஊடாக வெளிஉலகச் செய்திகளை மதில்களில் வாசித்தார். ரியூசன் நிலைய, மினிசினிமா விளம்பரங்கள், வீரச்சாவு அஞ்சலிகள், பதுங்குகுழிகள், பயிர்ச்செய்கை, முதல் உதவிப் பயிற்சி இத்தியாதி. மாஸ்ரருக்கு சுழலும் உலகம் திசையை மாற்றியது போல், கபாலம் கிறுகிறுத்தது. மினிவானும் தெருப் பள்ளங்களில் விழுந்து குலுங்கியது.

'சே! இந்த இழிவுகளை வாசிக்காமல் எழுந்து அவளுக்கு உட்கார இடம் கொடுத்திருக்கலாம்.'

அவர் திரும்பிப் பார்த்தபோது அவன் இல்லை. அந்தக் கர்ப்பிணி இருந்தாள். அவள் மடியில் சிவப்புக் கோடுகளுடைய அவனுடைய பை இருந்தது.

'அவளின் எதிர்காலக் குழந்தைக்குக் காப்பாக வைத்திருக்கக் கொடுத்திருக்கிறானோ?' அவர் மனதினுள் ஏளனம் பெரு மூச்சாக வெளிவந்தது.

அச்சுவேலிச் சந்தியில் வான் நின்றதும், அவளிடம் தனது பையை பறித்தமாதிரி வாங்கிக் கொண்டு அவன் இறங்கிவிட்டான். அர்த்தமற்ற அவசரம். நிம்மதி, நிதானம், நியாயம் அறியாதவனாகத் தள்ளிக்கொண்டு எப்படித் தொத்தி ஏறினானோ அப்படியே குதித்து மறைந்து போனான்.

'இக்காலச் சந்ததியின் பொருத்தமானதோர் பிரதிநிதி' நிம்மதியான மனச்சிரிப்பு ஆறுதலாக மாஸ்ரர் இறங்கினார். 'என்ன அவசரம்?'

'இப்போது மணி பத்தாகிறது, இடைக்காட்டுக்கு அரைமணி நேரத்தில் நடந்து போய் விடலாம்.' பக்கத்திலிருந்த தேநீர்க்கடைக்குப் போய், ஒரு தேநீருக்கு ஓடர் கொடுத்தார். அவர் கேட்காமலேயே கடைப்பையன் வைத்த தட்டிலிருந்த வடைகளில் ஒன்றை எடுத்துக் கடித்தார்.

'பழசு' சிவப்பிரகாசம் மாஸ்ரர் பி.எம் சரவணபவன் வீட்டிற்குப் போனபோது, அந்தப் பழைய நாற்சார் வீட்டின் உள்முற்றத்தில் கிரியைகள் அப்போதுதான் தொடங்கியிருந்தன. சுற்றிவர நிறையப் பெண்களும், சில இரத்த உருத்து ஆண்களும் இருந்தனர். உள்ளே இப்போது போக மாஸ்ரருக்கு தோன்றவில்லை. அவருடன் பேசக்கூடிய சகாக்கள் வெளியே கன்வஸ் பந்தலின் கீழே தொட்டம் தொட்டமாக, வற்றிய குளத்தின் சேற்றில் கிழட்டுக் கொக்குகள் போல் வெள்ளை உடுத்து இருந்தனர். பி.எம். அவ்விடத்திற்கு வரவில்லை. ஆறுமாதங்களுக்கு முன் அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டு பேச்சும் போய்விட்டது. அவரைக் கிரியை இடத்தில் ஒரு நாற்காலியில் இருத்தி வைத்திருப்பதாகப் பேசிக்கொண்டார்கள்.

மாஸ்ரருக்கு ஏமாற்றம். நினைத்தது போல் யாருடனும் பேச முடியவில்லை. நேரம் அப்படி, மரணமும் அப்படியானது. அந்த மரணம் சமூகத்திற்கு இன்னும் ஒரு எச்சரிப்பு. அனைவர் முகத்திலும் மரணபயம் அமுத்தியது. இரண்டு நாட்களுக்கு முன் செல்வச்சந்நிதி கோவிலில், தொண்டமானாற்று ஆமிக்காம்பிலிருந்து வந்த செல்லுக்குப் பலியானவர்களில், இந்த மனையின் தாயும் ஒருத்தி. பாதி முகம், பாதி உடல், பாதி எல்லாம் கருகிவிட்டன. அதைப் பார்க்க மாஸ்ரர் விரும்பவில்லை.

எத்தகைய நிலைமையிலும் தன்னுடன் ஒத்துவரக் கூடியவர்களை மனிதன் எப்படியோ இனங்கண்டு கொள்கிறான். மாஸ்ரர் அப்படியான ஒரு சிலர் மத்தியில் போய் உட்கார்ந்தார். சிறிதுவேளை வயோதிப மௌனம் அங்கே வசதியாகச் சிந்தித்தது. அவர்களில் ஓர் ஆசிரியர், வெகுகாலத்திற்கு முன்பே மாணவர்களால் 'லூஸ்' என்று பட்டம் சூட்டப்பட்டவர், சீரியஸ்சாகச் சாற்றினார். " மனுசி ஆமி இருக்கிறது தெரிந்தும், கோயிலுக்குப் போயிருக்கப்படாது" அவர் வாய்மூடுவதற்கு முன், அதை ஒரே வார்த்தையில் ஆமோதித்தவர் சிவப்பிரகாசம்.

"பேய்த்தனம்"

........

'கோயிலுக்கு அண்மையில் இராணுவ முகாம் இருக்கலாமா?'

இப்படியான கேள்விகளைக் கேட்கப் பழக்கப்பட்டவர்களில் சிவப்பிரகாசம் மாஸ்ரர் இருந்த கூட்டத்தில் யாரும் இருக்கவில்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிரியைகள் முடிந்ததும், பெண்களின் கடைசி ஓலம் ஒலித்தது. பிரேதப் பெட்டி பெண்களின் இழுபறிக்கு இடையே மூடப் பட்டபின், சிவப்பிரகாசம் மாஸ்ரர் உள்ளே சென்று பி.எம் சரவணபவனுக்குத் தன் முகத்தைக் காட்டினார். பாடை தூக்கப்பட்டது. ஒவ்வொருவரின் செவிப்பறைகளிலே, குறுணி ஈயக்குண்டுகள் விழுந்தது போல் பறைமேளம் பயங்கரமாக ஆரவாரித்தது.

வெட்டப்பட்ட வேலியைப் பாடை தாண்டுகிறது. சிவப்பிரகாசம் அப்போதுதான் அந்தப் பையனை அவதானித்தார். மினிவானில் அவருடன் வந்த அவனை. நன்றாக சவரம் செய்யப்பட்ட அந்த முகத்தில் எண்ணெய் இல்லை. கண்ணீர், மார்பிலே பூணூல், கையிலே கொள்ளிக்குடம். அவன் பாடைக்கு முன்னால் நடந்து வந்தான், நிற்கும் போதெல்லாம் திரும்பித் திரும்பி அங்கே தாயைப் பார்க்கிறான்.

மாஸ்ரருக்கு ஓர் அபூர்வமான அதிர்ச்சி ஏற்படுகிறது. மூளையிலே மின்னல் கீற்றுக்கள் ஊடுருவுவது போல நிலைமைகள் தெளிவாகின்றன. அவர் மனதில் கேள்விகள் உருவாகின்றன.

ஏன், எதற்கு, எதனால், எப்போது?

பாடை இடைக்காட்டுப் பாடசாலையைத் தாண்டுகிறது. பல பையன்கள் மாஸ்ரரின் நினைவில் தோன்றுகிறார்கள். கண்ணயர்ந்தவன், கொட்டாவிவிட்டவன், அழுதவன், அழுக்கு உடை உடுத்தவன் இவற்றிற்கும் காரணகாரியங்கள், குடும்ப- சமூகத் தொடர்புடையனவாக, துயரும் துன்பமும் நிறைந்தவனாக தவிர்க்க முடியாதவையாக இருந்திருக்கலாமோ?

அப்பால், தூரத்திலே ஆமி செல்லடிக்கும் முழக்கம் பறை ஓசையை மூழ்கடிக்கிறது. ஊர்வலத்தின் முகங்களிலே மீண்டும் மரண பயம்.

எந்த முகாம்? வசாவிளான், வல்வெட்டி, பலாலி ஊர்கள் ஞாபகத்திற்கு வருகின்றன.

அநியாயமாக இறந்த அறிந்தவர்கள் பலர் சிவப்பிரகாசம் மாஸ்ரரின் உள்ளத்திலே நியாயம் கேட்கப் பிறந்து கொண்டிருக்கின்றார்கள். அன்பின் கலாபரமேஸ்வரன் முதல் வணக்கத்தின் வென்செஸ்லாஸ் வரை.

'நாம் அறியாதவர் யார் யாரோ?' அகாலமான வருடங்கள், மனசறியத் திரும்புகின்றன.

1956, 1958, 1971, 1977, 1981, 1983

'இனி'? சமூகத்தின் அலங்கோலங்கள் சோகக் காட்சி தருகின்றன. அனாதைகள், அகதிகள், விதவைகள், வக்கற்றவர்கள், கையும் காலும், கண்ணும் கற்பும் இழந்தவர்கள்!

செல்லோசை விட்டுவிட்டுக் கேட்டுக் கொண்டே இருக்கின்றது. மேலே கெலி ஒன்று வட்டமிடுகின்றது. தமக்கைமாருடன், படலைகளில் நின்று பிரேத ஊர்வலத்தைப் பார்க்க வந்த சிறுவர்கள் பருந்தைக் கண்ட குஞ்சுகளைப் பதுங்கவில்லை. பூவரசந் தடிகளைத் துப்பாக்கிகள் என்ற பாவனையில் உயர்த்தி கெலிக்குக் குறிபார்கிறார்கள். அவைகள் அவனுக்குத் தெரியாமலில்லை.

அவன் இப்போது பாடையைத் திரும்பிப் பார்க்கவில்லை. அவனைப் பெற்ற அந்த ஒருத்தி, ஒருமணி நேரத்தில் முழுமையாகக் கரியாகி விடுவாள்.

அவன் கீழே மண்ணைப் பார்த்து மெல்ல நடந்து வருகின்றான். தீர்க்கமான பார்வை அது. அங்கேயும் ஒரு தாய்- அவனது தாயகம்.

'அவனுடைய இந்தப் பார்வையிலும் அர்த்தம் இருப்பது போல் தெரிகிறது.'

# சாவுக்குப்பின்னும் சாதனைகள்

என்ன இது?

என்ன இது? ஏன் இப்படி கலர் கலரா சுத்துது.

நான்தான் அந்தக் கலர் போல இருக்கு.

என்னைத்தான் இழுத்து இழுத்துச் சுத்து கினம்.

சீச்சீ.. அந்தக் கலர் சுத்திற மாதிரி என்னையும் சுத்துகினம்.

ஐயோ.. ஒரு சின்ன இடைவெளிக்கிள்ளால என்னைக் கொண்டுபோகினம்.

நான் செருகுப் படப்போறன்.

அட... வெளியில வந்திட்டன்.

எங்கேயோ உயரத்தில இருந்து கீழ கீழ கொண்டு போகினம். ஏன் இவ்வளவு உயரத்திற்குப் போன்னான் நான்?

ஏன் ஆட்கள் எல்லாரும் பஞ்சால செய்த உருவங்கள் மாதிரித் தெரியினம். ரீ.வியில் பார்த்த பொம்மையள் மாதிரி இருக்கினம்.

ஆனால் நான் இப்ப ஒரு இடத்தில் படுத்திருக்கிறன். கலர் கலரா சுத்தின ஒன்றையும் காணேல்ல. எல்லாரும் பெரிய சத்தமாய் கதைக்கினம்.

நான் பக்கத்திலதானே இருக்கிறன், ஏன் இப்படிக் கத்துகினம்?

"அமுதமலர்! நாக்கை நீட்டுங்கோ" என்று கேட்கினம். என்னால நீட்டேலாமல் இருக்கு. ஆனால் நீட்டீட்டன் போல.

சரி, மயக்கம் தெளியிது யாரோ சொல்லுகினம். கொஞ்சம் கொஞ்சமா எல்லாரையும் வடிவாத் தெரியுது.

எனக்கு வாயைத் துடைக்க வேணும் போல இருக்கு. ஆனால் கை தூக்குப்படுவது தெரியேல்லே, பாரமா இருக்கு. ஆனா துடைச்சிட்டன். ஏன் இப்படி இருக்கிறன். துப்பரவா ஞாபகம் வரமாட்டன் என்கிறது. யோசிக்க யோசிக்க கொஞ்சம் கொஞ்சமா ஞாபகம் வருது.

நெடுங்கேணிப் பகுதியில நாங்கள் கொஞ்ச ஆமியைச் சுற்றி வளைச்சுச் சண்டை பிடிச்சனாங்கள்.

அவன் எங்களை உடைச்சுக் கொண்டு ஓடி விடவேணும் என்றதுக்காக ஒரு பக்கமா எல்லாரும் சேர்ந்து அடிச்சுக் கொண்டு ஓடி வந்தவங்கள். எங்கள் எல்லோருக்கும் கிட்டக்கிட்ட ரவுண்ஸ் வந்தது. பிறகு என்ன நடந்தது..?

ஆ...ஐயோ! துர்க்காக்காவைக் கூப்பிடுங்கோ. அகிலாக்காவுக்கும் மற்ற இரண்டு பேருக்கும் ரவுண்ஸ் கொழுவி விழுந்திட்டினம். அவை நிண்ட பக்கமாத்தான் ஆமி ஓடிவந்தவன். அப்ப அவை மூன்று பேரும் கிளிப்பைக் கழட்டி குண்டை தங்கட வயிற்றுக்குள் வைத்துக்கொண்டு குப்பியையும் வாயுக்கை வைச்சுக் கொண்டுதான் சுடத் தொடங்கினவை. அவைக்குக் கிட்ட அவங்களைப் போகவிடாமல் நானும் அடிச்சுக் கொண்டு நிண்டனான். அந்த நேரம்தான் என்னில ஏதோ வந்து பட்டு அறைஞ்சு விழுத்தின மாதிரி இருந்தது.

அப்ப ... அப்ப

ஐயோ! அவையின்ரை வயித்துக்குள்ள குண்டு வைச்சுப் படுத்தது ஒருத்தருக்கும் தெரியாது. ஆமிக்காரன் அவையின்ர பொடியை இழுத்திருந்தா கட்டாயம் செத்திருப்பான். ஆனால் எங்கட ஆட்கள் பொடி எடுக்கப் போயிருந்தா...

பார்த்துத்தான் எடுக்க வேணும். கவனமாக எடுக்க வேணும். கோவையாக எல்லாமே நினைவு வந்தாலும் சொற்கள் தெளிவின்றி வாய் குழறுவது புரியுது.

"என்னவோ ஆள் சொல்லுது. குண்டு, கிளிப் வயிற்றுக்குள்ள கவனம் என்றேதோ சொல்லுது. தெளிஞ்சாத்தான் விபரம் கேட்கலாம்." என்று யாரோ சொல்லுவது தெளிவாகக் கேட்குது.

ஆனாலும் என்னால கதைக்க முடியேல்ல, தூக்கமாய் இருட்டிக் கொண்டு வருது.

"அமுதமலர் ஏதாவது சொன்னவவா? காயப் பட்டவுடன் இவவுக்குக் கொஞ்சம் தள்ளி நின்ற மூன்று பேர் குண்டைக் கழட்டி தங்களுக்குள் வைச்சுக் கொண்டு குப்பியையும் வாயுக்க வைச்சுக் கொண்டு படுத்திட்டினம். அவன் அவையைத் தாண்டி ஓடும்போது 'பொடி'களைக் கொண்டு போக நினைச்சு இழுத்திருக்கின்றான். அந்த நேரம் குண்டு வெடிச்சு இரண்டு பேர் செத்து கொஞ்சப் பேர் காயப்பட்டிருக்கிறாங்கள். அதால மற்றப் 'பொடி'களைத் தொடாமல் ஓடிவிட்டான்."

சட்டென்று விளிப்புவரக் கேட்டது கனவில்லை, மயக்கத்திலும் இல்லை என்று தெரிந்தது. கதை சொல்லிக் கொண்டு பக்கத்தில் நின்ற பொறுப்பாளரைப் பார்க்கிறன். அக்கா! நான் அதைச் சொல்ல வேணும் என்று நினைச்சனான். ஆனால் சொல்ல முடியேல்ல. மயக்கத்தில வாய் கதைக்கமாட்டன் என்றிட்டுது. செத்தாப் பிறகும் எதிரியைச் சாகடிக்கவேணும் என்று நினைச்சு மூன்று பேரும் குண்டு கழட்டி வைச்சுக் கொண்டு படுத்ததைக் கண்டனான்.

***(ஓயாத அலைகள் மூன்றின்போது பெண் போராளிகளின் துணிவும் தியாகமும் எத்தகையது என்பதை உணர்த்த இந்த உண்மைச் சம்பவம் ஒரு சிறு உதாரணம்.)***



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கல்லறையில் இருந்து கண்மணி ஒன்று

ஓ.... யாரது
என் கல்லறைக்கு
மலர் தூவி அஞ்சலிப்பது
யார்...?

என் அம்மாவா...?
இருக்க முடியாது
நான் கதறியழ
கயவர் கரங்களில் என் தெய்வம்
அலங்கோலப்பட்டதல்லவா
அடங்கிப் போனது.
என் அம்மா இல்லை இது...!

அப்போ..யார்?
யார் மலர் தூவி அஞ்சலிப்பது.


என் அப்பாவா..?
இருக்க முடியாது.
பயங்கரவாதி என்ற பட்டம் கொடுத்து
என் பத்தாம் வயதிலேயே... அவரைப்
படுகொலை செய்து விட்டனரே
என் அப்பா இல்லை இது..!

அப்போ..யார்?
யார் மலர் தூவி அஞ்சலிப்பது.

கூடு கலைந்து
ஓடி வந்த போது
என் கரம் நழுவி தொலைந்து விட்ட
ஆசைத் தங்கச்சியா....
இல்லை... அவளுக்கு என் முகம் தெரியாது..
அவள்.. எங்கே.. அதுவும் தெரியாது..

அப்போ யார்?
யார் மலர் தூவி அஞ்சலிப்பது
பக்கத்துக்கு கல்லறையில்
படுத்திருந்தவன் சொன்னான்
ஏய்.. நண்பா
எந்த மக்களுக்காக
உன் உயிரை ஈந்தாயோ..
அந்தக் கரங்கள் தான்
உன்னை அஞ்சலிக்கின்றது.
நாங்கள் அநாதைகளல்ல
அமைதியாகத் தூங்கு.
ஓ...
என் மக்களா..!
இறைவா இன்னுமொரு பிறவிதா
இந்த மக்களுக்காக
போராடி விதையாக!

–காண்டீபன்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உங்கள் உயிரிலும் உதிரத்திலும் கலந்தது
எங்கள் சுதந்திரமும் நிம்மதியும் எல்லாமும்.
நீங்கள், முகமறியாத உறவுகளுக்காகவே
உங்களை வருத்திக் கொண்டீர்கள்.
தாயவள் விடுதலைக்காகவே சாவைச் சுமந்தீர்கள்.
அதனால், உயிர் பிரிந்த உடலங்களாய்
அவள் கருவறைக்குள் மீண்டும் புகுந்து கொண்டீர்.
எங்களினம் உள்ளவரை உமக்குச் சாவு இல்லை
பரந்த வெளிமீது நாளை சுதந்திரக் காற்று வரும்
நெஞ்சு நிறையச் சுவாசித்து நிம்மதியாய் உறங்கிடுவீர்.

ந.ஹேமராஜ்
லண்டன்-பிரித்தானியா

# செப்டெம்பர் மாதத்திற்கான...



நீர் காண்பது புதைக்கப்பட்ட நிலம் அல்ல
அது விதைக்கப்பட்ட நிலம்– இங்கே உறங்குவது
தமிழ் மண்ணுக்கு உரமான மாவீரர்கள்
மரியாதைக்குரிய மைந்தர்கள் இவர்கள்
தோல்விகளால் இவர்கள் துாக்குமாட்டி மடியவில்லை
தோல்வியே கூடாது தமிழுக்கு என்று சொல்லி
மரணத்தை நோக்கி வீறுநடை போட்டவர்கள்
தேசத்தின் பிரியத்தால் சாவைக் காதலித்தவர்கள்
இங்கே துயில் கொள்கிறார்கள்– இவர்கள்
இதயாலயத்தில் வைத்து பூசிக்கப்பட வேண்டியவர்கள்
ஆம் இவர்களை பூசிக்க புத்தாடை உடுத்தி புனிதமாக
பாதணிகளை விலத்தி ஒரு நிமிடம் மௌனியுங்கள்.

கி.சு.உமாசுதன்
நூறனபேக்- ஜேர்மனி

இளமைக் கல்வியை மறந்து
இல் வாழ்வின் சுகபோகம் துறந்து
தாய் மண்ணைக் காப்பதற்காய்
தன்னுயிரைத் தந்து விட்ட
எம் ஈழ மாவீரர்களுக்கு,
நாங்கள் கட்டிய பொற்கோவில்கள்.
நீங்கள் புதைக்கப்படவில்லை
விதைக்கப்பட்டுள்ளீர்கள்– உங்களை
சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.
மீண்டும் இம் மண்ணிலே பிறப்பதற்காக.

வ.துஸ்யந்
அரோ- சுவிஸ்

கல்லறைகள் கண்களுக்கு
கற்களாகப் புலப்படவில்லை.
கரும் பாறைகளைப் போல்
நெஞ்சை நிமிர்த்தி
எமது எல்லைகளை விட்டு
அகலாத எதிரிகளை
வீழ்த்தி ஈழ
சரித்திரத்தில் அழியாப்
புகழுக்கு வித்திட்ட
மாவீரர்களின் வித்து!

மகா
பாரீஸ்- பிரான்ஸ்

நிழலாடும் மனித வாழ்வின் நிஜம் தேடிச் சென்றவரே!
களமாடும் கடமைதனை கடைசிவரை உளமாரச் சுமந்தவரே!
கண்மூடிய கடைசி வேளையிலும் இலட்சியக்கருவை ஏந்திய
கவிதைகளே!
கண்மூடிக் கல்லறையிலும் நிம்மதியாய் உறங்கிடாத
காவியங்களே!
விண்ணோடு நீர் விதைத்துச் சென்ற விடியல் விளையும்
நேரம்– உம்
கண்ணோடு கலந்திட்ட தமிழ்த்தாயின் காயங்கள் ஆறும்.
பொன்னான எதிர்காலம் புலியாலே எம் மண்ணில் உருவாகும்.
அந்நாளில் உம் கண்கள் நிம்மதியாய் நித்திரையைத் தழுவும்.

செல்வி. சா. சிவகௌரி
ஐடே, நோர்வே.

கல்லுக்கும் இதயம் இருந்தால்
கசிந்து உருகட்டும்
சொல்லுக்குள் அகப்படாது
உங்கள் தற்கொடை வாழ்வு
போராட்டத்திற்கு வெளியே நிற்கும் வெளியானையும்
நிறுத்தி விழி நனைந்து நெக்குருகும் நிகழ்ச்சி
வெல்வோம் உங்கள் இலட்சியத்தை
வீழ்த்துவோம் எதிரியின் மமதையை
வல்லமை தாருங்கள் இருள் சூழ்ந்த
தமிழீழம் மீண்டும் பயனுற வாழ்வதற்கு.

கழுத்தினில் நஞ்சையும்
நினைவினில் விடுதலையையும் சுமந்த
அர்ப்பணப் பூக்களே, கார்த்திகை தீபங்களே
சிரம் தாழ்த்தி கரம் குவித்து அஞ்சலிக்கின்றோம்.

திரு.திருமதி பிரான்சிஸ் சகாயம்
யூலிச், ஜேர்மனி

ஐயிரண்டு மாதங்கள் கருவறையில் இருந்தீர்கள்
பின்பு அன்னை மண்ணில் தவழ்ந்தீர்கள்.
தளிர் நடை பயின்று தமிழ்த் தாய் மொழி
வாய் மொழிந்தீர்கள்.
இளமைக்கால இனிமைகள் தான் சுமந்தீர்கள்?!
இல்லை.
தாய்மண்ணின் மானம் காக்கப் புறப்பட்டீர்கள்.
இளம் சிறுத்தையாக உருவெடுத்தீர்கள்.
தமிழ் மண்ணைக் காத்து விடிவு தந்து விட்டு
நீவீர் உறங்குகின்றீர். நாளை மலரப் போகும்
தனித் தமிழீழத்திற்கு உமது கல்லறைகள்
வரலாறு ஆக்கப்படும்.

*இசைஞானவதனி ஜெயராஜா*
*எல்ஸ்டோவ்- ஜேர்மனி*

நிம்மதியாக உறங்கிய
கருவறைகள்
வெடியோசை கேட்டு
தலை நிமிர்ந்து பார்க்கின்றன.
மீண்டும் தானுறங்கும் மண்
மீட்க எழப்போகின்றன.

வே.பீ இன்பன்
பிரான்ஸ்

அமையும் தமிழீழத்தின்
அத்திவாரம்....
"அண்ணனின் பாசறையில்
அரிந்தெடுத்த வைரங்கள்
அமைந்தன தமிழீழத்தின்
அத்திவாரக் கற்களாய்."

செ.ஆனந்தன்
பெரடேசியா- டென்மார்க்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# வார்த்தைகள்”

www.tamilarangam.net



அமைதியாய் துாங்கும் மாவீரர்களே
எம் தமிழ் ஈழத்திற்காக
உயிரையே கொடுத்துவிட்டீர்கள்
என்ற பெருமையில் துாங்குகின்றீர்களா?
உங்கள் உயிர்களின் விலை
என்ன தெரியுமா?
நாளை மலரும் தமிழ் ஈழம்தான்
அது எமது கையில் கிடைக்கும் போது
முதலில் உங்கள் கல்லறையில்தான்
சமர்ப்பிக்க வேண்டும்.
அதுவரை அமைதியாக துயில்
கொள்ளுங்கள் மாவீரர்களே.

திருமதி. மணியம் வசந்தி
கிறினி- பிரான்ஸ்

கல்லறைக்குள் அடங்கி விட்டீரோ?
கண்ணீருக்குள் நிறைந்து விட்டீரோ?
சொல்லற்கரியதுங்களது ஈகமே.
தோன்றிடும் விரைவில் தமிழீழமே.
வல்லமை தாரீர் உம் வழி நடக்க,
வலிமை சேர்ப்போம் சாவையும் கடக்க,
நல்விதையானீர் நாட்டு விடுதலைக்கு.
நனவாகும் கனவு நிச்சயம் நாளைக்கு.

திருமதி. அ.றிச்சாட்
சின்டேல்பிங்கின்- ஜேர்மனி

சிந்தனை சிறகடித்த உள்ளங்கள்
விழி இமையாய் தமிழ் இனத்தைக் காத்தவர்.
விடியலை கணப் பொழுதாய் எட்டிட-
விரைந்தவர்
மானிட வாழ்வியலில் உச்சத்துக்கு உரியவர்
ஈழத் திருநாட்டின் விடிவெள்ளி
காலமெல்லாம் போற்றுதற்குரியவர்
கல்லறையிலே விடிந்து வரும்...
தாயக நினைவலையுடன் பூரிக்கும் வீரர்.

தரணி
வில்நெவ்- பிரான்ஸ்

அஞ்சிப் பணிந்து அடிமையாய்ச் சாகாமல்
நெஞ்சுரத் தோடு நீதிக்காய்ப் போராடி
துஞ்சிய எங்கள் சோதரர் துயிலும்
பஞ்சின்மென் பாசறை பார்க்கிறோம் அந்தோ.

இறந்தாரில்லை அவர்கள் இனியும்
பிறந்தால் தமிழன் தனிநாட்டில் தான் பிறப்பர்.
மறந்தும் பிறன்கேடு சூழாது தமிழர்க்காய்த்
துறந்தார் உடலினைத்தான் துாசவர்க்கு
இவ்வுடல்கள்.

சின்னையா சிவஞானசுந்தரம்
பேர்லின். ஜேர்மனி.

வெஞ்சமர்கள் ஆடி வெற்றிகளை ஈட்டி
அவ்வெற்றிக்கு வித்தான எம்- கண்மணிகள்
துயில்கொள்ளும் பொற்கோவில்கள் இவை
பண்டைய வரலாற்றின் வழிவந்த செந்தமிழரின்
கருவறைகள் இவை- தேசத்தை மீட்க
விதையாகிப் போனவரின் மனை இது- இவைகள்
மீண்டும் விழுது விடும்- நாளை விடியப்
போகும் எம் சுதந்திர பூமியில் எழுந்து நிற்கும்.

மத்தொனி சிவலிங்கம்.
லண்டன்- பிரித்தானியா.

கவிதைச் சோலை

காலத்தால் அழியாத கல்லறைகள்
நீங்கள் காண்பது எகிப்திய பிரமிட்டுக்கள் அல்ல
அதைவிட மேலான உயர்ந்த உத்தமர்கள் துயிலும்
அமைதியான இல்லங்களில்
அமைந்திருக்கு நினைவுச் சின்னங்கள்
மண்ணுக்காய் நாளை வரும் இளம் முல்லைகளுக்காய்
தம் இன்னுயிரை விதைத்து குருதிச் சேற்றால் தாய்மண்ணை
ஈரமாக்கிய ஈழத்தாயின் மைந்தர்கள் துயிலும் இல்லமிது
இவை கல்லறைகள் அல்ல காலம் காட்டும் வரலாற்றுத் தடம்
எத்தனையோ வீரத்தியாகங்கள் இந்த உலகில் நிகழ்ந்தாலும்
அவை அத்தனையும் எம் புலிவீரரின் தியாகத்திற்கு ஈடாகாது
இது மண்மீட்பு வேள்வியில் கனலாகிப் போன
உத்தமர்களின் காணிக்கைக் கல்லறைகள்.

நயினை பாரதி
பேர்ண்- சுவிஸ்

அண்ணன் வளர்த்தெடுத்த
அருமைக் குஞ்சுகள்
தங்கள் கடமை முடித்து
அமைதியாய் உறங்குகின்றன.
கல்லறைகள் இவர்களின்
ஞாபகப் பூங்கா ஆனால்
இவர்களின் வீரம்
இன்னும் உறங்கவில்லை
தமிழீழம் கிடைக்கும்
வரைக்கும் உறங்காத வீரர்கள்

ரவித்தா சிவகுமாரன்
குன்சன்கவுறவுசன்- ஜேர்மனி

சுற்றும் பூமியில் தமிழீழத்தின்
சூரியப் புதல்வர்கள் உறங்குமிடம்!
சூறாவளியாலும் பெரும் புயல்காற்றாலும்...
அசைக்க முடியாதவர்கள்! இவர்கள்....!
எம் இனவிடுதலைத் தீயை கொழுந்து விட்டு
எரிய வைத்தவர்கள்! இரத்தக்கடலில் நீந்தி
எம்தேசமிட்டவர்கள்!
உறங்கிக்கிடந்த தமிழீழத்தின் உயரிய
இலட்சியத்தை
உலகறிய வைத்த உன்னத உத்தமர்கள்
உறங்குமிடம்!!

க.சிவா
சூரிச்- சுவிஸ்

காணும் கண்களே,
கூறும் வார்த்தை
என்ன?
அஞ்சல் ஊடாக
எரிமலைக்கு...




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# “எல்லாத்துக்கு தமிழீழம்தான்

கையில் சுருட்டுடன் அப்பு மரத்தில் சாய்ந்திருந்தார். அவரது கவலை தோய்ந்த விழிகள் வானத்தை வெறித்திருந்தன. முகம் சோர்ந்து சுருக்கங்கள் நிறைந்திருந்தது. அவரது கவலையை உணர்ந்தாற்போல செவிவளைந்தானும் நீட்டிய கால்களில் முகத்தைப் புதைத்தபடி கண்களை மூடியிருந்தது.

நவமும் நண்பர்களும் வழக்கம் போலவே ஆரவாரித்தபடி வந்தனர். ஆனால் மரத்தடியில் நிலவிய அமைதியையும் அப்புவின் கவலை தோய்ந்த முகத்தையும் அவதானித்ததும் ஆரவாரத்தின் இடத்தை மௌனம் கைப்பற்றிக் கொண்டது.

அந்த அமைதியைக் குலைப்பது போல ஒரு சிறுமி ஓடிவந்தாள். அவள் கன்னங்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. ஓடி வந்த வேகத்தில் அப்புவை உலுக்கிச் சொன்னாள். “அப்பு! எங்கடை கரன் அண்ணாவையும் பண்டாரவளையிலை சாக்கொண்டு போட்டாங்களாம்.”

அப்பு திடுக்குற்று நிமிர்ந்தார். அவருடைய சுருங்கிய விழிகளில் கண்ணீர் திரண்டது. நவம் “பாழ் படுவாங்கள்” என்று கூறியபடி தன் விழிகளில் துளிர்த்த நீரைச் சுண்டி எறிந்தான். அவனது நண்பர்களின் விழிகளில் கோபம் குடியேறியது.

“நாலு பெட்டையளுக்கு ஒரு பெடியன்... அநியாயப்படுவாற்றை கையிலை சிக்கி..” அப்பு தோளில் கிடந்த துண்டை எடுத்து வாயைப் பொத்திக் கொண்டார். சகோதரனைப் பறிகொடுத்த அந்தச் சிறுமியும் சோர்ந்த முகத்தோடு அருகே உட்கார்ந்து கொண்டாள். எண்ணெய் காணாத அவளுடைய பரட்டைத் தலையும் உள்ளடங்கிய கண்களும் அவர்களை வேதனைப்படுத்தின.

“இயக்கத்திற்குப் போன எங்கடை பக்கத்து வீட்டு ரூபன் இவனையும் கேட்டவன். நீயும் வாவனடா இயக்கத்துக்குப் போவம் எண்டு. அதுக்கு கரன் எனக்கு நாலு பொம்பிளைச் சகோதரங்கள் இருக்கு. அதுகளை விட்டிட்டு வரேலாது எண்டிட்டான். வெளிநாட்டுக்குப் போய் உழைச்சாத்தான் சகோதரங்களைக் கரையேத்தலாம் எண்டு குந்தியிருந்த நிலத்தையும் தாயின்ரை தாலிக் கொடியையும் விற்று பிரான்ஸ்சிற்குப் போறன் எண்டு கொழும்புக்குப் போனவன்தான். அவன் பிடிபட்டு ஆறுமாசத்துக்குப் பிறகுதான் அவன்ரை வீட்டுக்காரருக்குத் தெரியும். அவன் பண்டாரவளை முகாமில் இருக்கிறான் எண்டு கடிதம் எழுதியிருந்தானாம்”

“ஏன் பிடிச்சவங்களாம்?” நவத்தின் நண்பன் குணம் கேட்டான். “உனக்கு விசரடா.. தமிழனைப் பிடிக்க அவங்களுக்கு ஒரு காரணம் வேணுமே? ஆமிக்காரங்கள் பிடிச்சு இவனட்டை இருந்த காசையும் பறிச்சுப் போட்டு கொழும்பிலை குண்டு வைக்க வந்த கரும்புலியெனக் கதைகட்டி உள்ளுக்கை அடைச்சுப் போட்டாங்களாம்” நவம் கோபத்துடன் கூறினான்.

“தாய் போய் என்ரை பிள்ளையை விடுங்கோ எண்டு அழுது மண்டாடியிருக்கு. அதுக்கு அவங்கள் அஞ்சு லட்சம் காசு தந்தாத்தான் விடுவம் எண்டு சொல்லியிருக்கிறாங்கள். மனுசி பாவம் அவ்வளவு காசிற்கு ஆரட்டை போறது? இருந்த நிலத்தையும் நகையையும் வித்துத்தானே மகன் வெளிநாடு போகக் காசு குடுத்தது... என்ன செய்யிறதெண்டு தெரியாமல் ஆராரிட்டையோ எல்லாம் கையேந்திப் பாத்தது... ஆர் அவ்வளவு காசு குடுப்பினம்.. கடைசியா ஏலாமக் கையைவிட்டிட்டுது. பாவம்! இப்ப பார்த்தா.. இந்த நிலைமை! கொண்டு திண்டிட்டாங்கள்” குமுறினான் ரவி.

அப்பு தன் நீண்ட மௌனத்தைக் கலைத்து வாயைத் திறந்தார்.

“இவங்களிட்டை ஏதோ பெடியள் வந்து சரணடைஞ்சதாகவும், அவையை வைச்சுக் காப்பாத்தி புனர்வாழ்வு குடுக்க வேணுமெண்டும் அதுக்குக் காசு பெருவாரியாத் தேவை எண்டு வெளிநாடுகளிட்டைச் சொல்லி கடன் வாங்கிறதுக்காக இவங்கள் செய்த வேலை இது. சும்மா வயித்துப் பிழைப்புக்காக கொழும்புக்கு வாற பொடியளையும், வெளிநாட்டுக்குப் போக எண்டு கொழும்பிலை வந்து தங்கியிருக்கிற பொடியள் பெட்டையளையும் பிடிச்சு புனர்வாழ்வு எண்ட பெயரிலை அமைச்சு வைச்சிருக்கிற வதை முகாம்களிலை அடைச்சு வைச்சுக் கொடுமைப்படுத்தினாங்கள். அதுகின்ரை உச்சக் கட்டந்தான் இந்தப் படுகொலையள்! இப்பிடிப் பிடிச்சு வைச்சிருக்கிற பெடிபெட்டையளின்ரை சகோதரங்கள் ஆராவது வெளிநாட்டிலை இருந்தா அல்லது பிடிபட்டதுகள் காசுக்காரரா இருந்தா அவங்கள் கேக்கிற காசைக் குடுத்து வெளியிலை எடுத்திடலாம். ஆனா, ஏழை எளியதுகள் என்ன செய்யுங்கள்? சாப்பாட்டிற்கே திண்டாடுகிற அந்தச் சனம் லட்சத்தைக் கண்ணாலையும் கண்டிருக்காதுகள். அதுகளின்ரை பிள்ளையள் பாவம்! வதைபட்டு வதைபட்டு கடைசியா உயிரையும் விட்டுதுகள்”

“கொழும்புக்கு வாற எல்லாப் பொடியளும் கரும்புலியெண்டா இவங்களெல்லாம் இருக்கிற இடங்களிலை இப்ப சாம்பல் மேடுதான் இருந்திருக்கும். சொல்லிறதெல்லாம் பச்சைப்பொய்... மலையகத்திலை பிச்சை எடுத்துக் கொண்டிருந்த 12 வயதுப் பொடியனையும் புலி எண்டு பிடிச்சுக் கொண்டு போய் அந்த முகாமிலை வைச்சிருந்தவங்களாம். இப்ப அந்தப் பொடியனும் மரணக் காயத்தோடை ஆஸ்பத்திரியிலை இருக்கிறானாம்” நவம் ஆற்றாமையோடு கூறினான்.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ம் தீர்வு
# ரா !”

“இப்படி பிச்சை எடுக்கிறதுகளையும், ஏழைகளையும் பிடிச்சுக் கொண்டு வந்து ரீவியிலை காட்டி ‘இஞ்சபாருங்கோ .. இப்படித்தான் சின்னப்பிள்ளையளை புலிகள் யுத்தத்தில் ஈடுபடுத்துகினம்’ எண்டு வெளிநாடுகளுக்குக் காட்டிப் பிரச்சாரம் செய்யிறவை. இப்ப கிட்டடியிலை அமைச்சர் கதிர்காமர் கனடாவுக்குப் போன இடத்திலை, புலியள் வயசு குறைஞ்ச பிள்ளையளை யுத்தத்திலை ஈடுபடுத்துகினம். அவையளிட்டையிருந்து தப்பி வந்தவைக்கு புனர்வாழ்வு குடுக்க வேணும். அதுக்கு காசு தாங்கோ எண்டு நிதியுதவி கேட்டவர். பார் என்னென்ன காரணமெல்லாஞ் சொல்லிக் கையேந்திறாங்களெண்டு” அப்பு ஒரு கோபச் சிரிப்புடன் சொன்னார்.

“இப்ப வெளிநாடுகளுக்கு எல்லாம் விளங்கியிருக்கும். அது புனர்வாழ்வு முகாமா? வதை முகாமா? எண்டு” குமரன் கூறினான்.

“அந்த வதைமுகாமிலை இருந்த அப்பாவியளைக் கொன்றது மட்டுமில்லாமை அதுக்கு எதிர்ப்புத் தெரிவிச்சு மக்கள் துக்கம் அனுட்டிக்கவும் விடுறாங்களே... சிரிப்பைத்தான் பிடுங்கினாங்கள் எண்டு பார்த்தா அழுறதுக்குக்கூட சுதந்திரம் இல்லாமப் போச்சு இந்த நாட்டிலை. மலையகத்திலை துக்கம் அனுஸ்டித்த சனங்களுக்கும் ஆமிக்கும் பிரச்சனை ஏற்பட்டுது. அதைச் சாட்டா வைச்சு தமிழ்ச் சனத்தின்ரை 20 கடையளை எரிச்சுச் சாம்பலாக்கிப் போட்டாங்களாம். அங்கை என்ன சித்திரவதையோ.. அந்தச் சுவர்களே அறியும்” நவத்தின் குரல் கம்மியது.

அப்பு கொஞ்சம் உரக்கவே சொன்னார்.

“நிப்பாட்டு கதையை! உந்தக் கதவடைப்பு சத்தியாக்கிரகம், அகிம்சை எண்டது எல்லாம் உவங்களிட்டை எடுபடாது எண்டு தெரிஞ்சுதானே எங்கடை தலைவர் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கினவர். அகிம்சை எண்டா கிலோ என்ன விலை எண்டு கேக்கிற சிங்களத்திட்டைப் போய் மயிலே மயிலே இறகு போடு எண்டு கேட்க முடியுமோ. அவங்களுக்கு அகிம்சைப் பாசை விளங்காது. ஆயுதம் கதைக்கிறது மட்டுந்தான் விளங்கும்.”

“படுகொலையள் ஒரு பக்கம் எங்களின்ரை பாரம்பரியப் பிரதேசங்களின்ரை பிரதிநிதித்துவங்கள் கண்ணுக்கு முன்னாலை பறிபோகிற கொடுமைகள் மறுபக்கம் எண்டு எல்லா இடியும் எங்களுக்குத்தான்” நவத்தின் நண்பன் குணம் சலித்துக் கொண்டான்.

“பொறு பொறு பொடியா! சலிக்காதை. இதைப்போல எத்தனை துக்கங்களை, சவால்களை, படுகொலைகளை இந்தக் கண்ணாலை கண்டிருக்கிறம். இந்தக் காதுகளாலை கேட்டிருக்கிறம். கடைசி வெற்றி எங்களுக்குத்தான். இப்ப திருகோணமலையிலை தமிழர் பிரதிநிதித்துவம் இல்லாமற் போச்சே எண்டு நொந்து போகாதை. இதே திருகோணமலையிலை புலிக்கொடி பறக்க தமிழன் ஆட்சி நடக்கும் தம்பி”

நவமும் நண்பர்களும் அந்தக் கனவு விழிகளில் மிதக்க சில கணங்கள் மௌனமாக இருந்தனர். செவிவளைந்தான் அந்த திடீர் மௌனத்தின் காரணத்தை அறிவதற்கோ என்னவோ விழிகளை உயர்த்திப் பார்த்தது. அப்பு தொடர்ந்தார்.

“மலையகத்தில இருந்து தெரிவான சந்திரசேகரனை, பிந்துநுவேவப் படுகொலைகளைக் கண்டிச்சு ஹர்த்தால், கதவடைப்புச் செய்ததற்காக பிடிச்சு அடைச்சுப் போட்டு, விட்டிட்டாங்கள். வன்னி மாவட்டத்திலிருந்து தெரிவான அடைக்கலநாதன், பிசாசில் நல்ல பிசாசு எண்டு சொல்லுற மாதிரி துரோகக் கும்பலுக்குள் நல்ல துரோகியா இருப்பம் எண்டு ஒண்டிரண்டு அறிக்கையள் ஒரு மாதிரியா விட்டார். அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களிச்சார். அடுத்தநாள் அந்தக் கும்பலின்ரை ஆயுதங்கள் களையப்பட்டன. அதோடை அடைக்கலநாதன் அடைக்கலமானார். இந்தளவும் இந்த அரசாங்கம் பதவியேற்ற ஒரு மாதங்களினுள்ளே நடந்தேறிய விடயங்கள். அப்படித் தொடர்ந்து பாராளுமன்றத்திற்குப் போகவேணுமென்றால் சிங்களம் சொல்லிறதைக் கைகட்டிச் செய்யிற சேவகனாக இருக்க வேண்டும்.”

“அதாவது ஈ.பி.டி.பி மாதிரி இருக்க வேணும்” என்று இடைமறித்தான் நவம்.

“சரியாய்ச் சொன்னாய். 1948லை இருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவாகிப் போனவை என்னத்தைச் செய்தினம்? ஏதாவது ஒண்டு பிரயோசனமாகத் தமிழ்ச் சனத்திற்கு வாங்கிக் கொடுத்தாங்களா? அல்லது இந்தச் சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்கத்தான் ஏதாவது செய்ய முடிஞ்சுதா? சும்மா போய் கதிரைக்குப் பாரமா இருந்திட்டு வந்ததுதான் மிச்சம். இந்தச் சந்தர்ப்பத்திலை ஒண்டு சொல்லவேணும். 1975லை தந்தை செல்வா பாராளுமன்றத்திலை சொன்னதைச் சுருக்கமாகச் சொன்னா ‘எங்களின்ரை அனுபவங்களின்ரை அடிப்படையிலை இருந்து சொல்லுறன். சிங்கள அரசியலமைப்பிலிருந்து தமிழர் எந்த உரிமையையும் பெறமுடியாது. இதாலை தமிழர்கள் இனி தங்கடை சுயநிர்ணய உரிமையைக் குறித்த பேச்சுவார்த்தை ஒண்டையே சிறீலங்காவோடை நடத்த முடியும்’ எண்டு சொன்னார் அதுதான் சரி. சும்மா நானும் பாராளுமன்றம் போய் வாறன் எண்டு வேலைக்குப் போன மாதிரிப் போய் வந்தாச் சரியே” அப்பு மூச்சிரைக்க நிறுத்தினார்.

“இதே காலப்பகுதியிலைதானே எங்கடை தேசியத் தலைவர் ஆயுதப் போராட்டம் மூலந்தான் எங்களுக்கெண்டொரு நாட்டை உரிமையளை வெண்டெடுக்க ஏலும் எண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தை உருவாக்கினார்” நவம் நினைவுபடுத்தினான்.

“ஓமடாம்பி, பதினையாயிரத்திற்கு மேலை போராளியள் வீரச்சாவு அடைஞ்சாப்பிறகும், அறுபதாயிரத்திற்கும் மேலை சனங்கள் சிங்களத்தாலை கொண்டு குவிக்கப்பட்டாப் பிறகும், எத்தனையோ லட்சக்கணக்கான சனங்கள் வேரறுக்கப்பட்டு வேற்று நாடுகளிலை அலையிற நிலைமை வந்தாப் பிறகும்.... இத்தினைக்கும் பிறகும் இந்தப் பாராளுமன்றத்திற்குப் போய் வெட்டிக்கதையள் கதைச்சுக் கொண்டிருக்கிறதிலை என்ன நன்மை?” அப்பு ஆவேசத்தோடு கேட்டார்.

“தமிழர்க்கு ஒரு நன்மையுமில்லை. சந்திரிகா போடுற எலும்புத் துண்டைக் கவ்விற கூட்டத்துக்கு மட்டுந்தான் நன்மை” குமரன் கேலியாகக் கூறினான்.

“கொஞ்சப் பேர் இப்பிடிக் கதிரைக்கு ஆசைப்பட்டு அலையிறபடியாத்தான், தமிழர் பிரதேசங்களை நாங்கள் சனநாயகத்தைக் கடைப்பிடிக்கிறோம். மேலும் தமிழர்களுக்கு அமைச்சர் பதவிகள். அதுதான் எலும்புத்துண்டுகள் கொடுத்திருக்கிறம் எண்டு சிங்கள அரசாங்கம் தண்டோரா போட, அதைக் கண்டு சில வெளிநாடுகள் அட! அவங்கள் தமிழரையும், சிங்களவரையும் ஒண்டாத்தானே பாக்கிறாங்கள் எண்டு நினைக்கிறதோடை நில்லாம, இப்படியிருக்க இவங்களுக்கேனாம் தனிநாடு எண்டும் கேக்க வைக்கிற நிலைமை வந்திருக்கு. அவங்கடை அந்த நிலைப்பாட்டிற்கு இந்தக் கதிரை அடிபாடும் ஒரு முக்கியமான காரணம்” அப்புவின் குரல் சூடு பறந்தது.

“அப்படியெண்டா அப்பு நாங்களெல்லாரும் சேர்ந்து தேர்தலை பகிஸ்கரிச்சா என்ன?” அதுவரை மௌனமாக இருந்த ரவி கேட்டான்.

“நாங்கள் எல்லோரும்... ஒரு தமிழன் விடாம பகிஸ்கரிக்க வேணும். தமிழன் எண்டேக்குள்ள இந்தக் கதிரைக்கு அலையிற தமிழர்களும் அடக்கம். அப்பிடிப் பகிஸ்கரிக்கிறதின் மூலந்தான் இவங்கடை சிங்கள தேசத்தின்ரை சனநாயகத்தின்ரை சாயம் வெளுக்கும். அப்பதான் உலகமும் அடடா! இவங்கடை ஆயுதப் போராட்டமும் நியாய



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மானதுதான் போல கிடக்கு எண்டு கண்ணைத் திறந்து பாக்கும். அப்பிடிச் செய்யாட்டி எங்கடை போராளியள் ஒரு பக்கம் கட்டியெழுப்ப இவங்கள் மற்றப் பக்கத்தாலை இடிக்க முயற்சி செய்யிற நிலைமைதான் தொடரும். அதாலை எல்லாரும் தேர்தலைப் பகிஸ்கரிக்க வேணும்"

"பகிஸ்கரிக்கிறதுக்கு என்ன? சும்மா கதிரைக்குப் பாரமாத்தானே இருக்கிறாங்கள்?" நவம் கோபத்தோடு கேட்டான்.

"ஏன்ரா நவம், இப்ப நோர்வே விசேட தூதுக்குழு தமிழ்ப் பிரதேசத்தைப் பிரதிநிதித்துவம் செய்வதாகச் சொல்லும் இந்தப் பாராளுமன்ற ஒட்டுண்ணிகளையா சந்திச்சவை? தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனைத்தானே சந்திச்சிருக்கிறார்கள். எதற்கும் நாம் ஒட்டுண்ணிகளாக இல்லாது பெலமாக இருக்கோணுமடா."

"முடிஞ்ச முடிவு ஒண்டுதான். அதாவது ஆயுதப் போராட்டத்தின் மூலம் எங்கடை தேசத்தை நாங்கள் வென்றெடுக்கிறதுதான் அந்த முடிவு" அப்பு உறுதியோடு சொன்னார்.

"பாராளுமன்றத்திலை போயிருந்து பிராக்குப் பார்த்தவைக்கு ஒண்டு விளங்கேல்லை. அவையள் செய்யாததை ஓயாத அலைகள் மூலம் புலிகள் செய்திருக்கினம். அதாவது 'வெலிஓயா' எண்டு அவங்களாலை பெயர்மாற்றம் செய்யப்பட்ட எங்கடை 'மணலாறு' எண்ட இதயபூமியின்ரை பெரும்பகுதியை மீட்டெடுத்திருக்கினம் எங்கடை ஆக்கள்" குமரனின் குரலில் பெருமிதம் தொனித்தது.

"நல்லாச் சொன்னாயடாம்பி! எங்கடை தாய்நிலத்தின்ரை இழந்த பிரதேசங்களை நிரந்தரமா முற்று முழுதா மீட்கிறதெண்டா, எங்கடை பிள்ளையளை இந்தக் காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளிலிருந்து காப்பாத்திறதெண்டா, எங்கடை பெண் பிரசுகளை அவங்கள் மானபங்கப்படுத்திறதை நிப்பாட்ட வேணுமெண்டா, கனக்க ஏன் வெளிநாட்டிலை வாழுற எங்கடை சனங்கள் நெஞ்சை நிமித்தி எங்களுக்கெண்டொரு நாடு இருக்கெண்டு சொல்லவேணுமெண்டா அது எங்கடை தேசியத் தலைவரை எல்லாரும் பின்தொடர வேணும். எல்லாத்துக்கும் ஒரே தீர்வு தமிழீழம் ஒண்டுதான்ராப்பா. கிழக்கு வெளிச்சு விடிய நாங்களெல்லாம் தம்பிக்கு கைகொடுக்க வேணும். அப்பிடிக் கைகுடுத்தா ஓயாத அலைகள் ஓங்கியடிக்கும்" என்று கூறிக் கொண்டு அப்பு எழுந்தார். நம்பிக்கை மிளிரும் விழிகளுடன் நண்பர்களும் அந்தச் சிறுமியும் எழுந்திருந்தனர். அப்பு சால்வையை உதறித் தோளில் போட்டுக் கொண்டு நடையைக் கட்டினார்.

செவிவளைந்தான் புது உற்சாகத்தோடு எழுந்து அவர் பின்னே விரைந்தது.

# உன்னத விடுதலைப் பணி தொடர எனது நல்லாசிகள்

**புலிகளின் குரல் வானோசையின் பத்தாமாண்டு நிறைவையொட்டி தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தியிலிருந்து.**

சிங்களப் பேரினவாத அரசானது, எமக்கு எதிராக ஓர் ஆயுதப் போரை மட்டுமன்றி ஒரு கருத்துப் போரையும் நடத்தி வருகின்றது. உண்மைகளை மூடிமறைத்து, பொய்யையும், புரட்டையும் நுட்பமாகப் புனைந்து, சாணாக்கியத் திறமையோடு நடத்தப்படும் இந்தக் கருத்துப்போரின் முக்கிய குறிக்கோள் எமது விடுதலைப் போராட்டத்திற்கு களங்கம் கற்பிப்பதாகும்.

ஒரு இனத்தின் தேச விடுதலைப் போர் என்ற பரிமாணத்தில் எமது விடுதலைப் போராட்டம் முழு உலகின் கவனத்தையும் ஈர்த்து வருகின்றது. அத்தோடு போரியற் கலையிலும் எமது இயக்கம் பெற்று வரும் அபார சாதனைகள் சர்வதேசத்தை திகைப்பிலும் ஆழ்த்தி வருகின்றது.

இப்படியாக எமது இயக்கமும் எமது விடுதலைப் போராட்டமும் அனைத்துலக ரீதியாக அடைந்து வரும் பெயரையும், புகழையும் சகிக்க முடியாத சிங்களப் பேரினவாதம், எமக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் ஒரு விசமத்தனமான பிரச்சாரப் போரை நடத்தி வருகின்றது. வீரம் செறிந்த எமது விடுதலைப் படையணிகளை குழந்தை இராணுவம் எனக் கொச்சைப் படுத்தியும், நுட்பம் மிக்க எமது போர் நடவடிக்கைகளை பயங்கரவாதம் எனச் சித்தரித்தும் எமது இயக்கத்திற்கு இழிவு தேட முற்படுகிறான் எதிரி. அனைத்துலக ரீதியாக எமக்கு அணிதிரண்டு வரும் ஆதரவையும், அனுதாபத்தையும், தடுத்து நிறுத்தி உலக அரங்கினை எமக்கு எதிராகத் திருப்பிவிடுவதே எதிரியின் நோக்கம். சிங்களத்தின் பொய்யான பரப்புரைகளை விசாரணையின்றி விழுங்கிக்கொண்ட ஒரு சில நாடுகள் எமது இயக்கத்திற்கு பயங்கரவாதமுத்திரை குத்தி தடை செய்தும் உள்ளன. இது எமக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் தருகின்றது.



பொய்களையே ஆயுதமாகக் கொண்டு நடத்தப்படும் சிங்களத்தின் விசமத்தனமான கருத்துப்போரை, முறியடிப்பதே இன்று நாம் எதிர்கொண்டு நிற்கும் முக்கிய சவாலாகும். எமது இயக்கத்தின் முக்கிய மக்கள் தொடர்புச் சாதனமான புலிகளின் குரல் வானோசையின் பணி பெரிதும் பாராட்டத்தக்கது.

உண்மையின் குரலாக ஒலித்து, ஒடுக்கப்படும் எமது மக்களின் விடிவிற்காகக் குரல் எழுப்பி, எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்குமாக புலிகளின் குரல் ஆற்றி வரும் பணி அற்புதமானது. போர்ச்சூழலில் மிகவும் நெருக்கடியான நிலையில் எத்தனையோ இடையூறுகளிற்கும் சவால்களிற்கும் முகம் கொடுத்து, கடந்த பத்து ஆண்டு காலமாக புலிகளின் குரல் மகத்தான சேவையாற்றி வந்துள்ளது.

இவ்வானோசையின் மாபெரும் வெற்றிக்கு உறுதுணையாக நின்று சேவையாற்றி வரும் நிர்வாகப் பொறுப்பாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் எனது மனமுவந்த பாராட்டுக்கள். புலிகளின் குரல் வானோசையின் உன்னதமான விடுதலைப் பணி செம்மையாகத் தொடர எனது நல்லாசிகள்.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழ் இளைஞன் சுட்டுக் கொலை

கடந்த 18.11.2000 அன்று மட்டக்களப்பு சித்தாண்டியை அடுத்துள்ள பாலையடித்தேனா கடற்கரைப் பகுதியில் வைத்து சந்திரிகா அரசின் படைகளால் 17 வயதேயான அப்பாவித் தமிழ் மாணவன் ஒருவன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான். கிண்ணையடிவாசியான நடராசா செந்தூரான் கறுவாக்கேணி மகாவித்தியாலயத்தில் கல்விகற்றுவிட்டு வேலைதேடிக்கொண்டிருந்தவர். சம்பவதினம் வேலை விடயமாக சித்தாண்டியிலுள்ள உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் சென்ற சமயமே இத்துர்ப்பாக்கிய நிகழ்வு இடம்பெற்றுள்ளது. ஆனால் இவரது மரணம் குறித்து சிறீலங்கா இராணுவம் நாங்கள் மறித்தோம் இவர் நிற்கவில்லை அதனால் சுட்டோம் என்று சாட்டுக் கூறியுள்ளது.

## சிறீலங்காக் கடற்படை சூட்டதில் நான்கு தமிழ் மீனவர்கள் பலி

திருமலை மாவட்டத்தில் சிறீலங்காக் கடற்படையினர் சூட்டதில் நான்கு தமிழ் மீனவர்கள் பலியாகினர். இச்சம்பவம் 22.11.2000 அன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. திருமலை நகரிலிருந்து வடக்கே 10 கிலோமீற்றர் தொலைவில் நிலாவெளிப் பிரதேசத்தின் கோபாலபுரப் பகுதியின் கரைச்சிக் கிராமத்திலேயே இப்பயங்கரம் நடந்தேறியுள்ளது.

கரைச்சிப் பகுதியிலுள்ள ஏரியில் மீன்பிடிக்கச் சென்றிருந்த தமிழர்கள் மீது பதுங்கியிருந்த கடற்படையினர் சூட்டதில் நான்கு பொதுமக்கள் அந்த இடத்திலேயே பலியாகினர். விஜயராஜா ஜெயகாந்தன், ஜீவானந்தன் பிரசாந்தன், ஜேம்ஸ் ஜெயப்பிரதாப், சின்னத்தம்பி விஜயகுமார் ஆகிய நான்கு பொதுமக்களே சுட்டுக்கொல்லப்பட்டோராவர். இச்சம்பவத்தின்போது இரு சிறுவர்களும் படுகாயமடைந்தனர்.

## பிரித்தானிய அமைச்சருக்கு எதிராக அணிதிரளும் சிங்களப் பேரினவாதம்

நூற்றுக்கணக்கான சிங்களப் பேரினவாதிகள் கொழும்பு பிரிட்டிஸ் கவுன்சில் கட்டிடத் தொகுதிக்கு முன்பாக 22.11.2000 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு சிறீலங்காவிற்கு வருகை தந்திருக்கும் பிரித்தானிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் பீட்டர் கெய்னிற்கு



எதிரான கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். அயர்லாந்துப் பிரச்சனையில் பிரித்தானிய அரசும் அதிகாரப் பகிர்வும் எனும் தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிக் கொண்டிருந்த வேளையிலையே இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது. இவ் ஆர்ப்பாட்டப் பேரணியானது திலக் கருணாரட்ண தலைமையிலான சிகலஉறுமய கட்சியினால் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. இதன்போது பிரித்தானிய அரசிற்கெதிரான கோசங்களோடு, தமிழர்களுக்கு எதிரான பேரினவாதக் கோசங்களும் எழுப்பப்பட்டன. வெளிநாட்டு அரசாங்கங்கள் சிறீலங்காவின் விவகாரங்களில் தலையிடக் கூடாது எனவும் ஆர்ப்பாட்டம் நடத்திய சிங்களப் பேரினவாதிகள் கோசமிட்டனர்.

## சிறீலங்கா இராணுவத்தின் எறிகணை வீழ்ந்து வெடித்ததில் இரு பாடசாலைச் சிறுவர்கள் பலி

மூதூர் இறங்குதுறைப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தின் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் இரு பாடசாலைச் சிறுவர்கள் பலியானார்கள், மேலும் 10 தமிழர்கள் படுகாயமடைந்தனர். 23.11.2000 அன்று காலை 7.40 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

## யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஊர்வலம்

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா மற்றும், சிறீலங்கா அரசின் தமிழரழிப்பு நடவடிக்கைகளுக்கு துணைபுரிந்து தற்போதைய பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தில் அமைச்சராகியுள்ள டக்கிளஸ் தேவானந்தா ஆகியோருக்கு எதிர்ப்புத் தெரிவித்து, 2000ற்கும் அதிகமான யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் 22.11.2000 அன்று மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தியுள்ளனர். யாழ் பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்தும், பண்டாரவளையில் தமிழ் இளைஞர்கள் சிங்கள வெறியரால் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்தும் கோசங்கள் ஆர்ப்பாட்டத்தின்போது எழுப்பப்பட்டன. சந்திரிகாவினதும், டக்கிளஸ் தேவானந்தாவினதும் உருவப்படங்கள் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களால் யாழ் செயலக முன்றலில் வைத்து தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. கள்ளவாக்குகளாலும், தேர்தல் மோசடி புரிந்தும் பாராளுமன்றம் சென்றிருப்போர் எப்படி தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக முடியும் என்று கேள்வியெழுப்பிய மாணவர்கள், ஈ.பி.டி.பி தமிழ் மண்ணில் இருந்து வெளியேற வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

## தென்தமிழீழத்தில் தொடரும் வெள்ளப்பெருக்கு

தென்தமிழீழத்தில் தொடரும் மழை காரணமாக பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 80,000 குடும்பங்கள் தொடர்புகளேதுமற்ற நிலையில் உள்ளனர். தற்பொழுது மழை ஓய்ந்துள்ள போதிலும் பாதைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்நிலையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மூன்று நாட்களுக்கு போதுமான உலர்உணவுகளே சிங்கள அரசால் வழங்கப்பட்டுள்ளது. போதிய நிவாரணங்கள் எதுவும் வழங்கப்படுவதில்லை. அரச படைகளின் கட்டுப்பாட்டிலில்லாத மட்டக்களப்பு மாவட்டத்தின் பகுதிகளுக்கு மீட்புப் பணிகளில் ஈடுபடுவதற்கு சிறீலங்கா அரச படைத்தரப்பு முற்றாகத் தடை விதித்துள்ளது.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## ஒக்டோபர்

### 02.10.00

திருகோணமலை மூதூர் பகுதியில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் பொ.ஐ.மு வேட்பாளரும் முன்னாள் திருகோணமலை மாவட்ட புலனாய்வு அதிகாரியுமான மொகமட் லத்தீப் பைத்துல்லா கொல்லப்பட்டார். இச்சம்பவத்தில் சிறீலங்காப் பாதுகாப்புப் படைத்தரப்பைச் சேர்ந்தவர்கள் உட்பட 22 பேர் கொல்லப்பட்டனர். 50 வரையானோர் காயமடைந்தனர்.

### 04.10.00

திருகோணமலை பூமரத்தடிச்சேனையில் சிங்கள ஊர்காவல் படைகளால் பெண்கள் உட்பட 7 தமிழ்ப் பொதுமக்கள் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டனர்.

### 06.10.00

தொடரும் ஓயாத அலைகள் நடவடிக்கையில் நாகர்கோவில் பகுதி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மூன்று அதிகாரிகள் உட்பட 32 படையினர் காயமடைந்தனர்.

### 07.10.00

நாகர்கோவில் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களில் 12 இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். நாற்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

### 10.10.00

பதினோராவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் வன்முறை வெறியாட்டம் தேர்தல் மோசடிகளுடன் நடந்து முடிந்திருக் கின்றது. இத்தேர்தலின் போது மாத்திரம் சுமார் 1800ற்கும் அதிகமான தேர்தல் வன்முறைகள் என்றுமில்லாதவாறு நடந்தேறியுள்ளன.

---

உலகின் முதற் பெண் பிரதமரும், கல்வியில் தரப்படுத்தல் உட்பட பல தமிழரழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தவருமான சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையார் தமது 84வது வயதில் காலமானார்.

### 11.10.00

முஸ்லீம் காங்கிரஸ், தமிழ் விரோதக் குழுவான ஈபிடிபி ஆகியவற்றின் ஆதரவோடு சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.முன்னணி ஆட்சி அமைத்துக் கொண்டது.

### 18.10.00

வவுனியா கணேசபுரப் பகுதியில் அமைந்திருந்த சிறீலங்கா இராணுவத்தின் மினிமுகாம் ஒன்று விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. இதன்போது 4 இராணுவத்தினர் கொல் லப்பட்டனர். 13 பேர் கடுங்காயங்களுக்கு உள்ளாயினர்.

### 19.10..00



யாழ் குடாநாட்டின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து சுயாதீனமாகச் செயற்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன்(38 வயது) யாழ் நகரிலுள்ள அவரது வீட்டில் வைத்து ஈ.பி.டி.பி கூலிக்குழுவினரால் படுகொலை செய்யப்பட்டார்.

### 23.10.00



திருகோணமலை துறைமுகப் பகுதி யில் விடுதலைப் புலிகள் மேற் கொண்ட துணிகர அதிரடித் தாக்கு தலில் சிறீலங்காக் கடற்படையின் அதிவேக ரோந்துப் படகான டோறாப் பீரங்கிப் படகு, துருப்புக்காவி என்பன கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன. துறைமுகப் பகுதியில் தரித்து நின்ற இரு பயணிகள் கப்பல்களும் பலத்த சேதமடைந்தன. இதவேளை மாபிள்பீச் கடற்கரைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் படை யணிகள் மீது தாக்குதல் நடத்தவென வந்த எம்.ஐ 24 ரக உலங்குவானூர்தி சுட்டுவீழ்த்தப்பட்டது.

### 25.10.00



பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் பண்டா ரவளை பிந்துநுவேவ தடைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அப்பாவித் தமிழ் இளைஞர்கள் மீது சிறீலங்கா அரசின் ஒத்துழைப்போடு 1500ற்கும் மேற்பட்ட காடையர்கள் மேற்கொண்ட இனப்படு கொலை நோக்கிலான தாக்குதலில் தடைமுகாமும் எரிக்கப்பட்டு 31 இளைஞர்கள் கொல்லப்பட்டனர். 30ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் காயமடைந்தனர். இதில் 16ற்கு மேற்பட்ட இளை ஞர்கள் கடுங்காயங்களுக்குள்ளாகினர்.

### 19.10.00

நாகர்கோவில் இராணுவத் தளத்தின் மீது ஓயாத அலைகள்-4 படையணிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத்தின் இறுக்கமான முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகள் மற்றும் இரா ணுவ வேலிகள் தகர்த்தழிக்கப்பட்டன. இதன்போது நூறிற்கும் மேற்பட்ட சிங்களப் படைகள் கொல்லப்பட்டனர். முன்னூறிற் கும் மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

---

நாகர்கோவில் படைத்தள இராணுவத்தின் உதவிக்கென விரைந்து வந்த எம்.ஐ 24 ரக உலங்குவானூர்திகள் மீது விடுத லைப் புலிகளின் விமான எதிர்ப்பணிகள் தொடுத்த தாக்கு தலில் எம்.ஐ 24 ரக உலங்குவானூர்தி ஒன்று சுட்டு வீழ்த் தப்பட்டது. இன்னுமொரு எம்.ஐ 24 ரக உலங்குவானூர்தி பலத்த சேதங்களுக்குள்ளானது.

---

கொழும்பு மாநகராட்சி மன்றத்திற்கு வெளியே இளைஞர் ஒருவ ரை சிறீலங்காப் பொலிசார் பரிசோதனை செய்ய முற்பட்ட வேளையில், அவ்விளைஞர் தம்மிடமிருந்த குண்டை வெடிக்க வைத்ததில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட இருவர் கொல் லப்பட்டனர். சிறீலங்கா படைத்தரப்பார் உட்பட 20 பேர் காயமுற்றனர்.

### 19.10.00

மலையகத்தில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட மையைக் கண்டித்து அமைதி வழியில் போராட்டம் நடத்திய மலையக மக்கள் மீது சிங்களக் குண்டர்கள் தாக்குதல் மேற் கொண்டனர். இவர்களுக்கு ஆதரவாக சிங்களப் பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் நான்கு தமிழ் இளைஞர்கள் உயிரிழந்தனர். மேலும் பல தமிழர்கள் படுகாயமடைந்தனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அன்பான வாசகர்களே! "உணர்வுப்பாலமாக" "உறவுப்பாலமாக" வெளிவரும் எரிமலை இதழ்

# எரிமலை

உலகமெலாம் பரவி வாழும் நம்மவர் எல்லோரையும் சென்று எட்டவேண்டும் என்பது எமது ஆவல்.
உங்களை வந்தடையும் எரிமலை உங்கள் உறவுகளை, நண்பர்களை சென்றடைகின்றதா? இல்லையெனில்..
அது உங்கள் பணி அவர்களையும் எரிமலை வாசகர்கள் ஆக்கிடுங்கள்!

## மாதம் ஒருமுறை எரிமலை நாடிவர நாடுங்கள்

**சுவிற்சர்லாந்து**
T.E.C.C
Postfach 2274
8031 Zurich
Tel:(41) 127 33 407

**இங்கிலாந்து**
U.T.O
202 Long Lane
London SE1 4QB
Tel:(44) 207 403 45 54

**ஜேர்மனி**
T.C.C
Postfach 101613
46016 Oberhausen
Tel:(49) 208 205 991 03

**பிரான்ஸ்**
T.C.C
341 Rue Des Pyrenees
75020 Paris
Tel:(33) 1 43 58 11 42

**இத்தாலி**
T.C.C
Via Paolo Balsamo -11
90100 Palermo
Tel:(39) 091 61 62 804

**நெதர்லாந்து**
T.C.C
P.O.Box 18600
2502 EP Den Haag
Tel:(31) 70 346 1963

**டென்மார்க்**
L.T.T.E
P.O.Box 47
7400 Herning
Tel:(45) 97 21 76 49

**நோர்வே**
T.C.C
P.O.Box 1699,Vika
0110 Oslo
Tel:(47) 22 35 09 80

**சுவிடன்**
T.C.C
Glomminge Grand-25
3rd Floor,
16362 Spanga

**கனடா**
W.T.M
64 Eaton Ave, Toronto
Ontario M4J 2Z5
Tel:(1) 416 46 15 991

**அவுஸ்திரேலியா**
T.C.C
P.O.Box 375
Preston
Victoria 3072
Tel:(61) 03 95 47 83 00

**அமெரிக்கா**
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica
New York 11432
Tel:(1) 718 657 94 63

எரிமலை இதழ் சார்ந்த தொடர்புகளுக்கும், உங்கள் நாடுகளில் தொடர்பு முகவரிகள் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ERIMALAI
C/O T.C.C -France
341 Rue Des Pyrenees
75020 Paris
FRANCE.

Fax: (33) 1 43 58 11 91
Email: erimalai@freesurf.fr

வாசகர்களே! எழுத்தாளர்களே! உங்கள் மேலான கருத்துக்களை, ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை எரிமலையை ஊக்கப்படுத்தும். அதன் தரத்தை மேலும் உயர்த்தும். இது உங்களின் எரிமலை.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

